ASIRVATHAM
ஆசீர்வாதம்

MAY 2012

Rs.50/=

தேவையறிந்து போஷிப்பார்

வரையறையற்ற மன்னிப்பு

மீட்பின் ஊரணி!

புனித சிலுவை தினம்

இங்கிலாந்தின் வெஸ்ட்மினிஸ்டர் பேராலயம்

இரண்டாய்ப் பிரிந்த ஆற்று வெள்ளம்

பிறருக்குக் கொடுப்பதும் ஆண்டவனுக்கே!

தம்முடலை சிங்கத்திற்கு இரையாக்கிய இக்னேஷியஸ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையகத்தின் தனித்துவக்குரல்

சூரிய காந்தி

Sooriyakanthi

இ-பேப்பர் வடிவில்

www.sooriyakanthi.lk

Contact: +94-11-5738055

Powered by Virakesari Online

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வாதம்

இயேசுவை நேசியுங்கள்!

மனித குலத்தின் துன்பங்கள், சோகங்கள், பாவங்கள் ஆகிய எல்லாவற்றையும் தன் தோளிலே சிலுவையின் வடிவாய் சுமந்த இயேசு பிரான் கருணையின் பிறப்பிடமாய் இருப்பவர். எனவே தான் அவர் பொறுமையின் மடியில் கருணையின் வடிவாய் என் றென்றும் இருந்து நம்மை ஆசீர்வதிக்கின்றார்.

இயேசுவினும் ஓர் உற்ற துணை நமக்கு இப்பூமியில் யாரும் இல்லை என்பதை இயேசுவை விசுவசிக்கின்ற எல்லோரும் எப்போதும் மனதில் வைத்தல் வேண்டும். ஆண்டவர் மேல் நாம் கொண்டுள்ள நம்பிக்கை, நம் வாழ்வின் ஒரு பகுதியாக மட்டும் இருந்தால் போதுமானதல்ல, கடவுள் நம்பிக்கையே நம் வாழ்வின் மையமாக அமைதல் வேண்டும்.

இயேசுவை உங்கள் வாழ்வின் ஜீவ ஒளியாய், நண்பராய், உறவுகளின் மொத்தக் கூட்டாக நீங்கள் ஆக்கிக் கொண்டீர்களா னால், வெற்றியும் இனிமையும் உங்கள் வாழ்வில் வந்து நிரந்தர மாய் ஒட்டிக்கொள்ளும்.

மகிழ்ச்சிக்கான முக்கிய காரணமாக இயேசு சுட்டிக்காட்டியுள் ளது என்னவெனில், ''ஆன்மீக விஷயங்களில் ஆர்வப்பசியோடு இருக்கிறவர்கள் சந்தோஷமானவர்கள்'' என்பதைத்தான். ஆன்மீக ஆர்வப்பசி என்பது கடவுள் மேல் நாம் வைத்திருக்கும் தீர்க்கமான விசுவாசத்தையே குறிக்கின்றது.

எனவே இயேசுவை நண்பராய் நேசியுங்கள்.

- ஆசிரியர்

Publisher :
Express Newspapers (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14.
Srilanka
Tel: +94-115-322700 (30 Lines)
Fax: +94-112-439987
website: www.virakesari.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் நிமித்தமாக அள்ளிக் கொடுங்கள் 14

பொய்... பொய்யைத் தவிர வேறில்லை 50

தம்முடலை சிங்கத்திற்கு இரையாக்கிய இக்னேஷியஸ் 56

குடும்பம் - ஓர் உளவியல் பார்வை 34

அல்லேலூயா துதி மகிமை 16

பிடிவாத பையன் 9

கடன்பட்டா கிறிஸ்மஸ் 26

பிறருக்கு கொடுப்பதும் ஆண்டவனுக்கே! 37

இறை எனும் அற்புத சக்தி 20

வரையறை அற்ற மன்னிப்பு 40

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
noolaham.org | aavanaham.org



கிறிஸ்துவின் கல்லறை

ஜெருசலேம் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு

கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்லறையை ஜெருசலேம் அகழ்வாராய்ச்சியாளர்கள் முழுமையாக ஆய்வு செய்ததில், இது இயேசுகிறிஸ்துவின் உடல் வைக்கப்பட்ட இடமாக இருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நவீன அடுக்குமாடி வளாகத்தின் அடியில் அமைந்திருக்கும் இந்தக் கல்லறை, கி.பி.70ஆம் ஆண்டுக்கு முந்தையதாகக் கருதப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் ஆரம்பகாலச் சீடர்கள் இதை அமைத்திருக்கலாம் என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்லறையில் இருக்கும் சுண்ணாம்புக் கல்லால் ஆன பெட்டியில் 'புனித ஜெகோவா விழித்தெழு...' என்று கிரேக்க மொழியில் குறிப்பிடப்பட்டிருப்பதை ரிமோட் கன்ட்ரோல் கெமரா உதவியுடன் ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இதேபோன்ற மற்றொரு பெட்டியில் பெரிய மீனின் வாயில் மனிதன் சிக்கியிருப்பதைப் போன்ற உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஜோனா என்கிற தேவதூதரின் கதையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஜோனாவை விழுங்கிய பெரிய மீன் அல்லது திமிங்கலம், பிறகு அவரை விட்டுவிட்டதாக பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. மீனின் உருவத்தைக் கணினியின் உதவியுடன் பெரிதாக்கிப் பார்த்தபோது, அது ஜோனாவின் கதையைப் பிரதிபலிப்பதாக இருப்பது தெரிய வந்தது.

கல்லறைப் பெட்டிகளில் செதுக்கப்பட்டிருக்கும் வாசகம், மீனின் உருவம் ஆகியவை 'உயிர்த்தெழுதல்' என்கின்ற கிறிஸ்தவ நம்பிக்கையைக் காட்டும் வகையில் அமைந்திருப்பதாகக் கருதப்படுகிறது.

இதுகுறித்து அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டவரும், வடக்கு கரோலினா பல்கலைகழகப் பேராசிரியருமான ஜேம்ஸ் தபோர் கூறுகையில், 'யூதர்களின் முதலாம் நூற்றாண்டுக் கல்லறையில் உயிர்த்தெழுவது பற்றிய குறிப்பும், ஜோனாவின் கதையும் இருப்பதாக யாரும் கூறினால் அது சாத்தியமேயில்லை என்று நான் இதுவரை கூறி வந்தேன்' என்றார்.

முதலாம் நூற்றாண்டுக் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பற்றிய தகவலை இணையத் தளத்தில்' பரிசுத்த வேதாகமத்தில் விளக்கமும்' என்கிற தலைப்பில் அகழ்வாராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

இப்போது ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடும் இந்தக் கல்லறை 1981ஆம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வத்திக்கான் செய்திகள்

மெக்சிக்கோ விஜயம் குறித்து திருத்தந்தை விளக்கம்

''மெக்சிக்கோவுக்கு வந்திருப்பதில் எனக்குப் பெரு மகிழ்ச்சி. மெக்சிக்கோவும் பெரும்பாலான இலத்தீன் அமெரிக்க நாடுகளும் அண்மை ஆண்டுகளாக தாங்கள் சுதந்திரம் பெற்றதன் 200ஆவது ஆண்டைக் கொண்டாடி வருகின்றன. பல்வேறு நன்றித் திருவழிபாடுகளும் இடம்பெற்றன. பற்றுறுதி, நம்பிக்கை, அன்பு ஆகியவற்றின் திருப்பயணியாக வந்துள்ளேன்'' என்று மெக்சிக்கோ நாட்டுக்கான முதல் உரையில் கூறினார்.

குவானாஜுவாட்டோ பன்னாட்டு விமான நிலையத்தில் இடம்பெற்ற சிவப்புக் கம்பள வரவேற்பின்போது ஆற்றிய உரையில் இவ்வாறு கூறிய திருத்தந்தை, ''இயேசு கிறிஸ்துவை விசுவசிப்பவர்களை, அவரில் உறுதிப்படுத்தி ஊக்கப்படுத்த விரும்புகிறேன். மதிப்பும் அமைதியும் கலந்த ஒருங்கிணைந்த நல்வாழ்வுக்கு உதவும் நோக்கத்தில், மெக்சிக்கோ கத்தோலிக்கர்கள் வேத போதக மறைப்பணியாளர்களாகச் செயல்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனின் ஒப்பிடப்பட முடியாத மற்றும் இதனைப் புறக்கணிக்க எவருக்கும் உரிமையில்லாத மாண்பிலிருந்தும் இந்த ஒருங்கிணைந்த வாழ்வு பிறக்கின்றது. இந்த மாண்பு, மத சுதந்திரத்திற்குரிய அடிப் படை உரிமையில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும். நல்லதோர் உலகை அமைப்பதற்குத் தங்களைச் செயல்ரீதியாக அர்ப்பணிப்பதற்கு, மெக்சிக்கோ மற்றும் இலத்தீன் அமெரிக்க மக்கள் தங்களது நம்பிக்கையை இறைவனில் வைக்க வேண்டுமென, நம்பிக்கையின் திருப்பயணியாக வந்துள்ள நான் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

மேலும், தேவையில் இருப்போர், குறிப்பாக, அனைத்து வகையான வன்முறைகளாலும் பழைய, புதிய பகைமைகளாலும் வெறுப்புக்களாலும் துன்புறுவோருக்காகச் சிறப்பாகச் செபித்த திருத்தந்தை, விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்ற மெக்சிக்கோவில், தானும் அப் பண்பை உணர்வதாகத் தெரிவித்தார். அதேசமயம், இந்நாட்டில் எவரும் வரவேற்கப்படாமல் இருப்பதாக உணரக்கூடாது. இந்த மாபெரும் நாட்டிற்கு வரவேண்டுமென்ற எனது நீண்டகால ஆவலை நிறைவேற்றிய இறைவனுக்கு நன்றி. தங்களது தாயகத்தைவிட்டுத் தொலைவில் வாழ்வோரும், இந்நாடு நல்லிணக்கத்திலும் உண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையான ஒருங்கிணைந்த வளர்ச்சியிலும் வளர்வதைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையில் ஆர்வம் இழக்கக் கூடாது. இந்நாட்டு மக்கள் தாங்கள் பெற்ற விசுவாசத்திற்கு எப்போதும் உண்மையுள்ளவர்களாக வாழ அன்னை மரியிடம் செபித்து இம்முதல் உரையை நிறைவு செய்தார்.

★★★★★★★★★★★★★★★★

மணிலாவில் உலக திருச்சபைகளின் மாநாடு

போட்டிகள், பிரிவுகள் பெருகியுள்ள உலகில் கிறிஸ்துவை மையமாக்கி எவ்வாறு ஒன்றிணைந்து உழைக்க முடியும் என்பதைத் தேடவே கிறிஸ்தவ சபைகள் கூடி வந்துள்ளன என்று மணிலாவின் பேராயர் லூயிஸ் அன்டோனியோ டேகிள் கூறினார்.

கடந்த மாதம் பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவில் உலகத் திருச்சபைகளின் அவை ஏற்பாடு செய்துள்ள ஒரு மாநாட்டில் கலந்து கொண்ட 400க்கும் அதிகமான உறுப்பினர்களிடம் பேசிய மணிலா பேராயர் டேகிள் இவ்வாறு கூறினார்.

மார்ச் 27ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த மாநாட்டின் முடிவில் நற்செய்தி பரப்புப் பணியில் உலகக் கிறிஸ்தவ சபைகள் எதிர்கொள்ளும் சவால்கள் தீர ஆய்வு செய்யப்பட்டன என்றும் எதிர்காலத்திற்குத் தேவையான முடிவுகள் எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகத் திருச்சபைகளின் அவை என்ற இந்த அமைப்பில் 349 கிறிஸ்தவ சபைகள் அங்கம் வகிக்கின்றன. உலகெங்கும் பரவியுள்ள 56 கோடி கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக இந்த அமைப்பு உழைத்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★

திருப்பீடக் கலாசாரக் கழகம்

- ஆபிரிக்க நாட்டுத் தூதர் சந்திப்பு

திருப்பீடத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாட்டுத் தூதர்களுடன் கடந்த மாதம் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது திருப்பீடக் கலாச்சாரக் கழகம்.

பன்னாட்டுத் தூதர்களுடன் திருப்பீடக் கலாசாரக் கழகம் மேற்கொண்ட இரண்டாவது முயற்சி இது.

சென்ற ஆண்டு இதே போன்றதொரு சந்திப்பு ஆசிய நாட்டுத் தூதர்களுடன் நடைபெற்றது.

திருப்பீடக் கலாசாரக் கழகத்தின் தலைவர் கர்தினால் ஜியான்ஃப்ரெங்கோ ரவாசி, செயலர் ஆயர் பார்தலமி அடோகனோவும் இச்சந்திப்பில் உரையாற்றினர் என்றும், புனித பிரான்சிஸ் சேவியர் துறவுச் சபையைச் சேர்ந்த அருட்தந்தை தியோடர் மெஸ்கரனாஸ் இச்சந்திப்பின் கூட்டங்களை முன்னின்று நடத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பீடக் கலாசாரக் கழகத்திற்கும், பன்னாட்டுத் தூதரகங்களுக்கும் இடையே நல்லதொரு உறவு வளர்ந்துள்ளது என்றும், கலாசாரத்தின் அடிப்படையில் பல கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன என்றும் இக்கழகம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை கூறுகிறது.

மார்ச் மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற இச் சந்திப்பில் ஆபிரிக்காவைச் சேர்ந்த 23 நாடுகளின் தூதர்கள் கலந்துகொண்டனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★

அருள்பணியாளர்களை விண்ணக தூதர்களாக பார்க்கத் தோன்றுகிறது

- சிரியாவுக்கான திருப்பீடத் தூதர்

சிரியாவில் நிலவும் மோதல்களைப் பற்றி ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கை உண்மை நிலையைத் தெளிவாகத் தருகிறது என்றும், இந்த அறிக்கையின் அடிப்படையில் சிரியாவில் வன்முறையை நீக்கும் வழிகளை அனைத்து நாடுகளும் இணைந்து செயல்படுத்த வேண்டும் என்றும் வத்திக்கான் அதிகாரி ஒருவர் கூறினார்.

தமாஸ்கு நகரில் உள்ள புனித சிரில் ஆலயத்தில் கடந்த மாதம் நடைபெற்ற ஒரு பல்சமய செப வழிபாட்டில் கலந்துகொண்ட கிறிஸ்தவ, இஸ்லாமியத் தலைவர்களிடம் பேசிய சிரியாவுக்கான திருப்பீடத் தூதர் பேராயர் மாரியோ ஸெனாரியே இவ்வாறு கூறினார்.

ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஒரு மனதாய் இணைந்து வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆறு அம்சங்கள் சிரியாவில் அமைதியைக் கொணரும் வழிகளைக் கூறுகின்றன என்று பேராயர் ஸெனாரி கூறினார்.

ஆயுதப் போராட்டத்தைக் கைவிடல், வன்முறைகளை நிறுத்துதல், மனிதாபிமான உதவிகளை வழங்குதல், காரணமின்றி கைது செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டோரை விடுவித்தல், செய்தியாளர்கள் தடையின்றி நாட்டில் நடமாட அனுமதித்தல், அரசியல் ரீதியான உரையாடல்களை மேற்கொள்ளுதல் என்ற இந்த ஆறு பரிந்துரைகளை சிரியா செயல்படுத்த அனைத்து நாடுகளும் உதவி செய்ய வேண்டும் என்று பேராயர் ஸெனாரி வலியுறுத்திக் கூறினார்.

வன்முறைகளுக்குப் பயந்து நாட்டை விட்டு வெளியேறும் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை கூடி வந்தாலும், இந்த வேதனை நிறைந்த நரகத்தில் தங்கி உழைத்து வரும் அருள்பணியாளர்களை விண்ணகத் தூதர்களாகப் பார்க்கத் தோன்றுகிறது என்று பேராயர் தன் உரையில் சிறப்பாக நினைவு கூர்ந்தார்.

★★★★★★★★★★★★★★★

சர்வதேச அமைப்புக்கள் லிபியாவுக்கு வர வேண்டும்

- ஆயர் மார்ட்டினலி

லிபியாவில் நிலவும் உண்மை நிலையைப் சரிவரப் புரிந்து கொள்ளாமல், ஊடகங்கள் எதிர்மறையான செய்திகளையே வெளியிட்டு வருவது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்று திரிபோலியின் அப்போஸ்தலிக்க நிர்வாகி, ஆயர் ஜியோவானி இன்னொஸென்ஸோ மார்ட்டினலி கூறினார்.

ஊடகங்கள் வெளியிட்டு வரும் தவறான எண்ணங்களுக்கு நேர் மாறாக, லிபியா நாட்டு மக்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் இருக்கின்றனர் என்றும் அப்போஸ்தலிக்க நிர்வாகி எடுத்துரைத்தார்.

ஊடகங்களின் செய்திகளால் பல நாட்டைச் சார்ந்த பிறரன்பு அமைப்புக்கள் லிபியாவுக்கு வந்து உதவிகளை மேற்கொள்ள தயங்குகின்றனர் என்பதைக் குறிப்பிட்டுப் பேசிய ஆயர் மார்ட்டினலி, இந்தச் செய்திகளைப் பெரிதுபடுத்தாமல், பன்னாட்டு அமைப்புக்கள் தங்கள் நாட்டுக்கு வருகை தரவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இன்னும் ஆங்காங்கே போராடிவரும் குழுக்களிடம் ஆயுதங்கள் இருப்பதால், அவ்வப்போது வன்முறைகள் வெடிக்கின்றன என்பதையும் எடுத்துரைத்த ஆயர் மார்ட்டினலி, லிபிய அரசு போராட்டக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்பதையும் எடுத்துரைத்தார்.

திருத்தந்தையின் புதன் பொதுமறை போதகம்

அன்னைமரி, மீட்பு வரலாற்றின் ஒவ்வொரு முக்கிய வேளையிலும் திரு அவைக்குள்ளும் திரு அவையோடு இணைந்தும் செபிக்கிறார்

குளிர்காலம் முடிந்து இதமான வசந்த காலத்தை அனுபவித்துவரும் ரோம் நகரில், திருத்தந்தையின் புதன் மறைபோதகங்கள் தூய பேதுரு வளாகத்தில் இடம்பெறுவது தொடங்கி விட்டன.

இயேசுவின் செபம் குறித்த தன் மறைக்கல்வி சிந்தனைகளை ஒரு தொடராக சில வாரங்கள் வழங்கி, அதனை புதனன்று நிறைவு செய்த திருத்தந்தை, இப்புதனன்று, விவிலியத்தின் 'திருத்தூதர் பணிகள்' நூல் மற்றும் புனித பவுலின் திருமுகங்களில் செபம் பற்றிய சிந்தனைகள் குறித்த ஒரு தொடரைத் தொடங்கினார்.

கிறிஸ்தவ செபம் குறித்த நம் மறைக்கல்விப் போதனைகளின் தொடர்ச்சியாக இன்று, திருத்தூதர் பணி நூல் மற்றும் புனித பவுலின் திருமுகங்களில் செபம் குறித்துக் காணப்படுபவைகள் பற்றிய புதியத் தொடர் ஒன்றை ஆரம்பிப்போம் எனத் தன் புதன் பொது மறை போதகத்தைத் தொடங்கினார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.

''இன்று நான் அன்னைமரி குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். திருத்தூதர்களுடன் எருசலேம் மாடியறையில் தூய ஆவியின் கொடைக்காக செபத்தோடு காத்திருந்த அன்னை மரியை நோக்குவோம். கிறிஸ்து பிறப்பின் முன்னறிவிப்பு முதல் இயேசுவின் சிலுவை மற்றும் அதற்குப் பின்னரான பெந்த கோஸ்தே வரையிலும், அன்னை மரியின் வாழ்வில் நடந்த அனைத்து நிகழ்வுகளிலும், கிறிஸ்துவில் இறைவனின் மீட்புத்திட்ட மறையுண் மையை ஆழ்ந்து தியானித்து செபிக் கும் தாயாகவே அன்னை மரியை நமக்கு முன்வைக்கிறார் புனித லூக்கா. அவரே விசுவாசம் மற்றும் பிறரன்பில் நம் வழி காட்டியாகவும் முதன்மை எடுத்துக்காட்டாகவும் உள்ளார்.

அன்னை மரி, மீட்பு வரலாற்றின் ஒவ்வொரு முக்கிய வேளையிலும் திரு அவைக்குள்ளும் திரு அவையோடு இணைந்தும் செபிக்கிறார். நாம் நம் வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் அன்னை மரியின் கைகளில் ஒப்படைத்து, செபத்தின் தேவை குறித்து நமக்குக் கற்றுத் தர அவரை அனுமதிப் போமாக. இதன்வழி, நாம் அவரின் மகனுடன் அன்பின் ஒன்றிப்பில் தூய ஆவியின் அருட்பொலி வுக்கும், உலகின் அனைத்து இறுதி எல்லை வரையி லான நற்செய்தி பரப்புக்கும் வேண்டுவோமாக.''

இவ்வாறு, தன் புதன் பொதுமறைபோதகத்தை வழங்கி தன் ஆசீரையும் அளித்தார் திருத்தந்தை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இயேசுவைப் போன்று பெண்ணின் கை, கால்களில் இரத்தம்!



புனித வெள்ளியன்று, தமிழ்நாடு சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கேரளா பெண் ஒருவருக்கு உடலில் இரத்தம் வழிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது எப்படி அவரது கை,கால்களில் இரத்தம் வந்ததோ அதுபோல் இந்த பெண்ணின் உடலில் இரத்தம் வழிந்தது.

அவர் கேரளா மாநிலம் பாலகாடு தொட்டி பாறையை சேர்ந்த ஜோஸ்பின் விமலா (வயது 30). இவர் வருடந்தோறும் ஈஸ்டர் பண்டிகைக்கு முன்பு வரும் தவக்கால நாட்களில் கேரளாவில் இருந்து ஏற்காட்டுக்கு வருவார்.

ஏற்காடு லேடிஷீட் வளைவில் உள்ள கார்மல் ஆஸ்ரமத்தில் தங்கி இருப்பார். இந்த ஆஸ்ரமத்தில் கன்னியாஸ்திரிகள் தவக்கால வழிபாடு நடத்து வார்கள்.

அதில் ஜோஸ்பின் விமலா கலந்து கொண்டு, தவக்காலமான 40 நாட்களும் இங்கேயே தான் இருப்பார். அதுபோல் இந்த ஆண்டும் தவக்காலத் தில் பங்கு கொண்டு ஜோஸ்பின் விமலா புனித வெள்ளி சிறப்பு பிரார்த்தனையில் கலந்துகொண் டார்.

அப்போது பிரார்த்தனையில் ஆழந்திருந்த ஜோஸ்பின் விமலாவின் உடலில் இருந்து இரத்தம் வழிய ஆரம்பித்தது. அதாவது இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது அவரது 2 கைகள், 2 கால்கள், முகத்தில் இரத்தம் வழியும். அதுபோன்று ஜோஸ்பின் விமலாவுக்கும் ரத்தம் வழிந்தது. இதனை அருகே இருந்தவர்கள் பார்த் தும் அதிர்ச்சி அடைந்தனர். இந்த தகவல் மெல்ல மெல்ல அந்த பகுதி முழுவதும் பரவியது.

இதனால் ஏராளமான கிறிஸ்தவர்கள் கார்மல் ஆஸ்ரமத்திற்கு படையெடுத்தனர். அவர்கள் ஜோஸ்பின் விமலா உடலில் இருந்து இரத்தம் வருவதை பார்த்ததும், 'இது ஆண்டவரின் சித்தம். அதனால்தான் இந்த புனித வெள்ளி தினமான இன்று ஜோஸ்பின் விமலா மூலம் காட்சி தரு கிறார்....' என்று கூறி ஆண்டவரைத் தோத் தரித்தனர்.

ஆன்மீகத்தில் தீவிர ஈடுபாடு கொண்ட ஜோஸ் பின் விமலாவுக்கு உடலில் இரத்தம் வழிவது இது முதல் முறை அல்ல. தொடர்ந்து 11 ஆண்டுகளாக அதுவும் புனித வெள்ளி அன்றுதான் இரத்தம் இவ் வாறு கொட்டி வருகிறது.

புனித வெள்ளி தினத்தன்று சேலத்தில் அரங்கேறும்!

100 மார்க் வேண்டுமா...?

ஒரு மனிதன் இறந்தவுடன் பரலோகத்துக்குச் (சொர்க்கம்) சென்றான்.

வாசலில் தேவதூதன் தடுத்து நிறுத்தி,

'இதன் உள்ளே செல்ல உனக்கென்ன தகுதியிருக்கிறது என்பதை பத்து வாக்கியங்களில் சொல்லிவிட்டுப் போக வேண்டும்.

நீ சொல்வதில் எனக்குத் திருப்தி ஏற்பட்டு 100 மதிப்பெண்கள் வாங்கினால்தான் உள்ளே அனுமதிப்பேன்' என்றான்.

அந்த மனிதன்,

'நான் ஞாயிறுதோறும் ஆலயம் போவேன்' என்றதும் தூதன் இரண்டு மதிப்பெண்களை போட்டான்.

'காணிக்கை கொடுப்பேன்' என்றதும் மூன்று மதிப்பெண்கள் கிடைத்தன.

'குழந்தைகளுக்கு இயேசுவைப் பற்றி கதைகள் சொல்வேன்.' என்றதும் ஐந்து மதிப்பெண்கள் கிடைத்தன.

இப்படியே அவன் தொடர்ந்து பதில் சொல்லியும் இருபது மதிப்பெண்களைக் கூட தாண்டவில்லை.

ஒன்பதாவது பதில் முடிந்ததும் பயந்துபோன அந்த மனிதன்,

'ஐயோ! இயேசு என் பாவத்தை ஏற்று ஏற்கனவே இரத்தம் சிந்திவிட்டார். எனவே, நான் பாவமற்றவன். இந்த ஒரு தகுதியே

நான் முழு மதிப்பெண்கள் பெறத் தகுதியாகும்' என்றதும்

பரலோகத்தின் கதவுகள் திறந்தன.

ஆம், இயேசுவை விசுவாசிக்க வேண்டும். அவரது கருத்துக்களை மதித்து வாழ வேண்டும். பாவங்கள் செய்யாமல் எவர் வாழ்கிறாரோ, அவர் பூமியில் நூற்றுக்கு நூறு

மதிப்பெண்கள் எடுத்து பரலோகத்தில் எளிதில் நுழைவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பல பரிமாணங்களில் மிளிர்ந்த பதினோராம் போப் பயஸ்

பதினோராம் போப்பாண்டவர் போப் பயஸின் இயற்பெயர் 'அம்ரோஜியோ டாமி யானோ அச்சிலிரட்டி' என்பதாகும். இவர் இத்தாலியிலுள்ள மிலன் மாகாணத்தின் டெலியோ என்னுமிடத்தில் 1857ஆம் ஆண்டில் மே மாதம் 31ஆம் திகதி பிறந்தார். இவருடைய தந்தை ஒரு பட்டுத் தொழிற் சாலையைச் சொந்தமாக நடத்தி வந்தார். அச்சிலி ரட்டி ஒரு மிகச்சிறந்த கல்வியாளராக விளங்கினார். தேவாலய வளாகத்திலேயே இறையியல் போதக ராகவும், நன்னெறிவிளக்க பிரசாரகராகவும் இவர் திறம்பட செயல்பட்டார்.

அச்சிலிரட்டி ஒரு வெற்றிகரமான நூலகராக வும், தமது ஓய்வு நேரங்களில் மிகுந்த ஆர்வமு டைய மலையேறுனராகவும் இருந்துள்ளார். 1888 ஆம் ஆண்டு முதல் 1911ஆம் ஆண்டுவரை அம் ரோசியன் நூலகத்தில் (பப்லியோ டெக்கா அம் ரோசியானா) நூலகராகப் பணியாற்றினார். இவரு டைய நூலக வாழ்வில் பண்டைகால மற்றும் இடைக்காலங்களுக்கான தேவாலயங்கள் பற்றிய கையெழுத்துப் பிரதிகளை ஆராய்ந்து அற்புத மான செய்திகளை சேகரித்துத் தொகுத்தளித்தார்.

1907ஆம் ஆண்டில் நூலகத்தின் தலைவரான பின்பும், இவரது ஆராய்ச்சிப்பணியும், எழுத்துப் பணியும் கொஞ்சமும் குறையவில்லை.

மிலன் மாகாணத்தில் கையாளப்பட்டு வந்த தேவாலயப் பிரார்த்தனைகளின் விதிமுறைகள் பற் றிய 'அம்ரோசியன் மிசால்' என்ற புத்தகத்தை எழுதி முடித்தார். பல ஆராய்ச்சிகள் மேற்கொண்டு, புனிதர் சார்பில் போரோமியோ வாழ்க்கை பற்றிய மற்றும் அவருடைய பணிகள் பற்றியவற்றைத் தொகுத்து எழுதினார்.

அம்ரோசியன் நூலகத்தில் இடம்பெற்றிருந்த மதிப்புமிக்க, பழைமை வாய்ந்த, கிடைத்தற்கரிய நூல்களை மறுபடியும் காலக்கிரமப்படி தொகுத்து வைத்தார். அச்சிலிரட்டி தமது ஓய்வு நேரத்தில் மேற்கொண்டு வந்த மலையேறும் பயிற்சிகளின் மூலமாக மொண்டி ரோசா, தி மேட்டர் ஹோர்ன், மொண்ட் பிளான்க், டிரிசோலடினா ஆகிய மலை களின் உச்சியை எட்டிப் பிடித்தார்.

இவரது பாராட்டும்படியான நூலக சேவையை கருத்தில் கொண்டு, 1911ஆம் ஆண்டில் போப் பாண்டவராய் இருந்த பத்தாம் போப் பயஸின் அழைப்பின் பேரில் அச்சிலிரட்டி வத்திக்கான் நகரத்திற்குச் சென்று அங்குள்ள வத்திக்கான் நூல கத்தில் துணை நூலகராகப் பதவியேற்றார். இந் நூலகத்தில் தொடர்ந்து பணியிலிருந்து 1914ஆம் ஆண்டு நூலகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற் றுக்கொண்டார்.

ஒரு பாதிரியாராகவும் அச்சிலி தமது கடமை களை மிகுந்த சிரத்தையுடனும் இறை பக்தியுட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விசுவாசிகள் மன்றாட்டு

ஆண்டவரே,
நற்செய்தியை
அறிவித்தல் குருக்களின்
பணி என்று
பொதுநிலையினராகிய
நாங்கள் ஒதுங்கி
விடாமல், நாங்களும்
திருத்தூதுப் பணியை
ஆவலோடு ஆற்றிட
அருள்புரியும்படி
ஆண்டவரே உம்மை
மன்றாடுகிறோம்.

இதன் காரணமாகவே முன்னதாக இவர் 1882 ஆம் ஆண்டு முதல் 1888ஆம் ஆண்டு வரை படுவாவிலுள்ள கிறிஸ்தவ மத குருமார்கள் பயிலக் கூடிய செமினரியில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

1922ஆம் ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி அச்சிலி ரட்டி போப்பாண்டவராக வத்திக்கானில் பதவி ஏற்றுக் கொண்டார்.

போப்பாண்டவராகப் பணியில் அமர்ந்தவுடன் இவரது முதல் பணியாக இருந்தது, பாரம்பரிய பொது ஆசீர்வாதத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்ததுதான். இத்தாலிய தேசத்திலிருந்து ரோம் நகரம் முழுவதுமாகப் பிரித்தெடுக்கப்பட்டு, வத்திக்கானுக்கு தொடர்பற்றுப் போனதிலிருந்து இதற்கு முந்தைய போப்பாண்டவர்கள் பாரம்பரிய பொது ஆசீர்வாதத்தைப் புறக்கணித்திருந்தனர். இவருடைய ஆளுமைக் காலத்தில் 1870 ஆம் ஆண்டு முதல் வத்திக்கான் மற்றும் அங்குள்ள தேவா லயத்தின் 'அந்தஸ்து நிலை' குறித்து பிரச்சினைகள் நீடித்து வந்தன.

அதனை அச்சிலிரட்டி தமது போப்பாண்டவர் ஸ்தானத்திலிருந்து 1929ஆம் வருடத்திய 'லேட்டரன் உடன்படிக்கை' மூலம் ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தினார்.

இவருடைய பதவிக் காலத்தில் ''இயேசுவின் ராஜ்யத்தில் இயேசுவின் அமைதி'' என்ற கொள்

னும் ஆற்றி அனைவரது விசுவாசத்தையும் மெச்சுதலையும் பெற்றார்.

தான் பாதிரியாராக சேவை புரிந்த போது மிலன் நகரத்தில் ஆர்ச் பிஷப்பாகவும், ஸில்வெஸ்ட்ரோ இமார் டினோ எய்மாண்டியின் கார்டினல்-பிரீஸ்ட்டாகவும் சில காலம் பணிபுரிந்தார்.

ஒரு கல்வியாளராக அச்சிலிரட்டி சிறப்புற்றிருக்கக் காரணமாய் அமைந்தது, அவர் கல்வித் துறையில் கொண்டிருந்த தணியாத ஆர்வமும் தத்துவம், சட்டம் மற்றும் இறையியல் முதலியவற்றில் பெற்றிருந்த விசேட ஈடுபாடுமேயாகும். அவற்றில் அவரது நிபுணத்துவத்தை விளக்குவதாக அமைகின்றன அவற்றிற்கான டாக்டர் பட்டங்கள்.

கையைக் கடைப்பிடித்தார். சர்வதேச முதலாளித்துவத்தால் பாமர மக்கள் பொருளாதார மற்றும் ஆன்மீக ரீதியில் சுரண்டப்படுவதை இவர் முற்றிலும் எதிர்த்தார். மெக்ஸிகோ, ஸ்பெயின் மற்றும் சோவியத் யூனியன் பகுதிகளில் கிறிஸ்தவர்களை முத்தரப்பில் மாய்ப்பதை இவரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. இதற்காக அச்சிலிரட்டி வேதனை மிகக் கொண்டார்.

இந்நிகழ்வினை மனிதனுக்கு இழைக்கும் அவமரியாதை எனவும், மனித அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும் விடயம் என்றும் கருத்துத் தெரிவித்தார். அத்துடன் இதனை அவர் 'அமைதியில் விளையும் சதி' எனவும் வர்ணித்தார்.

கத்தோலிக்க இயக்க நடவடிக்கைகளில் பாமர மக்களை ஈடுபடுத்துவதில் அச்சிலி மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். வத்திக்கான் நகர நடவடிக்கைகளில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து அற்புதப் போப்பாண்டவராய் திகழ்ந்த போப் பயஸ், 1939ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி கர்த்த ருக்குள் நித்திரை எய்தினார். - A.A. ஆல்பர்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்தது
அகந்தையின் சின்னம்

நோவாவும் அவருடைய சந்ததியினரும் உலகில் பரவியிருந்த கால கட்டம் அது. உலகில் எங்கும் நோவாவின் சந்ததியினரைத் தவிர வேறு யாருமே இருந்திருக்கவில்லை. ஏனென்றால் கடவுள் நோவாவின் குடும்பத்தினரைத் தவிர மற்ற அனைவரையும் தண்ணீரினால் அழித்திருந்தார். எங்கும் ஒரே ஒரு சந்ததி இருந்ததனால் அவர்கள் பேசும் மொழியும் ஒன்றாகவே இருந்தது. உலகில் அப்பொழுது வேறு மொழிகள் இல்லை.

ஒருமுறை சினயார் நாட்டில் சமவெளி ஒன்றில் மக்கள் பல இடங்களிலிருந்து வந்து ஒன்று கூடினார்கள். அவர்களில் ஒருவர் ''நாம் நம்முடைய புகழை நிலைநாட்டுவதற்காக ஏதேனும் செய்தாக வேண்டும், என்ன செய்யலாம் சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

மக்கள் பலவிதமான யோசனைகளைச் சொன்னார்கள். அதில் ஒன்று ஒரு மிகப் பெரிய கோபுரம் கட்டுவது. அந்தத் திட்டத்தை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

''நாம் வானளாவ ஒரு கோபுரத்தைக் கட்ட வேண்டும். அது நம்முடைய புகழை இனிவரும் தலைமுறைக்குச் சொல்ல வேண்டும். இப்படி ஒரு கட்டிடம் இல்லை என்று எல்லோரும் வியப்படைய வேண்டும்'' மக்கள் கூறினார்கள்.

''சரி கோபுரம் கட்டுவது எப்படி?''

''மண்ணைப் பிசைந்து கற்கள் அமைத்து அவற்றைக் கொண்டு கோபுரம் கட் டலாம்'' என ஒருவர் சொன்னார்.

''மண்ணினால் உருவாக்கிய கல் என்றால் உயரமாகக் கட்டும்போது இடிந்து விழுமே'' - இன்னொருவர்.

''அப்படியானால் நாம் மண்ணினால் உருவாக்கிய கற்களை நெருப்பில் சுடுவோம். சுடப்பட்ட கற்கள் மிகவும் பலமானதாக இருக்கும். நம்முடைய கோபுரம் வானத்தை எட்டினாலும் உறுதியாக இருக்கும்''

''வானத்தை எட்டும் கோபுரம் கட்டி முடிக்கும்போது நாம் கடவுளைப் போல ஆவோம். எல்லோரும் நம்மைப் புகழ்வார்கள்.''

மக்கள் குதூகலித்தார்கள். அவர்களுடைய மனம் கடவுளை மறந்து விட்டு சுய பெருமைகளில் மூழ்கியது.

அவர்கள் கோபுரம் கட்டும் பணிகளில் ஈடுபட்டார்கள். கோபுரம் கொஞ்சம் கொஞ்சமாக மேலெழும்பத் தொடங்கியது.

பூமியில் மக்களிடையே கர்வமும், அகந்தையும் நிரம்பி வழிவதைக் கண்ட கடவுள் கோபமடைந்தார். மக்கள் அந்தக் கோபுரத்தைக் கட்டிவிட்டால் அவர்களிடம் இறைபக்தியே இல்லாமல் போய்விடும், எதையும் தங்கள் முயற்சியினால் சாதித்துவிட முடியும் என்னும் கர்வம் அவர்களுக்குள்

விசுவாசிகள் மன்றாட்டு

நம்பிக்கையின் நாயகனே, தந்தையிடம் விண்ணேற்பு அடைந்து எங்களுக்காக இடம் தயாரிக்க சென்றுள்ள நீர் திரும்பி வரும்போது உம்மோடு கூட வான்வீட்டிற்கு வரத் தகுதியுள்ளவர்களாக நாங்கள் விளங்கும்படி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குடியேறிவிடும், அவர்கள் தனிமனித வழி பாடுகளில் விழுந்து விடுவார்கள் என்பதைக் கடவுள் உணர்ந்தார். அந்தக் கோபுரத்தைக் கட்டும் முயற்சியிலிருந்து மக்களைப் பின்வாங்க வைக்க வேண்டும் என்று அவர் முடி வெடுத்தார்.

'மக்கள் எல்லோரும் ஒரே குழுவாக இருப்ப தால் தானே இந்தப் பிரச்சனை? மக்கள் பிரிந்து தனித்தனிக் குழுக்களாக இருந்தால் அவர்கள் என்னை மறக்கமாட்டார்கள்' என்று நினைத்த கட வுள் அவர்களைப் பிரிப்பது என்று முடிவெடுத் தார்.

மொழி! அதுதான் கடவுள் கையிலெடுத்துக் கொண்ட ஆயுதம். அங்கிருந்த மக்களை பல்வேறு மொழி பேசுவோர்களாய்ப் பிரித்தார் கடவுள்.

ஒரே மொழியில் பேசிக்கொண்டிருந்த மக்கள் திடீரென வேறுவேறு மொழிகளில் பேசத் தொடங் கினார்கள்.

''ஏய்.. நீ என்ன பேசுகிறாய்.. எனக்குப் புரியவில்லையே''

''என்னாச்சு உனக்கு?''

''அவர்கள் என்ன வேறு ஏதோ உளறுகி றார்கள்...''

மக்களிடையே மாபெரும் குழப்பம். ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியவில்லை.

''நான் பேசுவது யாருக்கெல்லாம் புரிகிறதோ, அவர்களெல்லாம் இங்கே வாருங்கள்...'' ஆங் காங்கே மக்கள் கத்தினார்கள்.

ஒன்றாக இருந்த மக்கள் கூட்டம் இப்போது ஒவ்வொரு மொழிக்கும் கீழே சிறு சிறு குழுக்களா கப் பிரிந்தது. அவர்களிடையே இருந்த ஒற்றுமை உணர்வும் போய்விட்டது. தாங்கள் பேசுவதுதான் நல்ல மொழி என்று ஒவ்வொரு குழுவும் அடுத்த குழுக்களோடு சண்டையிடத் தொடங்கின. மக்கள் வேற்றுமை உணர்வுடன் வேறுவேறு திசைகளுக்குப் போனார்கள்.

கடவுளின் திட்டம் பலித்தது. அவர்களுடைய அகந்தையின் சின்னம் அறைகுறையாய் நின்றது. அது பாபேல் என்று அழைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குஜராத் மாநிலத்தின் உள்ளார்ந்த மலைக் கிராமங்களின் வழியாக ஒரு நடுத்தர வயது தம்பதியினர் காரில் சென்றுகொண்டிருந்தனர்.

அப்பொழுது மலைக்குன்று ஒன்றில் அழகிய சிறு தேவாலயம் கம்பீரமாகக் காட்சியளிப்பதைத் தூரத்தில் பார்த்தனர். அந்த அழகிய தேவாலயத்தை அருகில் சென்று பார்க்க வேண்டும் என்கிற ஆவல் இத்தம்பதியினருக்கு ஏற்பட்டதால், அம்மலைக்குன்றை நோக்கிக் காரை செலுத்தினர். பக்கவாட்டில் திரும்பி சிறு மண் சாலை வழியாக அம்மலைக்குன்றின் அடிவாரத்தைச் சென்று அடைந்தனர். அதற்கு மேல் பாதை இல்லாததால் அருகில் இருந்த தேக்கு மரக்காட்டில் காரை நிறுத்திவிட்டு, அத்தேவாலயத்தை நோக்கி ஒற்றையடிப் பாதையில் நடக்கத் தொடங்கினர்.

அருகில் அவர்கள் ஏறிவந்தபோது, ஆலயமும் அதனைச் சுற்றி இருந்த இடமும் கண் கொள்ளாமல் காட்சியளித்தது. தேவாலயத்தினுள்ளே சென்று தேவப் பிரசன்னத்தில் லயித்துவிட்டு ஜன்னல் வழியே பார்த்த அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

ஆலயத்தின் கீழ்வாரத்தில் ஒரு மனிதன் தன் விவசாய நிலத்தை உழுதுகொண்டு இருந்தான். இதில் என்ன அதிர்ச்சி இருக்கிறது? அம்மனிதன் ஏர்பூட்டும் நுகத்தில் ஒரு பக்கம் ஒரு காளை மாட்டையும், அதன் அடுத்த பக்கம் ஒரு இளைஞனையும் பூட்டி, உழுதுகொண்டிருந்தான்.

உடனே இத்தம்பதியினர் அம்மனிதனை நோக்கி ஓடிச் சென்றனர். அவர்கள் கடுங்கோபமாக அவனைப் பார்த்து, ''ஏய் என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உனக்கு நெஞ்சில் ஈரம் கிடையாதா? ஒரு மாட்டைப் பயன்படுத்துவது போல இந்த இளைஞனைப் பயன்படுத்துகிறாயே?'' என்று அம்மனிதனிடம் கோபமாகக் கேட்டனர். அம்மனிதன் ஏர் உழுவதை நிறுத்திவிட்டு, நுகம் பூட்டப்பட்டிருந்த அவ்விளைஞனை அணைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

''ஐயா! இவன் என் மகன். நீங்கள் பார்த்து ரசித்த இந்த தேவாலயம் எங்கள் கிராம மக்களின் தியாகத்தினால் கட்டப்பட்டதாகும். எங்கள் ஏழ்மையான சூழ்நிலையிலும், சிறுகச் சிறுக சேமித்து இந்த தேவாலயத்தைக் கட்டினோம். பணப் பற்றாக்குறையால் ஆலயத்தின் கூரைப் பணிகள் பாதியிலேயே நின்றுவிட்டன. மழைக் காலம் ஆரம்பித்ததால் இந்த ஆலயத்தின் கூரை செலவுகளுக்காக என் ஒரு காளை மாட்டை விற்று, கூரைப் பணிகளை முடித்தோம். அதற்கு பின்பு தேவ நாமத்தின் மகிமைக்காக இந்த தேவாலயம் மங்கள பிரதிஷ்டை செய்யப்பட்டது'' என்றார்.

கம்பீரமாக நிற்கும் அந்த சிற்றாலயத்தைப் பார்த்து தம்பதியினர் கண்கலங்கினர்.

தேவனுக்குக் கொடுப்பது என்பது நிறைவில் இருந்து கொடுப்பது அல்ல; தியாகத்

அன்பின் நிமித்தமாக அள்ளிக் கொடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு கொடுப்பது என்பதை அவர்கள் கற்றுக் கொண்டனர்.

அகில உலகத்தை படைத்த நமது கடவுள் மகா ஐஸ்வரியவானாய் இருந்தாலும், தான் கொடுத்த தில் இருந்து மனிதன் தன்னுடைய இராஜ்ஜியத் தின் மேன்மைக்காக கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார். வேதாகமத்தில் ஒரே ஓரிடத் தில் மட்டும் தான், 'என்னைச் சோதித்துப் பாருங் கள்...' (மல்சியா 3:10) என்று கர்த்தர் கூறியுள்ளார்.

கர்த்தர் நம்மை இடங்கொள்ளாமற்போகுமட் டும் ஆசீர்வாதத்தை வருஷிக்க, தசமபாகமும் (பத் தில் ஒன்று) காணிக்கையும் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். கொடுக்க வேண்டு மென்று சொல்லும்போது யாருக்குக் கொடுக்க வேண்டும் என்ற கேள்வியும் எழும். சிலர் தசம பாகம் முழுவதையும் தாங்கள் சார்ந்த திருச்சபைக் குத்தான் கொடுப்பார்கள். சிலர் தசம பாகத்தை தங் கள் விருப்பப்படி ஊழியங்களுக்கு பிரித்துக் கொடுப்பார்கள். சிலர் தசம பாகத்தை சரியாக தேவனுக்குக் கொடுப்பார்கள். ஆனால் காணிக்கை கொடுப்பதையும் தசம பாகத்தில் இருந்து கொடுப் பார்கள். இது தவறான செயலாகும்.

தசமபாகம் வேறு காணிக்கை வேறு. கர்த்தருக் கென்று எப்படி தசம பாகத்தையும், காணிக்கையும் கொடுக்க வேண்டும் என்பதை பார்ப்போம்.

இரகசியமாகக் கொடுங்கள்

மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்தி லிருக் கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை (மத் 6:1). கர்த்தர் நமக்குக் கொடுத் துள்ள வருமானத்தைப் பிரித்து நாம் சார்ந்த ஆல யத்திற்கும், கர்த்தரின் சித்தப்படி அவருக்கு பிரிய மாய் நடத்தப்படும் ஊழியங்களுக்கும் மற்றும் பல தர்ம காரியங்களுக்கும் நாம் நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். ஆனால் கொடுப்பது இரகசி யமாக இருக்க வேண்டும். வலது கை செய்கிறதை இடது கை அறியாதிருக்கக் கடவது என்று கர்த்தர் கூறியுள்ளார்.

மனுஷரால் புகழப்படுவதற்கு நாம் கர்த்தருக் கென்று கொடுத்தால் நமக்கு பலனில்லை. எனக் குத் தெரிந்த நெருங்கின நண்பர் ஒருவர் கொடுப் பதைப் பற்றி கூறும்போது சில ஊழியர்களுக்கு அவர் நன்கொடை கொடுக்கும்போது அவர் மனைவிக்குக் கூடத் தெரிவிப்பதில்லை என்றார். இதை சரி என்று ஆமோதிக்கவில்லை. ஆனால் ஊழியத்திற்கும் மற்றும் பல தேவைகளுக்கும் நாம் கொடுக் கும்போது, தம்பட்டம் அடிக்காமல் அமைதியாக கொடுக்க வேண்டும் என்பது கர்த்தரின் விருப்பம்.

- ரெக்ஸ் கிளமெண்ட்

அன்பு வாசகர்களே! உங்கள் கதைகள், கட்டுரைகள் மற்றும் சபை நிகழ்ச்சிகளை எங்களுக்கு அனுப்புங்கள். **'ஆசீர்வாதம்'** பற்றிய தங்களின் எண்ணங்களையும் எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

முகவரி:

ஆசீர்வாதம்

12-1/1, சென். செபஸ்தியன் மாவத்தை, வத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லேலூயா துதி மகிமை

1986ஆம் ஆண்டு ஹோலந்தில் நடந்த உலக சுவிசேஷ கர்களின் கூட்டத்தில், பாஸ்டர் பில்லி கிம் என் பவர் பேசினார். தென்கொரியாவின் பெரிய எழுப் புதலுக்கான காரணங்களில் முக்கியமானதாக ''துதி யைப்'' பற்றிச் சொன்னார்.

''அல்லேலூயா'' சொல்வது, பெயர் வைப்பது சர்வ சாதாரணம். ''அல்லேலூயா டீக்கடை'', ''அல் லேலூயா மார்க்கெட்'', ''அல்லேலூயா பார்பர் ஷொப்'', ''அல்லேலூயா சபை'' - என்று எல்லா வற்றிலும் ''அல்லேலூயா'' பெயர் சூட்டி, துதித்து மகிழ்கின்றனர்.

அவரது நண்பர் பெயர் ''அல்லேலூயா ஜோய்'', அவரது 63 மாடிக் கட்டிடத்திற்கு, ''அல் லேலூயா டவர்'' என்பது பெயர், அவர் ஒரு கால் பந்துக் குழு வைத்திருந்தார். அதன் பெயர் ''அல் லேலூயா ஃபுட் போல் டீம்''.

ஹொங்கொங்கில் நடந்த போட்டியில் இந்த உதைபந்தாட்டக் குழு, சீனாவைச் சேர்ந்த கால் பந்தாட்டக் குழுவை எதிர்த்து ஆடிக்கொண்டிருந் தது. ஆட்டத்தை வர்ணனை செய்து கொண்டிருந் தவர் சீனாவைச் சேர்ந்த ஓர் அவிசுவாசி.

அவரது வாய் ''அல்லேலூயா''வென ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தது.

''அல்லேலூயா ஃபோர்வர்ட் பந்தை எடுத்துக் கொண்டு போகிறார்.''

''அல்லேலூயா ரைட் அவுட்டிடம் பந்தைத் தள் ளினார்.''

''அல்லேலூயா வீரர்கள் முன்னேறுகிறார்கள்,'' அல்லேலூயா கோல் போட்டது.'' என, போட்டி முடியும் வரை குறைந்தது 3000 தடவையாவது ''அல்லேலூயா'' துதி. ஆண்டவருக்கே மகிமை.

ஆனால் கிறிஸ்தவர்களில் சிலர் ''அல்லே லூயா'' சொல்ல வெட்கப்படுகிறார்கள். விசுவாசி களை ''அல்லேலூயாக்'' கூட்டம் எனக் கேலி செய் கிறார்கள்.

வேதத்திலே சங்கீதப் புத்தகத்தில் 20 முறைகள், புதிய ஏற்பாட்டில் வெளி.19:1-6 இல் 4 முறையும் ''அல்லேலூயா'' சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்த கூட்டமும் மூப்பர்களும் ''ஆமென், அல்லே லூயா'' துதி மகிமை பாடுகிறார்கள் பரலோகம் செல்ல விரும்பும் எல்லோரும் ''அல்லேலூயா'' சொல்வார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மரித்தவர்களும் மௌனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரை துதியார்கள்'' (சங்.115:17).

சமீபத்தில் வடநாட்டில் நடந்த ஒரு ''அல்லேலூயா'' அதிசயத்தைக் கேள்விப்பட்டேன்.

ஒரு சுவாமிஜி, தினமும் ஒரு கையில் சட்டைப்பையில் வைக்கக்கூடிய வானொலி ஒன்றும், மறுகையில் கமண்டலமுமாகக் காட்டிற்குப் போவார். கொஞ்ச நேரம் மந்திரம் ஓதிவிட்டு, மீதி நேரங்களில் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்வார்.

அப்படி ஒருநாள் குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒன்றைக் கேட்க எண்ணி, வானொலியைத் திருகினார்.

அப்போது குறிப்பிட்ட அலைவரிசை ஒன்றில் இனிய பாடல்கள் வந்தன. கேட்டார் சாட்சியும் செய்தியும் அவரைத் தொட்டன. அதன்பிறகு அவர் தினமும் குறிப்பிட்ட அந்த அலைவரிசையில் குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சிகளை ஒழுங்காகக் கேட்க ஆரம்பித்தார்.

ஒரு நாள் மாலை வீடு திரும்பிக் கொண்டிருந்தார். எதிரே ஒரு பெண் தன் குழந்தையைத் தோளில் போட்டுக்கொண்டு, பதறியடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தாள். அவரைப் பார்த்த உடனே, ''சுவாமிஜி, என் குழந்தைக்கு என்னமோ ஆயிடுச்சு. ஏதாவது செஞ்சு என் பிள்ளையைக் காப்பாத்துங்க'' - என்று அழுதாள்.

சுவாமிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. குழம்பிப் போனார். அப்போது அவருக்கு குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சியில் பேசியவர் அடிக்கடி சொன்ன ''அல்லேலூயா, ஆமென்'' வார்த்தைகள் நினைவிற்கு வந்தது. அதன் பொருள் தெரியாவிட்டாலும் அதில் ஏதோ வல்லமை இருப்பதை உணர்ந்தார்.

கமண்டலத்திலிருந்த தண்ணீரை அக்குழந்தையின் மேல் தெளித்து, மூன்று முறை ''அல்லேலூயா ஆமென்'' என்று சொன்னார். சுவாமிஜிக்கே ஆச்சரியம். அந்தக்குழந்தை உடனே பரிபூரண சுகமடைந்தது. இச்செய்தி ஊர் முழுவதும் பரவி, அக்கம் பக்கத்து கிராம மக்கள் இவரை மொய்க்க ஆரம்பித்தனர். அதே மந்திரமான ''அல்லேலூயா ஆமென்'' மூன்று தரஞ் சொல்ல எல்லா அற்புதங்களும் நடந்தன.

அதன் பிறகு குறிப்பிட்ட அந்த அலைவரிசைக்கு அவர் எழுதி, முறையாக ஆண்டவரைத் தெரிந்து கொண்டு, ஊழியஞ் செய்கிறார்.

''அல்லேலூயா''

''அல்லேலூயா கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது'' - சங்.106:1

விசுவாசிகள் மன்றாட்டு

தூய ஆவியானவராகிய இறைவா, உறுதிபூசுதல் என்ற அருட்சாதனத்தின் வழியாக உம்மைப் பெற்றுக் கொண்டுள்ள நாங்கள் உமது ஆற்றலை உணர்ந்து அதற்கு ஏற்ற நேரிய வாழ்க்கை நடத்திட அருள்புரியும்படி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

Digitized by Siva Siva Foundation
noolaham.org | aavanaham.org

உவமை: 'யானையின் பலம் எதிலே - தும்பிக்கையிலே', 'மனிதனின் பலம் எதிலே - நம்பிக்கையிலே'.

'நம்பிக்கைதான் வாழ்க்கை', நம்பினோர் கெடுவதில்லை. இது நான்கு மறைத் தீர்ப்பு. நம்பிக் கெட்டவர் யாருமிலர், நம்பாமல் கெட்டவர் பலர். இவை யாவுமே வாழ்வுக்குத் தேவையான அடிப்படைப் பண்பாகிய நம்பிக்கை குறித்து நம் முன்னோர் விட்டுச் சென்ற முதுமொழிகள்.

இயேசுவின் போதனையும், அவரது செயற் பாடுகளும் நம்பிக்கையையொட்டியதாகவே அமைந்துள்ளதை நற்செய்திகள் நமக்குத் தெரிவிக் கின்றன.

கடுகளவு விசுவாசம் மலையையும் பெயர்த்து கடலில் விழச் செய்யும் என்றார் இயேசு. தம்மீது நம்பிக்கையற்றிருந்த மக்கள் மத்தியில் தமது அருஞ்செயல்களைச் செய்யாமல் மறைத்து கொண் டவர் அவர். இத்தகைய நம்பிக்கையின் அடித் தளத்தில் விளைந்த இரு செயல்கள் பின்னிப் பிணைக்கப்பட்ட நிகழ்வுகளே இன்றைய நற்செய்

இருவருக்குமே இயேசுவைத் தொடும் அல் லது இயேசுவால் தொடப்படும் அனுபவம் கிட்டு கின்றது. அந்தத் தொடுதல் அவர்கள் இருவரை யும் உயிரோட்டமுள்ளவர்களாக மாற்றுகிறது.

எத்தனை சோதனைகள், வேதனைகள் வந் தாலும் நான் மீண்டும் எழுவேன். மீண்டும் துளிர்ப் பேன் என்பது நமது அசைக்க இயலாத தாரக மந் திரமாக இருக்க வேண்டும். நமது வாழ்வின் அடித்

ஆண்டவர் நம்பிக்கையே வாழ்வின் அடித்தளம்

திப் பகுதியாக நமது தியானத்திற்கு தரப்பட்டுள் ளது.

அருள்மொழி: ''மகளே, உன் நம்பிக்கை உன்னை குணமாக்கிற்று, அமைதியுடன் போ. நீ நோய் நீங்கி நலமாயிரு'', ''தலித்தாகூம் - சிறு மியே உனக்குச் சொல்கிறேன் எழுந்திரு'' (மாற் 5:34.41).

வார்த்தை வாழ்வாக: நற்செய்திப் பகுதியின் இன்றைய இரு நிகழ்வுகளும் இயேசு இரு வேறு பெண்களுக்கு ஆற்றியவை. இரு பெண்களுமே நோயுற்றிருந்தனர். அதிலும் கடுமையான, மர ணத்தை சீக்கிரமே வரவழைக்கக்கூடிய நோயி னால் வருந்தினர்.

ஒரு பெண் நேரடியாக இயேசுவின்மீது அதீத நம்பிக்கை கொண்டு இவரால் மட்டுமே குண மடைவேன் என்று எண்ணியவள்.

மற்றொரு பெண் சிறுமியாதலால் அவளது தந்தை அவள் பொருட்டு இயேசுவிடத்தில் வந்து தன் மகளை இவரால் மட்டுமே குணப்படுத்தவும், உயிரளிக்கவும் முடியும் என்ற விசுவாசத்துடன் அவர் முன் நின்றார்.

தளமான பண்பாக நம்பிக்கை இருக்க வேண்டும்.

இவ்வுலகில் சக மனிதர்கள் மீது நாம் வைக்கும் நம்பிக்கை நமக்கு இவ்வுலக வாழ்வு சிறக்க உதவி செய்யும். ஆனால் ஆண்டவர் மீது நாம் வைக்கும் நம்பிக்கை இம்மையிலும் மறுமையிலும் நம்மை வாழ வைக்கும்.

சக மனிதர் நமது நம்பிக்கையைத் தவறாகப் பயன்படுத்தி துரோகமிழைத்தாலும் இறைவனிடம் கொள்ளும் நம்பிக்கை அதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளையும் தகர்த்து நம்மை நல்வழி யில் நடத்திச் செல்லும். நம்புவோம். வாழ்வோம்.

சுய ஆய்வு: இயேசுவின் மீது நான் கொண் டுள்ள நம்பிக்கை எத்தகையதாக உள்ளது? எது வந்த போதும் என்னைக் காக்க இயேசு இருக்கின் றார் எனக்கூறும் ஆழ்ந்த நம்பிக்கை எனக்கு உள் ளதா?

இறை வேண்டல்: இயேசுவே, எனது நம்பிக்கையை ஆழப்படுத்தும்.

(உம் வாக்கு என் வாழ் வாக)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இல்லமே முதல் வகுப்பறை

அது ஒரு சிறிய குடும்பம். தந்தை மிகவும் அன்பானவர். தனது குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிக் கடினமாக உழைத்தார். தனது மனைவியை மதித்தார். அவரது உணர்வுகளை நன்கு புரிந்துகொண்டார். அக்குடும்பத்தின் தாய் பாசமுள்ளவர், தூய்மையானவர். அனைத்து அம்மாக்களுக் கும் ஓர் எடுத்துக்காட்டான அன்னை அவர். தனது ஒரே மகனை அளவுகடந்த கரிசனையோடும் கடமை உணர்வோடும் வளர்த்தெடுத்தார்.

அந்தக் காலத்தில் இன்றுபோல் முறையான பள்ளிகள் இல்லை. ஆகவே, குழந்தைகள் அவரவர் இல்லங்களிலேயே கல்வி கற்றனர் அல்லது கல்வி கற்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தக் குடும்பத்தில் ஒரே ஒரு குழந்தைதான்.

அக்குழந்தையோ அறிவாளி, நேர்த்தியானவர். புதியவற்றைக் கற்றுக்கொள்வதில் ஆர்வமும் உற்சாகமும் உள்ளவர்.

அவரது அம்மாவே அவருக்கு வீட்டிலேயே கல்வி கற்பித்தார். கல்வி விழிப்புணர்வுக்கு இட்டுச் செல்லும், விழிப்புணர்வு செயல்பாட்டுக்கு இட்டுச் செல்லும் என்பதை அவர் உணர்ந்தார்.

பெரிய படிப்பாளிகளே ஆச்சரியப்படும் அளவுக்கு, தனது 12 வயதிலேயே விவரமாக வினாக்களை அவர் எழுப்பத் தொடங்கினார். இந்த அற்புதமான மாணவர் மாபெரும் ஆசிரியரானார், உலகம் போற்றும் உன்னதத் தலைவரானார். மேன்மை தரும் மீட்பரானார்.

இதுதான் திருக்குடும்பம்; இரண்டாயிரம் ஆண் டுகளுக்கு முன் இது இஸ்ரயேல் நாட்டு நாசரேத் தில் வாழ்ந்தது. அதன் தலைவர்; புனித வளனார்; அதன் தலைவி; மரியன்னை; அக் குழந்தை, மாணவர்: இயேசு. ஓ, எவ்வளவு இனிமையான குணம் நிறைக் குடும்பம் அது!

ஒவ்வொருவருடைய அம்மாதான் முதல் ஆசிரியை;

ஒவ்வொருவருடைய குடும்பமும்தான் முதல் வகுப்பறை!

விசுவாசிகள் மன்றாட்டு

ஞானத்தின் உறைவிடமே, இறைவா, எங்கள் பிள்ளைகளை, குறிப்பாக இளைஞர்களை உமது ஞானத்தால் வழிநடத்தி அவர்கள் கல்வியிலும், நற்பண்புகளிலும் சிறந்து விளங்கிட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இறை எனும் அற்புத சக்தி

இறை நம்பிக்கை பற்றி எண்ணுவதே இதயத்திற்கு மருந்தாகும் இனிய அனுபவம். காலங்கள் தோறும் இந்த எண்ணங்கள் சுடர்விட்டு மேலோங்கி வளர்ந்து கொண்டுதான் செல்கின்றன. மனித வளர்ச்சியின் வேகங்கள் இந்த சிந்தனைகளைக் கட்டுப்படுத்தவே இல்லை. மாறாக, களைகளையெல்லாம் போக்கி இவற்றை நெறிப்படுத்தும் கருவிகளாகவே விஞ்ஞானமும், நாகரீகமும் இன்று வலம் வருகின்றன. கணினிகளின் வேகத்தையும் மிஞ்சியதாகக் கடவுள் சிந்தனை வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் தத்துவங்கள் இறை நம்பிக்கைக்கு விளக்கங்கள் தந்தன. அரிஸ்டோட்டிலின் தத்துவ விதிகளைக் கையாண்டு அக்குவின் தோமா ஆண்டவனின் இருப்பை உறுதி செய்தார். இயற்கையின் எழிலைக் கண்டு அதன் காரணத்தைக் கர்த்தாவாக்கிட இறைவனின் இயல்புகளை விளக்கினர் தத்துவ மேதைகள். வாழ்க்கையின் இன்ப துன்பங்களை விளக்கி, துன்பமில்லா வாழ்க்கையின் ஊற்றாக இறைவனைச் சித்திரித்த நேரங்கள் உண்டு.

இன்று, கணினிகள் சக்திகளின் வேகங்களை அளக்கின்றன. மின் அணுக்களின் ஓட்டத்தில் மனிதன் நடத்துகின்ற விளையாட்டாகவே வாழ்க்கை அமைந்து கொண்டிருக்கிறது. கணினிகளின் கைகளில் மனிதன் மிக வேகமாகக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறான். கடவுள் ஒரு சக்தியா? என்பதைக் கணினிகள் காட்டும் என்பதே சாதாரண விஞ்ஞானியின் வாதமாக இருக்கிறது.

இந்த அறிவியல் அறிவு மனிதனை வியக்க வைக்கிறது. விண்ணைத் தாண்டிச் செல்ல விருப்பத்தைத் தருகிறது. எல்லாக் காரியங்களுக்கும் காரணங்களைக் கண்டு கொண்டே செல்கின்ற சமயத்தில் காரணமே இல்லாத ஒரு சக்தி இருக்குமோ? என்று சில சமயங்களில் மனிதன் சிந்திக்கிறான்.

இந்த ஆற்றல்களுக்கெல்லாம் அப்பால்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நின்று நடத்தி வைக்கின்ற அற்புத சக்தி இருக்குமா? அத்தகைய சக்தி இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? என்ற அடிப்படைக் கேள்வியை அலட்சியப்படுத்தும் அறிவியல் உண்டு. இருக்கட்டுமே! அது எந்தவிதத்திலும் உலகங்களின் செயற்பாட்டைப் பாதிக்காது என்று உறுதிபடக் கூறும் அறிஞர்கள் உளர்.

நமது கேள்வியெல்லாம் இதுதான். இறைச் சக்தி நம்மை எப்படிப் பாதிக்கிறது? நம்மை எப்படி உரு மாற்றுகிறது? இறைவனை நம்பும்போது நமக்கு என்ன கிடைக்கிறது?

வாழ்க்கையின் எல்லைகள்:

எத்தனை கோள்கள் நமது பிரபஞ்சத்தில் வலம் வருகின்றன! எத்தனை நெருப்புப் பிழம்புகள் நமது இயக்கங்களைச் சுற்றி வருகின்றன? எத்தனை பால் வீதிப்பாதைகளை நமது விஞ்ஞானிகள் படமெடுத்துக் காட்டுகிறார்கள்? அத்தனை கோள்களிலும் அற்புதமாக விளங்குவது உலகம். உலகம், உயிர்கள், உறவுகள், உணர்வுகள் என்ற நிலைக்கு அத்தனை கோள்களும் தேவைப்படுகின்றன. எத்தனையோ வெற்றிடங்கள் இணைந்துதான் பூமி என்ற இவ்விடத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

இந்த உலகத்திலும் எத்தனை எத்தனை உயிர் வடிவங்கள்! எத்தனை எத்தனை உயிரற்ற பொருட்கள்! இவை அத்தனையும் இணைந்து, 'மனிதன்' என்ற அறிவு ஜீவனை வாழவைக்கின்றன. ''அரிது அரிது மானி டனாய் பிறப்பது அரிது'' என்று கவிஞர் சொன்ன தின் அர்த்தங்களை ஓரளவு மனிதன் புரிந்து கொள்ள முடிகிறது. எத்தனையோ ஜீவராசிகளின் தியாகத்தில் மனித உயிர் ஒவ்வொரு மணித்துளி யும் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்த மனிதனிடத்தில்தான் எத்தனை புதிர்கள்! புதுமைகள்? ஒரு மனிதன் எதை எண்ணுகிறான்! எதைச் செய்ய விழைகிறான் என்பதை யாருமே கணித்துவிட முடியாது என்று சமூக அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அற்புதமான பல்வேறு சக்திகளைக் கொண்டது மனித வாழ்க்கை. இருப்பினும் மனிதன் நினைப்பதை எல்லாம் சாதித்து விட முடியவில்லை. மனிதன் சாதிப்பதையெல்லாம் சரித்திரமாக்கிவிட முடியவில்லை.

பங்குச் சந்தையைவிடப் படுவேகமாக மனித வாழ்க்கை முறைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. எதையோ தேடும் நேரத்தில் வேறு எதுவோ கிடைக்கிறது. மனிதக் கண்டுபிடிப்புகள் எல்லாம் வியப்பில் விளைந்த லாபங்கள் தான்.

மனித வாழ்க்கையின் எல்லைகள் குறுகியவை என்றாலும் அந்த எல்லைகளுக்குள்ளே எண்ணில் லாத பரிமாணங்கள்! மனித வாழ்வின் ஒவ்வொரு கண் இமைப்பொழுதும் அதிசயங்கள். ஒவ்வொரு கணங்களும் யுகங்களே. ஒவ்வொரு நிகழ்வுகளும் காவியங்களே. வையத்துள் வாழ்வாங்கு வாழுதல் என்பது இந்த அற்புதமான மனித வாழ்க்கையை முற்றிலுமாக அனுபவிப்பது. அகன்று செல்லும் ஆதங்கத்தை விட்டு விட்டு ஆழ்ந்து செல்லும் கூரிய நோக்கைப் பெறுவது.

விசுவாசிகள் மன்றாட்டு

ஆற்றலான இறைவா, எங்கள் வாழ்க்கையில் சந்திக்கும் சவால்கள், குழப்பங்கள் நிறைந்த சூழ்நிலையில் தூய ஆவியானவரே, நீர் தாமே எங்களை சரியான பாதையை, உண்மையை நோக்கி வழிநடத்த வேண்டுமென்று ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

தேவை இறைவன்

இவ்வாறு ஆழ்ந்து சென்று மனித வாழ்க்கையை அனுபவிக்கத் துடிக்கும்போது 'இயலாமை' என்ற ஒன்று தலை தூக்குகிறது. 'சூப்பர்மேன்' ஆக மாற முடியவில்லையே என்ற ஏக்கம் எழுந்து வருகின்றது.

லார்வின் சக்திகளைத் தந்து விட்டு வாழ்வை முழுமையாக அனுபவிக்க விடாமல் செய்வதில் அந்த ஆண்டவனுக்குத்தான் என்ன இலாபம்? காணும்போது களிப்பைத் தந்த வாழ்க்கை ஏன் கானல் நீராகத் தென்படுகின்றது?

இங்கேதான் வாழ்க்கையின் ஊற்றாகிய இறைவன் வந்து தோன்றுகிறான். இறைவன் மனிதனைப் படைத்தது தம்மோடு உறவு கொண்டு தன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்வதற்காக என்ற உண்மை தெரிகிறது. இறைவனோடு தொடர்பு வைத்துக்கொள்ளாவிட்டால் இந்த வாழ்க்கை பாதியில் தொங்கும் பாலம்தான்.

தேடும் தலைவன்

மனிதன் தேடுவதைவிட மனிதனைத் தேடுபவன் இறைவன் என்ற உண்மை அனுபவசாலிகளை அதிர வைக்கின்றது. முழுமையான வாழ்க்கையைப் பெறுவதற்காக மனிதன் இறைவனைத் தேடிக் கொண்டிருக்கிறான் என்பது உண்மைதான். அதைவிட மேலாக, அந்த இறைவனே ஆக்க பூர்வமான அனுபவங்களைத் தந்து மனிதனைத் தன்பால் ஈர்த்துக்கொண்டிருக்கிறார்.

- அருட்தந்தை வலண்டின் ஜோசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் வேண்டும்

விசுவாசிகள் மன்றாட்டு

அன்பின் இறைவா, உமது திருமகன் விண்ணேற்பு அடையும்போது கொடுத்த கட்டளையை ஏற்று திருத்தூதர்கள் வழியாக இந்நாள் வரை நற்செய்தி அறிவிப்புப் பணியை ஆற்றி வரும் திருச்சபையை ஆசீர்வதித்து, இன்னும் இயேசுவைப் பற்றி அறியாதவர்கள் அனைவருக்கும் விரைவில் நற்செய்தியை அறிவிக்க ஆற்றலைத் தரும்படி ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் இயேசு அனைவருக்கும் நண்பர். இல்லங்களைச் சந்திப்பதில், அங்கே உணவு உண்பதில் எல்லையில்லா இன்பம் கண்டார்!

ஒருநாள் ஓர் இல்லத்திற்குச் சென்றார். மார்த்தா, மரியா, லாசர் ஆகிய மூன்று பிள்ளைகள் அங்கே! லாசர் வெளியில் சென்றிருந்தார். இயேசுவின் வருகையால் மார்த்தா திக்குமுக்காடிப் போனார். அதனால், அவருக்கு ருசியான நல்ல உணவு தயாரிப்பதில் பரபரப்பானார்.

ஆனால், அவரது தங்கை மரியாவோ இயேசுவின் போதனையிலும் சிந்தனையிலும் லயித்துப் போனார். எனவே, அவரது பாதத்தில் அமர்ந்து, இயேசுவின் வார்த்தைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

இதனால் மார்த்தா எரிச்சலடைந்தார்.

இயேசுவிடம் புகார் செய்தார். ''எனக்கு உதவி செய்ய மரியாவிடம் சொல்லுங்கள்'' என்று இயேசுவிடம் கூறினார்.

ஆனால் இயேசு மார்த்தாவிடம் சொன்னார்.

''மரியா செய்வது நல்லது. பாராட்டுக்குரியது. அதை நாம் உற்சாகப்படுத்தவேண்டும். தடை செய்யக்கூடாது!''

விருந்தோம்பலை இயேசு ஏற்றுக்கொண்டார். ஆன்மீக வாழ்வை உயர்வாக மதித்தார்.

கற்போம்! கடவுள் மீது நாம் கொண்டுள்ள அன்பு சேவையிலும் செபத்திலும் வெளிப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கர்த்தரின் மகிமை



என் பெயர் பிரான்சிஸ் ஜெய பால் சிங். என் மனைவி பெயர் குளோரி பிரான் சிஸ். நாங்கள் இருவரும் நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவின் மிஷ னரிகளாக தென் பீஹாரில் ஊழி யம் செய்து வந்த ஆரம்ப நாட்கள் அது. யாரிடமும், எங்கிருந்தும் கடன் வாங்கக் கூடாது. தேவனை மட்டுமே சார்ந்து வாழ வேண்டும் என்பது எங்களது கொள்கை.

ஒரு நாள் ஒரு கப் கோதுமை மாவைத் தவிர உணவு சமைக்க வேறொன்றும் வீட்டில் இல்லை. அதனால் நானே அடுத்த நாளை உபவாச நாளாக அறிக்கை செய்து, ஜெபிக்கத் தொடங்கி னேன். ஜெப நேரத்தின்போது ஆண்டவர் என் பெயரைச் சொல்லி அழைத்து, ஒரு கிராமத்திற்கு சென்று ஊழியம் செய்யும்படி சொன்னார். நானோ சாக்குப் போக்குச் சொல்லிக்கொண் டிருந்தேன். ஆண்டவர் மூன்று முறை பேசியபின் மிக தெளிவான மற்றும் உறுதியான குரலில் சொன் னார், "If you take care of my business, I will take care of your business".

உடனே அவர் சித்தத்திற்கு கீழ்ப்படிந்தவனாய் என்னுடைய சக மிஷனரியுடன் அக்கிராமத் திற்குச் சென்று கூட்டம் நடத்தி முடிந்தவுடன், ஏறக்குறைய 55 வயது மதிக்கத்தக்க ஒரு வயதான பெண்மணி, நாங்கள் எடுத்துச் சென்றிருந்த சுவிசேஷப் பங்குகள் கொண்ட சிறிய பாக்கெட்டைக் கேட்டார்கள். ஒரு சுவிசேஷப் பாக்கெட் 25 பைசா என்றேன். ''ஐயோ, என்னிடம் காசு இல்லை. ஆனால் வயலில் இந்த நாள் முழு வதும் உருளைக்கிழங்கு அறு வடை செய்ததற்கு கூலியாக கிடைத்த 8 கிலோ உருளைக் கிழங்கை வைத்துக் கொண்டு, அந்த சுவிசேஷப் பாக்கெட்டை எனக்குத் தா'' என்று கூறி, என்னு டைய தோள் பையில் தனது மடி யிலிருந்த உருளைக்கிழங்கை நிரப்பினார்.

வேறொரு வயலில் உள்ள பணியாளரும், அவர் பணி செய்த நிலத்தில் விளைந்த இரண்டு காலி பிஃளவரை என்னிடம் கொடுத்து, ஒரு சுவி சேஷப் பாக்கெட்டை வாங்கிச் சென்றார். வீட்டிற்கு வந்த நான் என் மனைவி யிடம், காய்கறிகளை சமைத்து, இருக்கும் கோதுமை மாவில் இரண்டு சுக்கா ரெட்டிகளை செய்து, ஆளுக்கொன்று சாப்பிடலாம் என்று சொன்னேன்.

அந்நேரத்தில் திருமணமா காத இரு மிஷனரி சகோதரர் கள் வந்தார்கள். ''சாப்பிட்டீர் களா''? என்றேன். ''நீங்கள் இருக்கும்போது வெளியே சாப்பிடுவோமா?'' என்றனர். இரண்டு ரொட்டியை வைத்து எப்படி இவர்களை உபசரிப் பது என்று எண்ணி, உள் அறைக்குச் சென்று, ''இயே சுவே எனக்கு உதவி செய் யும்'' என கண்ணீரோடு ஜெபித்து விட்டு, என் மனை வியிடம், இருக்கும் ரொட் டியை பரிமாறச் சொன்னேன்.

அவர்களும் ஆளுக் கொரு ரொட்டி எடுத்ததும், மூன்றாவது ஒரு ரொட்டி இருந்ததால் என் மனைவி 3 ரொட்டி செய்திருக்கிறார் என நினைத்து, நானும் ஒரு ரொட்டி எடுத்தேன்.

நான் எடுத்தப் பின்னும் இன்னும் ரொட்டி இருந்தது. நாங்கள் மூன்று பேரும் ஆளுக்கு 8 ரொட்டிகளும், என் மனைவி 5 ரொட்டிக ளுமாக திருப்தியாக சாப் பிட்ட பின், ரொட்டி வைக்கப் பட்டிருந்த துணியை விரித் துப் பார்த்தோம். அவள் தயார் செய்த 2 ரொட்டிகளும் அப்படியே இருந்தன.

5 அப்பம் 2 மீனைக் கொண்டு 5000 பேரை போஷித்த, அற்புதத்தை எங் கள் வீட்டிலேயே பார்த்ததும், ஆண்டவர் எந்த சூழ்நிலையி லும் நம்மை போஷிக்க வல் லவர் என்பதைத் தெரிந்து கொண்டோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

– சகோ. பிரான்சிஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஜெயமோ கர்த்தரால் வரும்

ஞானத்தின் உறைவிடமானவர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் சொல்லுகிறார். 'பயப்படாதே. நான் உனக்குத் துணை நிற்கிறேன். நீ எழுதப் போகிற பரீட்சையில் நான் துணை நிற்கிறேன்.'

பரீட்சை வந்தாலே இன்றைக்கு பயம் தான். பயம் அநேக தோல்விகளைத்தான் கொண்டு வருகிறது. நாம் பயப்படாமல் இருந்தாலும் நம்மைச் சுற்றியிருக்கிறவர்கள் பயப்பட வைத்திடுவார்கள்.

பெற்றோர் எதிர்பார்க்கிற மதிப்பெண் நான் எடுப்பேனா? நான் சித்தியடைந்திடுவேனா? என்று பல கேள்விகள் இருப்பதால், வீணாகப் பயந்து படிக்க முடியாமல் இருக்கலாம். நான் உனக்கு உதவி செய்ய துணை நிற்கிறபடியால் நீ பயப்படாதே என்று சொல்லுகிறார். நீ பலவீனமானவன் என்று எனக்குத் தெரியும். ஞாபக சக்தி உனக்கு இல்லை என்று எனக்குத் தெரியும். அதனால்தான் நான் உனக்கு துணை நிற்கிறேன் என்று இயேசு சொல்லு கிறார். இயேசு நமக்குள் வந்துவிட்டால் இந்த பயம் நம்மை விட்டு விலகிவிடும்.

குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும். ஜெயமோ கர்த்தரால் வரும் என்று நீதி 21:31இல் வேதம் சொல்லுகிறது. நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஜெயம் ஆண்டவரிடமிருந்து வருவது உண்மைதான்.

வேத வார்த்தையின்படி குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக வேண்டும். நம் பக்கத்தில் சரியாக இருந்தோமானால் இயேசுவும் நமக்கு உதவி செய்வார். சிலர் படிக்க உட்கார்ந்தால் வீண் சிந்தனை உள்ளத்தில் வருகிறது. வீண் சிந்தனையினால் பயம் வந்துவிடுகிறது. அதனால் பாடப் புத்தகத்தைப் பார்த்தாலே பயம் வந்து விடுகிறது.

படிப்பிலே கவனம் செலுத்துவதற்கு ஆண்டவர் உதவி செய்வார். ஆனால் சிலர் இன்றைக்கு என் குடும்பத்தில் பிரச்சினை அதனால்தான் என்னால் படிக்க முடியவில்லை என்ற கவலை. பிரியமானவர்களே ஆண்டவர் உதவி செய்வார். எல்லா பாரத்தையும் அவர் மேல் வைத்து விடுங்கள்.

ஒரு மகள் அருமையாக சாட்சி சொன்னாள்.

நான் படிப்பதற்கு முன்பு ஜெபம் செய் வேன். வேதம் வாசிப்பேன். அதனால்தான் என்னால் படிக்க முடிகிறது என்று சொன்னாள். அதே மாதிரி ஒரு சின்ன ஜெபம் செய்யுங்கள். ஆண்டவரே நான் படிக்கப் போகிறேன். எனக்குப் புரிய வையுங்கள். நல்ல ஞாபக சக்தியைத் தாருங்கள் என்று ஜெபித்துவிட்டுப் படிக்க செல்லுங்கள். வேதத்திலிருந்து ஒரு அதிகாரத்தைச் சத்தமாகப் படியுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். கட்டாயமாக வித்தியாசத்தைப் பார்க்க முடியும்.

இரண்டு மணிநேரம் படித்து புரியாமல் இருந்த பாடத்தை தேவன் புரியவும், மனதில் தங்கவும் கிரியை செய்வார். நீங்கள் படிக்காமலோ, வேதம் வாசிக்காமலோ, ஜெபிக்காமலோ இருந்தால் ஆண்டவர் எப்படி உதவி செய்வார்?

ஒரு மகள் சொன்னாள், ''இரவெல்லாம் படிக்கி றேன். காலையில் எழுந்தால் எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன், கவனமாகத்தான் படிக்கி றேன்'' என்று சொன்னாள். அந்த மகளுக்காய் நான் ஆண்டவரிடத்தில் ஜெபித்தேன். 'ஆண்ட வரே இந்த மகளுக்கு உதவி செய்யும் நல்ல படிக்க வேண்டும் என்று விரும்புகிற மகள்' என்று ஜெபித்து அனுப்பினேன். சில நாட்கள் சென்று அதே மகளும் தாயாரும் வந்தார்கள். மிகுந்த மகிழ்ச்சியோடு வந்தார்கள். என்ன ஒரு ஆச்சரியம், ஜெபித்துச் சென்றதிலிருந்து நல்ல ஞாபகசக் தியை கொடுத்திருக்கிறார். அதிக மதிப்பெண்கள் எடுத்திருக்கிறாள் என்று சொன்னார்கள். அந்த மக ளுக்கு உதவி செய்த ஆண்டவர் நிச் சயமாய் உங்களுக்கும் உதவி செய் வார்.

வீணாக நாட்களைக் கடத்தாமல் இதுவரையில் நீங்கள் எப்படி இருந் தாலும் பரவாயில்லை. இனிமேல் நீங் கள் படிக்கும் முன்பு ''என்னால் ஒன் றும் செய்ய முடியாது இயேசப்பா. நீங்கள் எனக்கு உதவி செய்யுங்கள்'' என்று ஜெபித்துவிட்டுப் படிக்க ஆரம் பியுங்கள். நிச்சயம் உங்களுக்கு ஆண் டவர் உதவி செய்வார். எந்தப் பாடம் உங்களுக்கு கஷ்டமாயிருக்கிறதோ அந்தப் பாடத்தை வெறுக்காத படி அதை நேசித்து அதற்காய் ஜெபித்துப் படிக்க வேண்டும். நீங்கள் என்ன விரும்பி கேட்கிறீர்களோ அதைத்தான் ஆண்டவர் உங்களுக்குச் செய்வார். நான் சித்தி யடைந்தால் போதும் என்று நினைத்துக் கேட்டால் அதைத் தான் ஆண்டவர் கொடுப்பார்.

கேட்கும்பொழுது அதிகமாகக் கேட்க வேண் டும். உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ள வனாய் இருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாத வருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன். (பாக்: 1:5) சந்தேகப்படாமல் கேட்க வேண்டும்.

ஆண்டவர் எனக்கு ஞானம் தருவார் வெற்றி தருவார் என்று கேட்கும்போது உங்களுக்கு நிச்ச யமாகத் தருவார்.

ஒரு சமயம் குஜராத் மாநிலத்திற்கு ஊழியத் திற்காய் சென்றிருந்தபோது படிப்பறிவில்லாத ஒரு சகோதரரைச் சந்திக்க நேர்ந்தது.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர் அவர் பள்ளிக்கூடம் போனதேயில்லை. படிக்கவும் தெரி யாது. அவருக்கு திருமணமாகி அவர் குழந்தையை பள்ளியில் விட்டு வரும் வழியில் ஒரு வீட்டில் இயேசுவைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்ததை இவர் கேட்டு, 'ஐயோ எனக்கு படிப்பறிவில் லையே... நான் படித்திருந்தால் இந்த நல்ல வேத புத்தகத்தை நான் படித்திருக்கலாமே எவ்வளவு ஆசீர்வாதம் வந்திருக்கும்' என்று நினைக்கிற பொழுது அவருக்கு ஒன்று ஞாபகம் வந்தது. இயேசு அற்புதம் செய்கிறவர் தானே அதிசயம் செய்கிறவர் தானே. அப்படியானால் அந்த ஆண் டவரால் எனக்கு ஏன் ஞானத்தைக் கொடுக்க முடியாது?'' என்று யோசித்தார்.

குஜராத் மொழியில் நான் ஏன் இந்த வேதத்தை வாசிக்கக் கூடாது என்று இந்த படிப்பறிவில்லாத மனிதனுக்குள் ஒரு விசுவாசம் வந்தது. உடனே போய் வேதத்தை வாங்கி ஆலயத் திற்கு வரும் போது வேதத்தை எடுத்து வருவார். வேதாகமத்தில் என்ன இருக்கிறது என்று அந்த மனிதருக்குத் தெரியாது. 3 நாட்கள் உபவாசித்து எனக்கு ஞானத்தைக் கொடுக்க வேண்டும், நான் இந்த வேதத்தை படிக்க வேண் டும் என்று தாகத்தோடு ஜெபித்து விட்டு 3 ஆவது நாள் வேதத்தை திறந்து பார்த்த அவருக்கு ஒரே ஆச்சரியம். அதில் இருக்கும் அனைத்து வார்த் தைகளும் அவருக்கு நன்றாகப் புரிய ஆரம்பித்தது. வேத வசனத்தைப் படிக்க ஆரம்பித்தார். இன்றைக்கு அவர் பிரசங்கம் பண்ணுகிறார். என்ன ஆச்சரியம் பாருங்கள். விசு வாசத்தோடு கேட்டபொழுது ஒரு மொழி யையே கற்றுக்கொடுத்திருக் கிறார். அவருக்கு ஞானத்தைக் கொடுத்த ஆண்டவர் உங்களுக்கு செய்ய மாட்டாரா? கண்டிப்பாகச் செய்வார். மனுஷர் தயவை உண்டாக்கித் தருவார்

இயேசு மனுஷர் தயவில் விருத்தியடைந்தார் என்று வேதம் சொல்லுகிறது. படித்து பரீட்சையில் எழுதி முடித்தால் போதாது. அது யாரோ ஒருவர் கையில் போய்த்தான் திருத்த வேண்டும். அந்த மனுஷர் கண்களில் தயவு கிடைக்க ஜெபம் வேண் டும்.

ஆண்டவரைத் தேட வேண்டும், தேடும்போது மனுஷர் கண்களில் தயவு கிடைக்கப் பண்ணுவார். நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் உண்மையாய் ஆண்டவரைத் தேடவேண்டும். அப்படி நீங்கள் செய்யும்போது இயேசு உன் வகுப் பறைக்குள் வந்து உன் கரம் பிடித்து எழுத வைப்பார். உங்களை உயர்ந்த இடத்தில் வைப் பார். உங்களுக்கு வெற்றி தருவார்.

தேவகிருபை உங்களோடு இருக்கும். இயேசு உனக்குத் துணை நிற்பார்.

- மோகன் சி. லாசரஸ்

விசுவாசிகள் மன்றாட்டு

மூவொரு இறைவா,
நீர் ஒன்றாயிருப்பது
போல் உமது
மக்களாகிய நாங்களும்
ஒன்றுபட்டு
ஒருவரையொருவர்
தாங்கும் சமூகமாக
இணைந்து சாட்சிய
வாழ்வு வாழ
அருள்புரியும்படி
ஆண்டவரே, உம்மை
மன்றாடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்பட்டா கிறிஸ்மஸ்!

பெத்தலகேம் சபை ஒரு சிறிய சபைதான். அங்கேயுள்ளவர்கள் ஒரே சம்பாத்தியத்திலும் கடன் படாது குடும்பத்தை நடத்தி வந்தார்கள்.

சபையில் இந்தக் குடும்பத்தைப் பற்றி புகழ்ந்து பேசிக்கொள்வார்கள். வேதமுத்து குடும்பத்தார் கடன்வாங்காது தன் குடும்பத்தை எவ்வளவு சுருக்கமாக நடத்திக்கொள்ள வேண்டுமோ, அவ்வளவு நடத்திக்கொள்வார்கள்.

கடன் வாங்குவதை அவர்கள் ஒரு பாவமாகவே கருதினர். ஒவ்வொரு ஆண்டும் அவர்கள், தங்களுக்குக் கிடைக்கும் போனஸ் பணம் எல்லாவற்றையும் பத்திரமாக வைத்துக்கொண்டு கிறிஸ்மஸ் பண்டிகையை அந்தப் பணத்துக்குள் சுருக்கமாகக் கொண்டாடிக் கொள்வார்கள்.

இவ்வாண்டு தாமதாகவே போனஸ் போட்டார்கள். இவ்வாண்டு புது உடைகள் எடுக்கமுடியாது. ஆகவே இவ்வாண்டு பழைய துணியுடன் ஆராதனைக்குப் போவோம் எனத் தீர்மானித்தனர்.

இவைகளை அறிந்த பக்கத்து வீட்டாரும் மற்ற அறிமுகமானவர்களும் ''சில துணிக் கடைகள் பெயரைச் சொல்லி, அங்கே நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள். நாங்கள் அங்கே சொல்லுகிறோம் துணி கொடுப்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அதைக் கட்டி விடலாம்'' என்றார்கள்.

அநேகர் சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு காதில் வாங்கி மற்றொரு காதில் விட்டு விட்டு, இப்படிப்பட்ட தேவையற்றவைகளை மற்றொரு காதின் மூலம் விட்டுவிடவே தேவன் இரண்டு காதுகளை கொடுத்துள்ளார் போலும். அதே சமயம் தேவ காரியங்களை ஒரே காதில் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். எனவேதான் ஆண்டவரும் காதுகள் உள்ளவன் எனக் கூறாமல் காதுள்ளவன் எனக்கூறியுள்ளார் என தன்னில் தானே வேதமுத்து எண்ணிக் கொண்டான்.

பண்டிகை வந்தது. எல்லா வீடுகளும் உற்சாகமாய் காணப்பட்டது. ஆனால் வேதமுத்து வீடு மட்டும் எப் போதும் போல் காணப்பட்டது. ஆராதனைக்கு எல்லாரும் புது உடைகளை உடுத்தி உற்சாகமாகப் போய்க் கொண்டே இருந்தார்கள். ஆனால், வேதமுத்துவின் பிள்ளைகள் 'நாங்கள் ஆலயம் வர மாட்டோம். எங்களுக்கு புது உடை இல்லை. ஆகவே எல்லாரும் எங்களைப் பார்ப் பார்கள்' எனக்கூறி மறுத்து விட்டார்கள். வேதமுத்துவின் மனைவியும் தனக்கும் புடவை இல்லாததைத் தன் கணவனிடம் காட்டிக்கொள்ளாதபடி, 'பிள்ளைகளை வீட்டில் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் மட்டும் போய் வாருங்கள்' எனக்கூறி அவளும் வீட்டில் இருந்துவிட்டாள்.

வேதமுத்து பெட்டியில் உள்ள தேய்த்து வைத்திருந்த பழைய உடுப்புகளை போட்டுக் கொண்டு எப்போதும் போல ஆராதனைக்கு முன்னதாகவே போய்விட்டார்.

போதகர், 'என்ன வேத முத்து, நீ மட்டும் வருகிறாய். அதுவும் பழைய உடை. என்ன விஷயம். சாதாரண உடையானாலும் புது உடையுடன் குடும்பத்துடன் வருவாயே என்ன காரணம்' என்று வினவினார்.

வேதமுத்து உடனே தன்னுடைய போனஸ் தாமதமாய் வருவதால் இப் படி வந்து விட்டேன் என விஷயத்தைச் சொன்னார். போதகர், 'என்ன காரியம் செய்தாய்? என்னிடம் சொல்லி இருந்தால், உனக்கு நமது சபையில் யாரும் கடன் கொடுப்பார்களே, போனஸ் வந்த உடனே கொடுத்துவிடலாமே' என்றார்.

'ஐயா, கடன் வாங்குவதை நான் ஒரு பாவம் என்றே நினைக்கிறேன். தாங்களும் கடன் வாங்குவது தவறு என அவ்வப்போது மக்களை எச்சரிப்பது நல்லது' என்றான். போதகர் உடனே, 'நீ சொல்வது உண்மைதான்.

விசுவாசிகள் மன்றாட்டு

இரக்கத்தின் இறைவா,

பழைய பாவ இயல்புகளைக் களைந்து புதிய வாழ்வுக்கு மனம் திரும்ப அருள்புரியும் படி ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்தப் பண்டிகைக்கு பாதி மக்கள் எந்தவகையிலாவது கடன் வாங்கித்தான் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். சரி. நேரம் ஆகிறது' என போதகர் கூறிவிட்டு ஆராதனை நடத்தினார்.

ஆராதனையின் முடிவில் அவர், 'வேதமுத்து வைப்போல் கடன் படாது பண்டிகையைக் கொண் டாடுவது நல்லதொரு சாட்சி. அவர் மனைவி, பிள்ளைகள் புதுத் துணி இல்லை என்று வீட்டி லேயே இருந்துகொண்ட போதிலும் வேதமுத்து பழைய துணியோடே வந்துவிட்டார்' என்றார்.

கூட்டத்தில் பின்னால் உட்கார்ந்திருந்த வேத முத்துவின் மனைவி, பிள்ளைகள் முன்னால் வந்து போதகரிடம் தனக்கு நடந்த காரியத்தை சாட்சி யாகச் சொல்ல அனுமதி கேட்டு கொண்டார்கள்.

'அன்பானவர்களே! நானும் என் கணவரும் கடன் வாங்காதபடி சிக்கனமாய் வாழ்ந்து வந் தோம். ஆனால் பழைய துணியுடன் ஆலயத்திற்கு வரக் கஷ்டப்பட்டு பிள்ளைகளுடன் வீட்டில் இருந்துகொண்டேன். வீட்டில், பழைய கிறிஸ்மஸ் செய்தி கேசட்டை போட்டு கேட்டுக்கொள்வோம் எனத் தீர்மானம் செய்து கேசட்டை போட்டு கேட் டோம். அந்த செய்தியில் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உலகில் உள்ள எல்லா புதுத் துணிகளும் அவருடையதே. அப்படி இருந்தும் தாம் உலகில் வந்தபோது மரியம்மாளுக்கு பழைய துணிதான் கிடைத்தது. நமது ஆண்டவர் முதல் கிறிஸ்மஸ் பண்டிகையைப் பழைய துணி யோடு தான் கொண்டாடினார். ஆனால் இன்று அனேகர் புதுத் துணி இல்லாவிட்டால் ஆலயம் செல்லாது, வீட்டிலேயே இருந்து விடுகிறார்கள் என்ற செய் தியைக் கேட்டவுடன் நானும் என் பிள்ளைகளும் உணர்த்தப்பட்டு ஆராதனைக்கு வந்துவிட்டோம்' என்றாள்.

இதைக்கேட்டு சபைக்குப் புத்தாடையுடன் வந்தவர்கள் வேதமுத்துவின் குடும்ப சாட்சியால் உணர்த் தப்பட்டு வீடு சென்றார்கள்.

-என்.டானியல் தாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை அறிந்து போஷிப்பார்!

நடுத்தர வயதுடைய பயணி ஒருவர், கப்பல் ஒன்றில் அமெரிக்க தேசத்தை நோக்கிப் பயணமாக ஆயத்தப்பட்டார். 10 நாட்கள் செல்லவேண்டிய அந்தப் பயணத்தின் தேவைக்காக ரொட்டி மற்றும் சில உணவுப் பண்டங்கள் வாங்கி, அதை 10 பாகங்களாக பங்கிட்டு தன்னுடனே எடுத்துக் கொண்டு பயணமானார்.

பயணத்தின்போது ஒவ்வொரு நாளும் தன் வசம் இருந்த ரொட்டியை சாப்பிடும்போது, மற்ற பயணிகள் கூடி உட்கார்ந்து அறுஞ்சுவை உணவு உண்பதை அவர் கண்டார். பயணத்தின் கடைசி நாளில் தன்னிடம் இருந்த கடைசி ரொட்டியை



சாப்பிட்டு விட்டுத் திரும்பும்போது, கப்பல் பணியாளர் அவரைப் பார்த்து, ''ஐயா! நீங்கள் தினம் ரொட்டித் துண்டை மாத்திரம் சாப்பிடுவதை கவனித்தேன். நீங்கள் ஏன் மற்ற பயணிகளைப் போல கப்பலில் வழங்கப்பட்ட உணவை எடுத்துக்கொள்ளவில்லை? நீங்கள் வாங்கியிருக்கும் பயணச் சீட்டில் உணவிற்கான தொகையும் வசூலிக்கப்பட்டுள்ளதே'' என்பதைச் சொன்னார்.

அப்பொழுதுதான் அந்தப் பயணிக்கு தான் எவ்வளவு முட்டாள்தனமாக 10 நாட்களும் காய்ந்த ரொட்டியைச் சாப்பிட்டு, இலவசமாய் வழங்கப்பட்ட அறுஞ்சுவை உணவை இழந்தோம் என்று எண்ணி நொந்து போனார்.

இதேபோல்தான் அகில உலகத்தையும் படைத்த பிதாவாகிய தேவன் இந்த பூமியிலே சகல செல்வத்தையும், பொக்கிஷத்தையும், உணவு தானியங்களையும், கனி வளங்களையும் நமக்காகப் படைத்து அதை அனுபவிக்கும் உரிமையையும் நமக்கு கொடுத்திருந்தாலும் அநேக நேரம் நாம் அதை உணராமல், நாளைய தினத்திற்காக ஏங்கித் தவிக்கிறோம். கர்த்தர் நமக்காக ஏற்கனவே ஏற்படுத்தி இருக்கும் பொக்கிஷங்களை மறந்து, அதிகமாகக் கவலைப்படுகிறோம்.

தேவன் நம்மை உருவாக்கும்போது, நம்மை தேவை உள்ளவர்களாகவே உருவாக்கினார். நமது ஆதி தகப்பன் ஆதாம், ஏதேன் தோட்டத்தின் மகிமையை இழந்தபோது, மனிதன் வேர்வை சிந்தி, கடினமாக உழைத்துத்தான் சாப்பிட வேண்டும் என்கிற கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டதன் விளைவு, இன்று மானிட குலம் தன் வயிற்றுப் பிழைப்பிற் காகப் போராடுகின்றது.

ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசிக்கும் இருக்கும் ஒரே நம்பிக்கை 'கர்த்தர் நம்மை அனுதினமும் போஷிப்பார்' என்பதே.

வேதாகமத்தில் ஆண்டவருக்கு வழங்கப்பட்ட பெயர்களில் ஒன்று 'போஷிப்பவர்' என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இயேசுகிறிஸ்து உயிரோடு எழுந்து, மூன்றாவது முறை தமது சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினபோது, களைத்துப் போய் கடலில் இருந்து திரும்பின சீஷர்களுக்கு காலை உணவாக தந்தூரி மீனையும் அப்பத்தையும் கரையோரம் ஆயத்தம் செய்து காத்துக்கொண்டிருந்தார் என்று யோவான் 21:9-13 வசனங்களில் பார்க்கிறோம்.

இது ஒரு சுவாரஸ்யமான சம்பவம்.

இயேசுவோடு ஊழியம் செய்த சீஷர்கள் பின் வாங்கி தாங்கள் முன்பு செய்த கடல் தொழிலுக்கே திரும்பினபோது, சீஷர்களை உற்சாகப்படுத்தவே இயேசு பொரித்த மீன்களை ஆயத்தம் செய்து சீஷர்கள் நிறைவேற்ற வேண்டிய மாபெரும் சுவிசேஷப் பணியை நினைவுபடுத்தி அவர்களைப் போஷித்தார்.

இயேசுவோடு ஊழியம் செய்தபோது சீஷர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களுக்கு உணவைக் குறித்த கவலையே இல்லாமல் வாழ்ந்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து தங்களை விட்டுச் சென்றுவிட்டார் என்பதை அறிந்த போது அடுத்த வேளை உணவிற்காக கவலைப்பட ஆரம் பித்துவிட்டனர் என்பதைப் பார்க்கின்றோம்.

அதிகாலை வேளை சீஷர்களுக்கு மீன்கள் அகப்பட முடியாத சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து சுடச்சுட மீனையும், அப்பத்தையும் ஆயத்தப்படுத் திக் கொடுத்ததை பார்க்கும்போது, இயேசு கிறிஸ்து நமது இன்றைய சூழ்நிலையின் தேவைகளை அறிந்து நம்மைப் போஷிப்பார் என நாம் ஆணித் தரமாக நம்பலாம்.

வேதாகமத்தில் எந்த ஒரு அதிகாரத்திலும் நாளைய தினத்திற்காக சேமித்து வையுங்கள் என்று கூறப்படவில்லை. மாறாக, 'பூமியிலே உங் களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம்' என்று தெளிவாக இயேசு கிறிஸ்து மத். 6:19இல் கூறி யுள்ளார். அப்படியானால் இந்த உலகத்தில் நமது ஜீவியத்திற்காக சேமித்து வைக்க வேண்டாம் என்று அர்த்தம் இல்லை. ஒவ் வொரு நாளுக்காகவும், ஒவ்வொரு நாளின் தேவை களுக்காகவும் நாம் கவலைப் பட வேண்டியதில்லை என்ப தைத்தான் கர்த்தர் வெளிப் படையாகப் பல சம்பவங்கள் மூலம் நமக்கு உணர்த்தி உள் ளார். அதனால்தான் ''எங்க ளுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்'' என்று தமது சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார் (மத். 6:11).

கர்த்தர் மிருக ஜீவன் களுக்கும் கூப்பிடுகிற காக் கைக் குஞ்சுகளுக்கும் ஆகா ரம் கொடுக்கிறார் என்று சங் 147:9இல் வாசிக்கிறோம். காக்கை குஞ்சுகளுக்கு அவர் தினம் ஆகாரம் கொடுப்பாரானால், தமது சாயலில் உருவாக்கின மனிதனுக்கு அவர் எவ்வளவு அதிகமாகப் போஷிப்பார் என்பதை நினைத்துப் பாருங்கள்.

கேரீத் ஆற்றண்டையில் ஒளிந்துகொண்டிருந்த எலியாவிற்கு தினம் காகங்கள் விடியற்காலத் திலும், சாயங்காலத்திலும் அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்ததை நாம் 1 இரா: 17:6இல் வாசிக் கின்றோம். இந்த அற்புதத்தைக் கண்டு அனுப வித்த எலியாசாறிபாத் ஊரில் உள்ள ஏழை விதவையின் வீட்டில் இருந்த கொஞ்சம் மாவையும், கொஞ்சம் எண்ணெயையும் கொண்டு ஏழை விதவைக்கும், அவள் மகனுக்கும் பஞ்சம் தீருமட்டும் உணவளித்ததை நாம் அதே அதிகாரத்தில் வாசிக் கிறோம். ஆண்டவர் நம்மை போஷிப்பது மட்டு மல்லாமல், நம் மூலமாக பிறரையும் ஆசீர்வதிக் கிறார் என்பதை இந்தச் சம்பவத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆண்டவர் ஒவ்வொரு தனி மனிதனின் தேவை களில் அக்கறை உள்ளவராய் இருக்கிறார். நாம் இராஜாவின் பிள்ளைகள் அன்றாட தேவை களுக்காக கவலைப்பட வேண்டியதில்லை. மத். 6ஆம் அதிகாரம் 25-34 வரை வாசித்துப் பாருங் கள். இயேசு கிறிஸ்து எவ்வளவு நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளை மலைப் பிரசங்கத்தில் கூறியுள்ளார். ''நாளைக்காகக் கவலைப்படா திருங்கள், நாளைய தினம் தன்னுடை யவைக்காகக் கவலைப்படும்'' நாளைய தினத்திற்காக திட்ட மிடுவது தவறு இல்லை. ஆனால் நாளைய தினத்திற் காகக் கவலைப்படுவது நமக்கு பயத்தை ஏற்படுத்தும். நாளைய தினத்தின் கவலை, தேவனோடு உள்ள உறவை இன்றைக்குப் பாதிக்கும். மிருக ஜீவன்களுக்காக புல் முளைக்கும்படி செய்கிற கர்த் தர், நாம் சாப்பிட்டுத் திருப் தியடைவே வாஞ்சிக்கிறார் (உப 11:15).

பகலிலே மேக ஸ்தம்பத் தின் மூலமாகவும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தின் மூல மாகவும் வழி நடத்தப்பட்ட இஸ்ரவேல் ஜனத்தார் சிவந்த சமுத்திரத்தின் அற்புதத்தைக் கண்ணாரக் கண்டும், மாரா வின் தண்ணீர் மதுரமான சம் பவத்தைக் கண்டும், இறைச் சிக்காக இச்சித்த ஜனத்திற்கு, கர்த்தர் சாயங்காலத்தில் புசிக் கிறதற்கு இறைச்சியையும் (காடை), விடியற்காலத்தில் புசிக்கிறதற்கு வானத்து மன்னாவையும் 40 வருடம் கொடுத்ததை நாம் யாத்திராகம் 16ஆம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம்.

தேனிலிட்ட பணியாரம் நமக்காக ஆயத்தமாய் இருக்கிறதை மறந்து விடாதீர்கள். அதை விசுவா சத்தோடு சுதந்தரிப்பது நமது கரத்தில்தான் இருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் ஒரு வனாந்திர வாழ்க்கை நிச்சயமாக வரும். அந்த வனாந்திர பயணத்தில் தேவன் நம்மோடு சக பயணியாகக் கூடவே வருவார் என்பதை மறந்து விடாதீர்கள்.

- ரெக்ஸ் கிளமெண்ட்

விசுவாசிகள் மன்றாட்டு

சுகமளிக்கும் இறைவா, எங்கள் குடும்பத்தில், பங்கில் தீராத நோயினால் வேதனையுறும் மக்களை நீர் தொட்டுக் குணப்படுத்தி அவர்களுக்கு விடுதலையை அளித்தருளும்படி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

Digitized by Siddhanta eGangotri Foundation
CC-0. Mumukshu Bhawan Varanasi Collection.

கத்தோலிக்க கிறிஸ்தவத் திருமணம்

இதுவரை, திருமணவியலைப் பற்றி திருச்சபைச் சட்டம் கூறுவதைப் பார்த்து வந்தோம். திருமணத்தின் திருவருட்சாதனப் பண்புகளையும் திருமணத்தின் முக்கியக் கூறுகளையும் பார்த்தோம். மேலும் திருமணத்தை, செல்லாத் திருமணமாக மாற்றுகின்ற பன்னிரு தடைகளில் இரண்டைப் பார்த்தோம். மற்றவற்றைக் காண்போம்.

iii) **முந்தைய திருமணப் பிணைப்பு:** தி.ச. 1085இன் படி திருமணம் செய்த ஒருவர் மீண்டும் மறுமணம் செய்ய முடியாது. மனிதச் சட்டம், திருச்சபைச் சட்டத்தையும் (Ecclesiastical law) தாண்டி இறைச் சட்டத்திற்கு (divine law) உட்பட்டது (மத் 19:6). முந்தைய திருமணத் தம்பதியரில் ஒருவரின் இறப்புக்குப் பின்னரே திருச்சபையில் திருமணம் புரிய அனுமதி உண்டு. திச. 1085இல் மேலும் ஒரு அம்சத்தைத் திருச்சபைச் சட்டம் குறித்துக் காண்பிக்கின்றது.

''முந்தைய திருமணப் பிணைப்பில் கட்டுண்ட ஒருவர், அத்திருமணம் தாம்பத்திய உறவால் முழுமையடைவில்லை என்றாலும்கூட செல்லா நிலை திருமணம் செய்ய அவர் முயற்சி செய்கின்றார்.''

கிறிஸ்தவத் திருமணத்தில் அத்திருமணம் தாம்பத்திய உறவால் நிறைவு செய்யப்படவில்லை என்றால் போப்பானவரின் வழியாக அதைச் 'செல்லாத் திருமணம்' என்று அறிவித்து மணமக்களுக்கு சுதந்திரம் அளிக்கலாம். (தி.ச. 1142) திருச்சபையின் மேலதிகாரத்திலிருந்து முந்தைய திருமணத்தைச் 'செல்லாத் திருமணம்' என்று அறிவித்த பின்னர்தான் மறுதிருமணம் செய்ய முடி யும்.

ஆக, தி.ச. 1085இன் படி 'எம்முறையிலோ' திருமணம் செய்த ஒருவர் மீண்டும் இரண்டாம் திருமணம் செய்ய முடியாது. நமது மேய்ப்புப் பணியில் மேற்கூறிய திருமணப் பிரச்சினை எழுவது இயல்பு. முக்கியமாக ஊர்க் கட்டுப்பாடு, கிராமப் பஞ்சாயத்து உள்ள இடங்களில் இவை எழலாம்.

உதாரணமாக, ஒரு கிறிஸ்தவர் இந்துப் பெண்ணை ஊர் வழக்கப்படி பெரியவர்கள் முன்னிலையில் மாலை மாற்றிக் கொள்கின்றார். திருமணம் முடித்து குடும்பமாக வாழ்ந்து சிறிது காலத்துக்குப் பின் கருத்து வேறுபாடு ஏற் பட்டு ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் இருவரும் சேர்ந்து சம்மதித்து, அத்திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டு பங்குத்தந்தையிடம் நேராக வந்து அந்தக் கிறிஸ்தவர், திருச்சபை முறைப்படி திருமணம் செய்துகொள்ள அனுமதி கேட்கிறார் என வைத்துக்கொள்வோம். என்ன செய்வது? அவர் திருமணத்துக்காக எடுத்து வைக்கும் வாதங்கள் இதோ:

1) நான் திருச்சபை முறைப்படி திருமணம் செய்யவில்லை. ஆகவே அது திருமணம் அல்ல. 2) அத்திருமணத்தையும் ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் வெட்டிவிட்டேன். ஆகவே நான் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் புரிய வேண்டும்.

திருச்சபைச் சட்டம் 1085 சொல்வது என்ன? இரண்டாம் திருமணம் திருச்சபையில் அனுமதிக்கப்படுவதில்லை. முந்தைய திருமணம் எந்த வகையில் நடந்திருந்தாலும் கூட முந்தைய திருமணப் பிணைப்பு இருக்கும்வரை அதாவது தம்பதியர் இருவரும் உயிரோடு இருக்கும் வரை மறு திருமணம் செய்யத் திருச்சபையில் அனுமதியில்லை. அது திருவருட்சாதனத் திருமணமாக (இரண்டு திருமுழுக்கு பெற்ற கிறிஸ்தவர்கள்) இருந்தாலும் சரி அல்லது சாதாரண திருமணமாக (கிறிஸ்தவரும், கிறிஸ்தவரல்லாதவரும்) இருந்தாலும் சரி. திருமணப் பிணைப்பு இறைச்சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுவதால் மறுதிருமணம் செய்ய முடியாது.

ஆனால் முந்தைய திருமணப் பிணைப்பால் கட்டுண்ட இரு கிறிஸ்தவரல்லாதோரில் 'பவுலடியார் சலுகை' மூலம் (1 கொரி 7:12-15) அதில் ஞானஸ்நானம் பெற்ற ஒருவர் திருமணம் செய்ய முடியும் (தி.ச. 1143). அதேபோல 'பேதுருவின் சலுகை' மூலம் பிற மதத்தினரைத் திருமணம் செய்த ஒரு கிறிஸ்தவர் போப்பாண்டவரிடமிருந்து அனுமதி பெற்று திருச்சபை முறைப்படி திரு மணம் புரியலாம் (திச 1149) இத்தகைய சலுகை களில் பல நிபந்தனைகள் உள்ளன.

iv) மதக்கலப்புத் திருமணம்

திச. 1086இன் படி ஒரு கிறிஸ்தவர் பிற சம

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யத்தினரோடு செய்துகொள்ளும் திருமணம் செல்லாத் திருமணம். இதைத் திருச்சபைச் சட்டம் மனிதர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. மனித மனங்கள் ஒன்றிணைந்த பின்னர், சமயம் அவற்று க்குக் குறுக்கே வந்து வாழ்க்கையை கெடுத்தலாகாது என்பதற் காக தி.ச. 1086 மதக் கலப்பு திருமணத்தை இரண்டு நிபந்தனைகளின்பேரில் அனுமதிக்கின்றது. மறைமாவட்ட ஆயர் கீழ்கண்ட இரண்டு நிபந்தனைகளின் பேரில் அனுமதி வழங்குவார். 1. கத்தோலிக்கத் தரப்பினர் விசுவாசத்தைத் தான் ஒரு போதும் கைவிடமாட்டார் என வாக்குறுதி தர வேண்டும். 2. குழந்தைகளுக்குத் திருமுழுக்கு அளித்து அவர்களை கத்தோ லிக்க கிறிஸ்தவ நெறியில் வளர்ப்பதாக வாக்குறுதி தர வேண்டும். இந்த இரண்டு வாக்குறுதிகளையும் கத்தோலிக்கர் அல்லாத மற்ற தரப்பினரிடம் கத்தோலிக்கரின் வாக்குறுதி யையும் கடமையையும் பற்றி தெரிவிக்க வேண்டும். மேலும் கத்தோலிக்க திருமணத்தின் இன்றியமையா பண்புகள், நோக் கங்கள் பற்றியும் இரு தரப்பினரிடம் தெரிவிக்க வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகள் பேரில் ஒரு தல ஆயர் தம் ஆளுகைக்குட்பட்ட மக்கள் இத்தகைய மதக்கலப்பு திருமணத் துக்கு தடை விலக்கு வழங்கலாம்.

மேற்கூறிய மதக்கலப்பு திருமணத்தில் கத்தோலிக்கரு டைய திருமுழுக்கே சந்தேகமாக உள்ளது என்றால் எதிர் மறையானது எண்பிக்கப்படும் வரை தி.ச. 1060இன்படி அத் திருமணம், ஒருவர் ஞானஸ்நானம் பெற்று மற்றவர் பெறாத மதக் கலப்புத் திருமணம் என்று ஊகிக்க வேண்டும்.

இம்மதக் கலப்புத் திருமணத்தின்படி, கத்தோலிக்கரல்லா தோர் அவர் மதத்திலேயே நிலைத்திருக்க அனுமதி பெறுகின் றார். இத்திருமணத்தை எப்படி நடத்துவது? திருமணத்துக்கு முன்பே குருவின் முன்னிலையில் வாக்குறுதி வழங்கப்பட்டு திருமணச் சடங்கு நிறைவேற்றிய பின்னர், குரு திருப் பலியை நன்றித் திருப்பலி போலத் தொடரலாம். அதில் மண மக்கள் பங்குபெறலாம். இப்படி மதக்கலப்புத் திருமணம் புரிந்த தம்பதியர்கள் தொடர்ந்து தாங்கள் கொடுத்த வாக் குறுதிகளையும், கடமைகளையும் நிறைவேற்றுகிறார்களா என்று அவர்களை அந்த அந்தப் பங்குத் தந்தையர் கவனிக்க வேண்டும்.

v) திருப்பட்டத்தார் திருமணம் (தி.ச. 1087)

தி.ச. 1087இன்படி, திருப்பட்டம் பெற்றவர்கள் (திருத் தொண்டர் மற்றும் குருக்கள்) - அவர்கள் மறைமாவட்ட குருவோ அல்லது துறவறச் சபையை சார்ந்தவர்களோ - திரு மணம் புரிவதற்கு போப்பானவரிடமிருந்து தாங்கள் கொடுத்த கற்பு, கன்னிமை என்னும் வாக்குறுதியிலிருந்து விலக்குப் பெற்ற பின்புதான் திருச்சபையில் திருமணம் புரிய வேண்டும்.

vi) கடத்தியவருடன் திருமணம் (தி.ச. 1088)

கடத்தப்பட்டு, காவலில் வைக்கப்பட்ட ஒருவருக்கும் அவரைக் கடத்தியவருக்குமிடையே நடக்கும் திருமணம் செல்லாது. ஆனால் திருமணம் புரியும் நோக்கத்துடன் கடத் தப்பட்டவர், கடத்தல்காரரிடமிருந்து பிரிக்கப்பட்டு, சுதந் திரமான இடத்தில் வைக்கப்பட்டு தாமாகவே முன்வந்து வாக்குறுதி கொடுத்து அத்திருமணத்தை தேர்ந்தெடுத்தால் அந்தத் திருமணத்தை திருச்சபையில் நடத்தலாம்.

-அருள்தந்தை. ஜோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடைகள் அருளும் விசுவாசம்

விசுவாசி என்று பெயர் வைத்துக்கொண்டு எல்லா மனிதர்களையும்போல தேவைகள் வரும்போது புலம்பினால் எப்படி?

ஒரு சாதாரண மனிதன் தன் பொருளாதார தேவைகளைப் பூர்த்திசெய்ய என்ன செய்கின்றான்? வரவுக்கு மிஞ்சின செலவு வரும்போது கடன் வாங்குகிறான். வட்டியுடன் சேர்த்து கடனை அடைக்கிறான். தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை வரும்போது கவலைப்பட்டு கலங்குகிறான். எதிர்பாராத நஷ்டம், கடன் அதிகமாகும் போது சிலர் தற்கொலை செய்துகொள்கிறார்கள். சிலர் தவறான வழியில் சம்பாதிக்க ஆரம்பிக்கிறார்கள். சிலர் பொய், பித்தலாட்டம் செய்து சூதாடி, பணத்தை எவ்விதத்திலாவது தேட முயற்சிக்கிறார் கள். இது ஒரு அவிசு வாசியின் நிலை.

ஆண்டவராகிய இயேசு விசுவாச மக்களுக்குக் கூறும் சத்திய மென்ன?

ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறது மில்லை; அறுக்கிறது மில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறது மில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? (மத். 6:26, 27)

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் (மத். 6:31, 32, 33)

மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், செடி கொடிகளின் தேவைகளைக்கூட பூர்த்தி செய்யும் தேவன், உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாட்டாரா? நிச்சயம் பூர்த்தி செய்வார். எனவே நீங்கள் கவலைப்பட வேண்டாம். இவைகள் எல்லாம் உங்களுக்குத் தேவை என்று உங்கள் பரலோகத் தகப்பனுக்கு நன்கு தெரியும். நீங்கள் செய்ய வேண்டுவதெல்லாம், தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது நீங்கள் கேட்காமலேயே இவைகளை அவர் உங்களுக்குத் தருவார்.

இதுதான் நமது பரலோகப் பிதா கூறும் ஆலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனை.

காடுகளில் திரிகின்ற யானைகளெல்லாம் எவ் வளவு பெரியவை. அவைகளையெல்லாம் நமது அப்பா போஷித்துக் காப்பாற்றவில்லையா? யானையும், புலியும், சிங்கமும், காண்டாமிருகமும் வேலைக்குப் போய் சம்பாதித்து குடும்பம் நடத்து கின்றனவா? ஆகாயத்துப் பறவைகள் வயலை உழுது, விதை விதைத்து, அறுவடை செய்து, களஞ் சியத்தில் சேர்த்து வைத்தா குடும்பம் நடத்துகின் றன?

வயிற்றுப் பிழைப்புக்காக எட்டு மணிநேரம் உழைப்பவன் மனிதன் மட்டும்தான்.

மிக செல்வ செழிப்பில் வாழ்ந்த சாலமோன் ராஜாகூட காட்டுப் பூக்களின் ஆடைகளைப்போல உடுத்தினதில்லை என்று இயேசு கூறுகிறார்.

அற்ப விசுவாசிகளே! என்ற ஆதங்கத்துடன் அழைக்கிறார் ஆண்டவராகிய இயேசு.

மிருகங்கள், பறவைகளைவிட அதிகமாக பட்

> "என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்."

டினி கிடந்து சாவது மனிதர்கள்தான். சீமெந்து விலையைப் பற்றி, பெற்றோல் விலை உயர்வைப் பற்றி மிருகங்கள், பறவைகளுக்குக் கவலை இல்லை. பிள்ளைகள் படிப்புச் செலவைப் பற்றி இவைகளுக்குக் கவலை இல்லை. பன்றி எத்தனை குட்டி போட்டாலும் கவலைப்படுவதில்லை. எல் லாக் கவலையும் மனிதனுக்குத்தான்.

நாம் இருவர் நமக்கு இருவர் என்ற கொள்கை மாறி நாமே குழந்தைகள், நமக்கேன் குழந்தைகள் என்ற நிலைக்கு வந்துவிட்டோம். ஏராளம் பெற்றுத் தள்ளுங்கள் என்று கூறவில்லை. அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள். கர்த்தரை விசுவாசியுங்கள்.

இதை வாசிக்கும் விசுவாசியே, இந்த மிருகங் கள், பறவைகளை விடவா நீங்கள் தாழ்ந்து போனீர் கள்? மனிதன் சிருஷ்டிப்பின் சிகரமாக தேவனால் படைக்கப்பட்டவனல்லா? உலகத்தையெல்லாம் படைத்து, பராமரித்து, போஷிக்கும் தேவன் நமது அப்பா அல்லவா? அவரை விசுவாசித்தால் எல் லாம் தருவேன் என்று வாக்குப் பண்ணியுள்ளாரே! ஏன் இன்னும் கவலைப்பட்டு கலங்குகிறீர்கள்?

-பி.எஸ்.ராஜாமணி

இயேசுவை இருதயத்தில் வையுங்கள்!

பல ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு கட்ட டத்தின் முதல் மாடியில் ஒரு அறையில் தங்கியி ருந்தேன்.

அந்த அறையிலிருந்து பக்கத்து நிலத்தைப் பார்த்தேன். அங்கே ஏராளம் ஆகாத செடிகளும், கொடிகளும் வளர்ந்து அந்த இடம் மிக மோசமா கக் காட்சியளித்தன. ஏனென்றால் அந்த நிலம் கவனிப்பாரின்றி இருந்தது. அந்த நிலத்தை அப் படியே விட்டுவிட்டதால் அங்கே ஏராளமான விஷ ஜந்துக்களும் இருந்திருக்கும்.

மனிதனுடைய இருதயமும் ஒரு நிலம் போன்றதே. அது எந்த நிலையில் இருக்கிறது என்று அவ்வப்பொழுது கவனிக்கப்பட வேண் டும். கவனிக்கப்படாத, கண்காணிக்கப்படாத இருதயத்தில் ஆகாத எண்ணங்களும், நினைவு களும், கற்பனைகளும், யோசனைகளும், ஆசைகளும் தங்கு தடையின்றி வளரும். அதன் விளைவாகத்தான் மன அமைதிக் குறைவுகளும், தடுக்க இயலாத தவறான செயல்களும், கட்டுப் படுத்த முடியாத மோசமான பழக்கவழக்கங் களும் ஏற்படுகின்றன.

சிலர் தங்களிடமுள்ள ஆகாத செயல்களை யும், பழக்க வழக்கங்களையும் அடையாளங் கண்டுகொண்டு அவற்றை அகற்ற முயற்சிப் பார்கள். ஆனால் முடிவதில்லை. ஏனென்றால் தவறான செயல்களைக் கனிகளாக உருவாக்கும் பாவமரத்தின் ஆணிவேர் இருதயத்தோடு பின் னிப் பிணைந்துள்ளது. அந்த இருதயத்தைச் சீர் செய்யாதவரை தவறான செயல்களையும், பழக்கவழக்கங்களையும் தடை செய்து வெற்றி காண முடியாது.

இந்த இருதயத்தைச் சீர் செய்து ஆகாத தீய செடிகளையும், கொடிகளையும் அப்புறப்படுத்தி செப்பனிடவே இயேசு இருதயத்தில் தேவைப் படுகின்றார். அவரால் மட்டுமே மனித இருதயத் தைச் செம்மையாக்கி நல்லவைகளை விளைவிக் கும் இடமாக மாற்ற முடியும்.

> பண்புகள் உடையவனை மதிக்கத் தெரியாதவன் தன்னிடம் நற்பண்புகள் இல்லாமையை வெளிப்படுத்துகிறான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குடும்பம் -ஓர் உளவியல் பார்வை

அன்று என்று அறிந்து அவனுக்குச் சரி நிகரான ஒரு துணையை ஏற்படுத் தினார்' என்று தொடக்க நூல் கூறுகிறது.

'தனிமையாய் இருத் தல்' என்பது ஆதிப் பெற் றோரின் ஆதிப் பாவம் போல், ஆதிப் பிரச்சினை. ஏவாள் அதன் தீர்வு. அவர் கள் கூடி வாழத் தொடங்கியபின் தனிமை தீர்ந்தது. ஆனால் பிரச்சினை தீரவில்லை. மாறாக வளர்ந்தது, இன்று வேகமாக வளர் கிறது.

சமூகப் பகுப்பாய்வு கண்ணோட்டத்தில் குடும்பங்களில் நிலவும் பிரச்சினைகளுக்குக் காரணம் என்ன எனத் தேடினால் உணவு, உறைவி டம் மற்றும் ஒழுக்கநெறி ஆகிய மூன்று முக்கிய காரணிகள் முகம் காட்டுகின்றன.

ஒரு சிற்பியைப் போல காலம் காலமாய்க் குடும்பம் எனும் சிற்பத்தை மேற்குறிப்பிட்ட கார ணிகள் செதுக்கி வருகின்றன. ஒரு மாணவனை மதி யிழக்கச் செய்து கொலை செய்யத் தூண்டும் நிகழ்வாகட்டும், நடுத்தர வயதுடையோர் குடும் பத்துடன் தற்கொலையைத் தேடும் நிகழ்வாகட் டும், வயதானோர் பள்ளிகளிலிருந்து அநாதை களாய் மாறும் சூழலாகட்டும். இவை அனைத்திற் கும் பின்னால் உணவு, உறைவிடம் மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் நிழலாடுகின்றன.

ஆற்றுப்படுத்துதல் துறை வல்லுனர்கள் கடவுள் கண்ட தீர்வுபோல் ஒரு தீர்வை எட்டினால் அடுத்த கணமே இன்னொரு பிரச்சினை முளைத்துவிடுகின் றது.

மிசல் சிங்மேன் என்ற பெண் வல்லுநர். ஒரு ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக மாறி வாழும் உறவு வாழ்வை, ஒரு 'நடனமாகப்' பார்க் கின்றார். நடனம் அது எப்படி அமைக்கப்படு கின்றது எப்படி அரங்கேற்றப்படுகின்றது என் பதை அளக்க 'மானாட மயிலாட' என்ற தொலைக்

'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி' என்ற சொல்லாடல் தமிழ்மொழி மற்றும் தமிழினத்தின் தொன்மையை பழைமையைக் குறிப்பதாக இருந்தாலும் 'மூத்த குடி' என்ற சொல் மூத்த அல்லது தமிழைப் போல பழைமைவாய்ந்த குடித்தனத்தின் பெருமையை யும் சேர்த்தே சொல்வதாகப் பார்க்கலாம். மனிதர் கள் கூடி வாழத்தொடங்கியது இனத்தின் வரலாறு. அந்த இனத்தை இணைத்துப் பிணைத்தது மொழி யின் வரலாறு. இதுவே மொழியை செம்மொழி யாக்கி தலை முறைகள் தோறும் வளர்த்து வளமை சேர்த்தது.

குடும்பத்தின் வரலாறு

குடும்பம் என்ற அமைப்பு எவ்வளவு பழை மையானதோ அவ்வளவு பழைமையானவை குடும்பங்களில் நிலவும் பிரச்சினைகளும். ஒரு வகையில் பார்த்தால் பிரச்சினையின் தீர்வாகத் தான் குடும்பம் உருவானது எனலாம்.

விவிலியத்தில் கடவுள் ஆதாமைப் படைத்த பின்பு, 'மனிதன் தனிமையாய் இருப்பது நல்லது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காட்சி நிகழ்ச்சியை உதாரணத்திற்காக மட்டும் எடுத்துக் கொள்வோம்.

நமது வாழ்வனுபவங்களைப் பாடலாக கதையாக, கவிதையாக, கட்டுரையாக இப்படிப் பல வழிகளில் வெளிப்படுத்துவது கலை. நடனம் ஒரு கலை. நடனத்திற்கென்று ஓர் அமைப்பு, இலக்கணம் உண்டு. நடனத்தில் நளினம், நயம், பாவம், சோகம், கோபம், வெட்டுதல், ஒட்டுதல், சிரித்தல், சிணுங்கல் என்று ஒருசில நிமிடங்களில் பல உணர்வுகளை அனுபவங்களை சிந்தனைகளை காண்பவருக்குப் புரிய உணர வைத்துப் பாராட்டுப் பெறுவதுதான் ஒரு நல்ல நடனம்.

நடனத்தின் அனைத்து அம்சங்களையும் திரையிலிருந்து வீட்டிற்குக் கொண்டு வந்து கணவன் மனைவி என்ற இணை அல்லது ஜோடிக்கு பொருத்திப் பார்ப்போம். அதே குடும்பம், அதே ஜோடி, ஆனால் நாள்தோறும் புதுப்புது நடனங்கள் அரங்கேறுகின்றன. இவை ஏதோ ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்கள் குடும்பங்களில் மட்டும் அரங்கேறும் நடனங்கள் அல்ல. அனைத்துத் தட்டுக் குடும்பங்களிலும் உண்டு. கசப்புகளும் பிரச்சினைகளும் கூடும்போது நடனத்தின் போக்கும் கூடுகிறது. அப்படி பிரச்சினைகளின்போது நடந்தேறும் நடனங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. சிலம்பாட்டம்

இருவர் சிலம்பைக் கையிலெடுத்து ஒருவர் மற்றவரை வீழ்த்த முயலும் ஆட்டம். கோபமும் வேகமும் அதன் நாதங்கள். சுற்றிச் சுற்றி சுழன்று ஆடும் ஆட்டம். குடிப்பழக்கம் உள்ள கணவன், கோபக்கார மனைவி. அவர் குடிப்பதால் நான் கோபப்படுகிறேன் என்று மனைவியும், அவள் கோபப்படுவதால் நான் குடிக்கிறேன் என்று கணவனும் மாறி மாறி சுதி குறையாமல் ஆடும் முறையை சிலம் பாட்ட முறை எனச் சொல்லலாம். ஆங்கிலத்தில் CONFLICTIONAL DANCE என்று அழைக்கிறார்கள்.

2. சினிமா நடனம்

கணவன், அவரது உடன்பிறப்புகளுக்கு உதவி செய்வதை மனைவி விரும்பவில்லை என்பதை, பேச்சு மற்றும் நடத்தை மூலம் அழுத்தமாக வெளிப்படுத்துகிறாள். அவள் அதிகமாக அதைப் பற்றி துருவத் துருவ கணவன் வீடு திரும்பும் நேரம் தள்ளிக் கொண்டேபோகிறது. ஏதாவது காரணத்தை கண்ட றிந்து வீட்டிற்குச் செல்வதை தள்ளிப்போடுகிறான். இது ஒருவர் விரட்ட அடுத்தவர் ஓடுவது. தமிழ் சினிமாப் பாடல்களில் பெரும்பாலான நடனங்கள் நாயகன் விரட்ட நாயகி ஓட பிறகு அவள் விரட்ட நாயகன் ஓட என அமைக்கப்படுகின்றன. ஆங்கி லத்தில் இதை Pursurer-distancer dance என அழைப்பர்.

3. கண்ணாமூச்சி நடனம்

ஆங்கிலத்தில் இதை MUTUAL DISENGAGE என அழைப்பர். கண்ணாமூச்சி ஆட்டத்தில் ஒருவர்தான் வெளியே தெரிவார். மற்றவர் மறைந்திருப்பார். பிரச்சினையின் அழுத்தம் கூடும் போது நீயும் என் னைத் தேட வேண்டாம். நானும் உன்னைத் தேடவில்லை என்று, இருவருக்கும் இடையில் இடைவெளி அதிகமாகி, தொடர்பு எல்லைக்கு வெளியில் இருப்பார்கள்.

எந்த வகையான நடனத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற புரிதலே தீர்வுப்பாதையின் முதல் படி. எனவே திரையில் வரும் 'மானாட மயிலாட' நிகழ்ச்சியைப் பார்த்து ரசிப்பதோடு நில்லாமல் வீட்டில் நடக்கும் நடனத்தையும் சிறிது கூர்ந்து நோக்குவோம். அவற்றின் வகையறிந்து, அந்த நடனத்தை செவ்வனே ஆடும் அதேநேரம், அது ஒரு நடனம் மட்டுமே என்பதையும் உணர்வோம்.

-அருட்தந்தை அந்தோணிராஜா

விசுவாசிகள் மன்றாட்டு

எங்கள் துணையாளரான இறைவா, பெந்தகோஸ்தே திருநாளில் உமது ஆவியை அன்னை மரியா மீதும், அப்போஸ்தலர்கள் மீதும் பொழிந்து உறுதிப்படுத்தியது போல உமது திருச்சபையை உமது ஆவியின் ஆற்றலால் தொடர்ந்து உறுதிப்படுத்தி பாதுகாத்திடும்படி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கர்த்தரை உணர்வீர்!

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 24:8).

இவ்வுலகில் நம் நம்பிக்கை, பற்றுதல், விசுவாசம் இவைகள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் வெவ்வேறு விதமாய் இருக்கிறது. இந்தப் பற்றுதல் ஆண்டவர் மேல் உறுதியாய் இருக்கும் போது, அவர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்க்கவும், அவர் மேல் நம்பிக்கை வைப்பதால் பாக்கியமான நிலைமையை ஒவ்வொரு நாளும் பெறவும், அவர் கிருபை புரிவார் (எரே.17:7).

அன்பானவர்களே! இந்த அனுபவம் இல்லாதனால்தான் பாடுகள், துன்பங்கள் நம் வாழ்க்கையிலே கொஞ்சம் வந்தாலும், அதைத் தாங்க முடியாமல் தவிக்கிறோம், தடுமாறுகிறோம். இன்று நீங்களும் அப்படிப்பட்ட நிலைமையில் இருப்பீர்களானால், கர்த்தர் நல்லவர் என்பதை தாவீதைப் போல ருசித்துப் பார்த்து பாக்கியம் பெறுவீர்கள் (சங். 84:5).

ஒரு குடும்பத்தில் சகோதர, சகோதரிகள் யாவரும் ஆண்டவர் மீது அரைகுறையான பக்தி கொண்டவர்களாக இருந்தபோதிலும், வாழ்க்கையில் எல்லா ஆசீர்வாதங்களோடும் நிறைந்து வாழ்ந்தபடியினால், எப்பொழுதும் ஆண்டவரை அரைகுறையான வழியிலேயே தேடி, அதில் திருப்தியடைந்திருந்தார்கள். ஆனால், அவர்களுடைய ஒரு சகோதரி மட்டுமே கர்த்தரை முழு மனதுடன், முழு இருதயத்துடன் தேடினாள். ஆனால், அவளுடைய வாழ்க்கையோ எல்லாப் பக்கங்களிலும், பற்பல தேவைகளினாலும், குறைகளினாலும் சஞ்சலம் நிறைந்ததாய் இருந்தது. ஆகவே, அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, "அதிகமான பக்தியின் நிமித்தம்தான் உனக்கு இந்தச் சீர்கேடு! எனவே, எங்களைப் போல பெயரளவில் ஆண்டவரைத் தேடினால்போதும்" என்று பரிகாசம் செய்தார்கள். அவளோ அந்த விதமான துன்ப நிலைமையிலும் என்றைக்காவது ஒருநாள் என் ஆண்டவர் என் வறண்ட வாழ்வை செழிக்கச் செய்வார் என்று விசுவாசத்துடன் உறுதியாய் இருந்தாள். தன் கஷ்டங்களை அவர்களிடம் சொல்லவோ, வெளியில் காண்பிக்கவோ மாட்டாள்.

மாதம் ஒரு தியானம்

நாட்களும், வருடங்களும் கடந்தன. அவளுடைய கணவருக்கு தேவ தயவால் ஒரு அருமையான உயர் பதவி கிடைத்தது. அதினிமித்தம் அவள் எல்லோரைக்காட்டிலும் ஆண்டவர் அருளால் மேலான நிலைமையை அடைந்தாள். கார், பங்களா போன்ற செல்வங்கள் ஆண்டவரால் கொடுக்கப்பட்டன. அப்பொழுதுதான் அவளுடைய சகோதர, சகோதரிகளின் கண்கள் திறந்தன.

அன்பானவர்களே! கர்த்தம் நம் ஒவ்வொருவரின் இருதயத்தையும் அறிந்திருக்கிறார். நாம் எவ்வளவாய் அவர் மீது பற்று பாசம், உண்மையான அன்பு வைத்திருக்கிறோம் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். மேற்கண்ட சகோதரி தன் சஞ்சலத்தை பெரிதுபடுத்தாது, அதன் மத்தியிலும் தேவன் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தர் நல்லவர், என்னைக் கைவிடமாட்டார் என்று விசுவாசித்து நன்மை பெற்றதுபோல் நீங்களும் பெறுங்கள்.

ஜெபம்: "அன்பு தெய்வமே! இந்த உலகம் பாதி, ஆண்டவர் பாதி என்று இருக்கிற என் நிலைமையை முற்றிலுமாய் உம்மிலேயே முழு நம்பிக்கை வைத்து நீர் ஆண்டவர் என்பதை ருசித்துப் பார்த்து, மற்றவர்களுக்கு முன் நற்சாட்சியுடன் விளங்க, இன்றுமுதல் எனக்கு கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

- போல்ராஜ்

Digitized by Noolaham Foundation
noolaham.foundation@gmail.com

"ஜோசி, நேத்து ஸ்கூல் டேய்க்குத் தலைமை தாங்கப் போன ஒங்க அப்பா என்ன காரியம் செஞ்சாருன்னு உனக்குத் தெரியுமா? ஏழை மாணவர் உதவி நிதிக்காக ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையா அறிவிச்சாரு. இது அவருக்கே நல்லாருக்கா?" ஜோசியின் மாமா ரூபன் பொறாமையோடும் வெறுப்போடும் வினவினார்.

மாமாவின் கேள்வி ஜோசிக்கு வியப்பைத் தந்தது. ஏனெனில், மாமாவும் ஜோசியின் தந்தைக்கு சமமான அந்தஸ்து உடையவரே.

"மாமா, அது அவருடைய பணம்; அவர் கடினமாக உழைத்துச் சம்பாதித்த பணம். என் தந்தை அவரது தந்தையை பதினாறு வயதிலேயே இழந்தார். அதனால் தனது படிப்பைப் பாதியிலேயே நிறுத்தினார். ஒரு மெக்கானிக் ஷாப்பில் உதவியாளராக வேலை செய்யத் தொடங்கினார்.

விசுவாசிகள் மன்றாட்டு

★ மீட்பின் இறைவா, திருச்சபையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் உமது மீட்பின் கொடையை உலகுக்கு அறிவித்து மக்களினத்தார் அனைவரும் மீட்பை அடைவதற்கு ஆர்வமாய் உழைக்க அருள்புரியும்படி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

★ கருணையின் இறைவா, நாங்கள் அறிந்தும், அறியாமலும் செய்யும் பாவங்களுக்காக என்றும் மனம் வருந்தி உம்மிடம் திரும்பி வரவும், இனி பாவத்தில் விழாதபடிக்கான மன உறுதியைப் பெறவும் அருள்புரியும்படி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பிறருக்கு கொடுப்பது ஆண்டவனுக்கே கொடுப்பது போன்றது!

37

அந்தத் தொழிலைக் கற்றுக்கொண்டார். சில ஆண்டுகளுக்குள் ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினார்.

தனது நேர்மையாலும், புத்திக் கூர்மையாலும், ஓயாத உழைப்பாலும், நல்ல மனிதர்களின் சகவாசத்தாலும் குறுகிய காலத்திலேயே கோடீஸ்வரர் ஆக முடிந்தது. என்னையும் இவ்வளவு பெரிய படிப்பு படிக்க வைக்க முடிஞ்சிச்சு. நானும் இப்ப கை நெறைய சம்பளம் வாங்குறேன். அதனால எங்க அப்பாவின் தாராள குணத்தக் கண்டு உண்மையிலேயே பெருமையா இருக்கு. மகிழ்ச்சியா இருக்கு.

'கொடுங்கள், உங்களுக்கு நிறைய கிடைக்கும்' என்று எனது ஒன்பதாம் வகுப்பு ஆசிரியர் சொனனது இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கு. ஆம், நானும் என் அப்பாவைப் போல், ஏழை எளியவர்களுக்கு நிறைய கொடுக்க ஆசப்படுகிறேன். மற்றவர்களுக்குக் கொடுப்பதில் ஒரு மகிழ்ச்சியிருக்கு!"

மூச்சுவிடாமல் ஜோசி பேசினதைக் கேட்டுக் கொண்டிருந்த ரூபன் அப்படியேஅசந்து போனார்.

ஜோசி தனது மகளைத் திருமணம் செய்து தனக்கு மருமகனானவன். அப்பாவின் சொத்துக் கெல்லாம் தனது மகளும் உரிமையாளர் ஆவாள். தானும் அதனை அனுபவிக்கலாம் என்று கற்பனை செய்து கொண்டிருந்தார். ஆனால் எல்லாம் தூள்.

பாடம்: உழைப்பால் மட்டுமே உரிமைபெற வேண்டும்.

Digitized by Arulmigu Kalasalingam Foundation
www.vaanavil.kalasalingam.com

புதுவாழ்வை அளிக்கவல்லவர்

"கவலைப்படாதே, கிறிஸ்தியான். நீ உண்மையாகவே உன் தவறுகளை உணர்ந்தால் ஆண்டவர் உன்னை நிச்சயமாக மன்னிப்பார். வா ஜெபம் செய்வோம்" என்று நற்செய்தியாளர் கூறவே இருவருமாக முழங்காற்படியிட்டார்கள்.

கிறிஸ்தியான் தனது தவறுகளை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டான்.

அதன்பிறகு நற்செய்தியாளர் அவன் செல்ல வேண்டி சரியான பாதையைச் சுட்டிக்காட்டி, அவனை அன்போடு வழியனுப்பி வைத்தார்.

கிறிஸ்தியான் நடந்து சென்றான். எதிரே வருபவர்களிடம் அவன் பேச்சுக் கொடுக்கவேயில்லை! சரியான பாதையை அடைந்தவுடன் இன்னும் வேகமாக நடக்கத் தொடங்கினான்!

இறுதியாக இடுக்கமான வாசலை நெருங்கி விட்டான் கிறிஸ்தியான்.

வாசல் கதவின்மீது "தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" (மத். 7:7) என்று எழுதப்பட்டிருந்தது.

கிறிஸ்தியான் அதன்படி கதவைத் தட்டினான்!

தயாளன் என்ற பெயரையுடைய நல்ல மனிதர் கதவைத் திறந்தார்.

"யாரப்பா நீ? எங்கிருந்து வருகிறாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று அன்புடன் கேட்டார்.

"ஐயா, நான் அழிநகரத்திலிருந்து வரும் ஒரு பாவி. பெயர் கிறிஸ்தியான். வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள நான் சீயோன் மலைக்குச் செல்ல வேண்டும். அதற்கு இந்த வழியாகத் தானே போக வேண்டும்?" என்று கேட்டான்.

"ஆமாம், உள்ளே வா" என்று கூறிய தயாளன் கதவை அகலமாகத் திறந்தார். கிறிஸ்தியானின் கையை வேகமாகப் பிடித்து உள்ளே இழுத்தார். கதவை மீண்டும் படாரென்று மூடித் தாளிட்டார்!

"ஏன் ஐயா, என்னை இழுத்தீர்கள்?" என்று வியப்புடன் கேட்டான் கிறிஸ்தியான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''இந்த வாசலுக்குச் சற்றுத் தொலைவில்தான் சாத்தானின் கோட்டை இருக்கிறது. அவன் இங்கே நுழைகிறவர்களைக் கண்காணித்து, அம்பெய்தி கொல்லத் தயாராக இருக்கிறான். சிலர் அவனது அம்பால் குத்தப்பட்டு இந்த வாசலினுள் நுழையு முன்பே இறந்து போயிருக்கிறார்கள். அதனால் தான் உன்னை அவசரமாக உள்ளே இழுத்தேன்'' என்று விளக்கிய தயாளன். ''உனக்கு இந்த வழியைக் காட்டியது யார்?'' என்று கேட்டார்.

''நற்செய்தியாளர்'' என்று கூறிய கிறிஸ்தியான் மிகவும் மகிழ்ச்சியோடு அதுவரை நடந்ததையெல்லாம் அவருக்கு எடுத்துக் கூறினான்.

''நல்லது, என்னுடன் வா. அடுத்து நீ செல்ல வேண்டிய பாதையை உனக்குக் காண்பிக்கிறேன்'' என்று கூறிய தயாளன் கிறிஸ்தியானை அழைத்துச் சென்று இடுக்கமும், நேரானதுமான வழியைக் காட்டினார்.

''இதோ, எதிரே தெரிகிறதே, குறுகலான நேர்ப் பாதை. இந்த வழியாகத்தான் நீ செல்ல வேண்டும். பழங்காலத்தில் தீர்க்கதரிசிகளாலும், கிறிஸ்துவான வராலும், அவருடைய சீடர்களாலும் இந்தப் பாதை உருவாக்கப்பட்டிருக்கிறது. இருபுறமும் பல வளைந்த ஆனால் அகலமான பாதைகள் உண்டு. ஆனால் இடுக்கமான பாதைதான் சரியான பாதை. நீ இதே பாதையில் சென்றால் பொருள் கூறுபவரின் வீட்டை அடையலாம். அவர் பல அற்புதமான காரி யங்களைக் குறித்து உனக்குக் கூறுவார்'' என்றார் தயாளன்.

கிறிஸ்தியான் அவரிடம் விடைபெற்றுக் குறுகலான பாதையில் நடந்து சென்றான். இறுதியாக கிறிஸ்தியான் பொருள் கூறுபவரின் வீட்டை அடைந்தான். கதவைத் தட்டினான்.

''யார் அது?'' என்ற குரல் கேட்டது.

''நான்தான் கிறிஸ்தியான். தயாளன் என்னை அனுப்பினார். பொருள்கூறுபவர் என்பரைப் பார்க்க வேண்டும்'' என்றான் கிறிஸ்தியான்.

கதவு திறந்தது. பொருள்கூறுபவர் அவனை அன்புடன் உள்ளே அழைத்துச் சென்றார்.

''கிறிஸ்தியானே வா, உனக்குப் பயனளிக்கக் கூடிய அநேக காரியங்களைக் காட்டுகிறேன்'' என்று கூறி, அவனை ஒரு தனியறைக்குக் கூட்டிச் சென்றார்.

அங்கே ஒரு பெரியவரின் படம் மாட்டப்பட்டிருந்தது. அவரது கண்கள் மோட்சத்தையே நோக்கின. நூல்களுக்கெல்லாம் மேலான நூல் அவர் கையில் இருந்தது. அவர் தலைமீது ஒரு தங்கக் கீரிடம் இருந்தது.

''இவர்தான் மனிதர்களை மனம் மாறச் செய்து, அவர்களுக்குப் புது வாழ்வை அளிக்க வல்லவர். அவர் முதுகுக்குப் பின்னாலுள்ள உலகமும் அவர் தலையிலுள்ள கீரிடமும் எதைக் குறிக்கின்றன தெரியுமா? உலகத்தையும் அதிலுள்ள பொருட்களையும் விரும்பாதவர்கள் மோட்சத்தின் ஆசீர் வாதங்களை அனுபவிக்கலாம் என்பதே'' என்று விளக்கினார் பொருள் கூறுபவர்.

அதன் பின்பு இதுவரை சுத்தம் செய்யப்படாத பெரிய அறை ஒன்றினுள் கிறிஸ்தியானை அழைத்துச் சென்றார் பொருள் கூறுபவர். அறையெங்கும் தூசு நிறைந்திருந் தது!

பொருள் கூறுபவர் சுத்தம் செய்பவனைக் கூப்பிட்டு அறையைப் பெருக்கும்படி கட்டளையிட்டார். அவன் துடைப்பம் கொண்டு அறையைக் கூட்ட, தூசு புகை மண்டலம்போலப் புறப்பட்டது! மூச்சுவிடத் திணறினான் கிறிஸ்தியான்.

பொருள்கூறுபவர் அருகிலிருந்து பெண்மணியிடம் ''கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து அறையெங்கும் தெளி'' என்றார். தண்ணீர் தெளித்த பின்பு அறையைச் சுத்தம் பண்ணுவது எளிதாக இருந்தது.

''ஐயா, இதன் பொருள் என்ன?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

''இந்த அறைதான் ஒரு மனிதனின் இருதயம். தூசுதான் அவனை அசுத்தப்படுத்தியிருந்த பாவங்கள். முதலில் அப்படியே அறையைப் பெருக்கிய வன்தான் நியாயப்பிரமாணம். தண்ணீர் கொண்டு வந்து தெளித்த பெண்மணிதான் சுவிசேஷம்.

நியாயப்பிரமாணம் என்ற சட்டங்கள் நமது பாவங்களை நீக்கி நம்மைச் சுத்தப்படுத்த முடியாது. பதிலாக நமது மனதில் பழைய பாவங்கள் மீண்டும் தலைகாட்ட, பாவங்கள் அதிகரிக்கின்றன.

சுவிசேஷம் என்ற கிறிஸ்துவின் நற்செய்தியை நமது மனம் ஏற்றுக்கொள்ளும்போது, நமது பாவங்கள் நீங்கி, இருதயம் சுத்தமாகிறது. அப்போதுதான் மகிமையின் ராஜா அதில் தங்க முடியும்'' என்று கிறிஸ்தியானுக்குப் புரியும்படி தெளிவாக விளக்கினார்.

கிறிஸ்தியானின் கையைப்பிடித்து இழுத்தபடி ஒரு சிறிய அறையினுள் நுழைந்தார் பொருள் கூறுபவர். அங்கே இரண்டு சிறுவர்கள் எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள். அவர்களில் கோப முகத்தோடு குதித்துக்கொண்டிருந்தான் ஆத்திரக்காரன். சாந்த மான முகத்தோடு அமைதியாக இருந்தவன் பொறு மைக்காரன்.

''ஆத்திரக்காரன் ஏன் இப்படிக் கோபமாக இருக் கிறான்?'' என்று கேட்டான் கிறிஸ்தியான்.

''அவன் கேட்ட பொருள்களுக்காக இன்னும் ஒரு வருடம் காத்திருக்கும்படி அவன் பெற்றோர் கூறிவிட்டார்கள். அவனோ இப்போதே அதைக் கேட்டான். அதனால்தான் இப்படி ஆத்திரப்படுகிறான். ஆனால் பொறுமையோ அமைதியாகக் காத்திருக்கிறான்'' என்று விளக்கினார் பொருள் கூறுபவர்.

-எச்.பி.ராஜ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரையறை அற்ற மன்னிப்பு!

இந்நாளின் நற்செய்தியில் பேதுரு இயேசுவை அணுகி மன்னிப்புக் குறித்து விளக்கம் கேட்பதைப் பார்க்கிறோம். பேதுரு கேள்வியை எழுப்புகிறார் என்றால், இது அவர் மனதில் மட்டும் எழுந்த கேள்வியாக நாம் பார்க்க வேண்டியதில்லை. சீடர்களின் சார்பாக, அவர்களின் தலைவர் என்கிற முறையில் பேதுரு இந்தக் கேள்வியை எழுப்பியிருந்திருக்கலாம்.

கப்பர் நாகுமில் வீட்டில் இருந்தபோது ''வழியில் நீங்கள் எதைப்பற்றி வாதாடிக் கொண்டிருந்தீர்கள்?'' (மாற் 9:33) என்று இயேசு கேட்பதைப் பார்க்கிறோம்.

தங்களுக்குள் யார் பெரியவர் என்கிற கேள்வியை சீடர்கள் எழுப்பி வாதாடிக் கொண்டிருந்ததை இயேசு அறிந்திருந்ததனால் (மாற் 9:34). அவர்களிடம் அவர் இக்கேள்வியை கேட்கிறார்.

இவ்வாறு சீடர்கள் பலமுறை பல கருத்துக்களை தங்களுக்குள் விவாதிக்கும் பழக்கம் கொண்டிருந்தனர். சில நேரங்களில் இயேசுவே முன்வந்து அவர்களின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தார்; சில சமயங்களில் சீடர்கள் சேர்ந்து சென்று இயேசுவிடம் தங்கள் சந்தேகத்தை எழுப்பி அதற்கு விடை தேடினர் (மத் 18:1). சில சமயங்களில் சீடர்களின் சார்பாக அவர்களின் தலைவராகிய பேதுரு இயேசுவிடம் கேள்வியை எழுப்புவதைப் பார்க்கி றோம் (மத் 15:15; 16:16; 17-4).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மன்னிப்பைப் பற்றி இயேசு மலைப் பொழிவில் சொன்னதை இயேசுவின் சீடர்கள் எல்லோரும் கேட்டிருந்தனர் (மத் 6:12, 14-15).

அதேவேளையில் யூதர்களாகிய அவர்கள் யூதப் போதகர்கள் மன்னிப்புப் பற்றிக் கூறியுள்ள அறிவுரைகளையும் அறிந்து வைத்திருந்தனர். ஆகவே அவர்கள் சற்றுக் குழப்பமடைந்திருக் கலாம். தங்கள் குழப்பத்தைத் தீர்த்துக்கொள்வதற் காக அவர் கள் தங்களின் சார்பாக இயேசுவிடம் பேதுருவை அனுப்பியிருந்திருக்கலாம்.

யூதப் போதகர்கள் மன்னிப்புப் பற்றி என்ன சொல்கின்றனர்? ஒருவர் ஒரே மாதிரியான குற்றத் தைப் புரிகிறபோது அவரை மூன்று முறை மன்னிக்கலாம். அதற்குமேல் மன்னிக்க வேண்டியதில்லை என்பது யூதப் போதகர்களின் அறிவுரை. தனக்கு அடுத்திருப்பவரிடம் மன்னிப்புக் கோரக் கூடாது என்று ஜோஸ் பென்ஹனினா என்கிற யூதப் போதகர் கூறியுள்ளார்; மூன்று முறை ஒரு நபர் தவறு செய்தால் அவர் மன்னிக்கப்படலாம்; ஆனால் அவர் நான்காம் முறை தவறு செய்தால் அவரை மன்னிக் கக்கூடாது என்று ஜோஸ் பென் யெஹூதா என்கிற யூதப் போதகர் அறிவுரை பகர்ந்துள்ளார்.

இதையெல்லாம் பேதுருவும், அவருடைய தோழர்களும் நன்கு அறிந்திருந்தனர். ஏழுமுறை மட் டும் மன்னித்தால் போதுமா? என்று பேதுரு கேட்கும்போது ஏழு என்கிற எண்ணை அவர் பெரிதாக நினைத்திருந்திருக்க லாம். விவிலியப் பாரம்பரியத்தில் 'ஏழு' என்பது முழுமையைக் குறிக்கும் எண். அந்த அடிப்படை யில் பேதுரு 'ஏழு' என்று சொல்லியிருக்கக்கூடும். அல்லது யூதப் போதர்கள் சுட்டிக்காட்டும் 'மூன்று' என்கிற எண்ணை இரண்டால் பெருக்கி மேலும் ஒன்றை சேர்த்து, மிகத்தாராளமாக எண்ணிக்கையை தான் கூட்டியிருப்பதாக பேதுரு நினைத்திருக்கலாம்.

இயேசுவிடம் தனக்கு பாராட்டு கிடைக்கப் போகிறது என்று எண்ணிய பேதுருவை இயேசு ஆச்சரியப்பட வைக்கிறார். ''ஏழுமுறை மட்டு மல்ல; எழுபது தடவை ஏழுமுறை'' என்று இயேசு பேதுருவுக்கு ஆலோசனை தருகிறார். இயேசு சொல்லும் ஆலோசனையை எப்படி எடுத்துக் கொள்வது? எழுபத்தேழு முறை என்றா அல்லது நானூற்றுத்தொண்ணூறு முறை என்று எடுத்துக் கொள்வதா? இயேசுவின் அறிவுரை தொடக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பழிவாங் குதலுக்கு எதிர்மாறாக இருக்கிறது.

தொடக்க நூலில் கடவுள் ''காயினைக் கொல் கின்ற எவனும் ஏழு முறை பழிவாங்கப் படுவான்'' (தொநூ 4:15) என்று சொல்கிறார்; அதுபோல இலா மேக்கு தன் மனைவியரிடம் ''காயினுக்காக ஏழுமுறை பழிவாங்கப்பட்டால் இலாமேக்கிற்காக எழுபது - ஏழுமுறை பழிவாங் கப்படும்'' (தொநூ 4:24) என்று சொல்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இயேசு இங்கே எத்தனை முறை வேண் டுமானாலும் தவறு செய்பவர்களை மன்னிக்கலாம் என்று புதுமை யான பாடத்தை வழங்குகிறார். எழுபத்தேழு முறையோ அல்லது நானூற்றுத் தொண்ணூறு முறையோ, அது முக்கியமல்ல. மன்னிப்ப தற்கு வரையறையே கிடையாது என்பதுதான் இயேசு இங்கே வழங்க விரும்பியுள்ள பாடம்.

பாவத்தில் புரண்டு கிடந்த மக்களிடம் கடவுள் இரக்கம் காட்டி பெருந்தன்மையுடன் மன்னித்தார் என்று எசாயா இறைவாக்கினர் குறிப்பிடுகின்றார் (எசா 40:2; 43:25). அதாவது, மானிடரைத் தண் டிப்பதற்கு கடவுளுக்கு உரிமை இருக்கிறது என் கிற உண்மையையும், அதற்கு மானிடரே தங்கள் தீயசெயல்கள் மூலம் வாய்ப்பு ஏற்படுத்திக் கொள் கின்றனர் என்கிற உண்மையையும் நாம் அறிந்து வைத்துள்ளோம். ஆனால் கடவுள் தம் தாராள உள்ளம், இரக்கக் குணம், பெருந்தன்மை ஆகிய வற்றின் காரணமாக மானிடரை மன்னித்துக் கொண்டே இருக்கிறார். கடவுளிடமிருந்து மன் னிப்பைப் பெறுகின்ற மானிடராகிய நாம் நமக்கு எதிராக தவறி ழைக்கும் நம் சகோதரர், சகோதரி களை கணக்குப் பார்க்காமல் உயர்ந்த உள்ளத் துடன் மன்னிக்க வேண்டும் என்பது இயேசு நமக்கு வழங்கும் அற்புதமான பாடம்.

சீராக்கின் ஞான நூலிலிருந்து எடுக்கப்பட் டுள்ள இந்நாளின் முதல் வாசகத்திலும் மன்னிப்பு என்கிற முக்கியப் பண்பு வலியுறுத்தப்ப டுவதைக் காணலாம். நமக்கு அடுத்திருப்பவர் செய்த அநீதியை நாம் மன்னித்தால், கடவுளை நாம் மன்றாடும்போது கடவுள் நம் பாவங்களை மன் னிப்பார் என்கிற உண்மை இங்கே வலியுறுத் தப்படுவதைக் காணலாம். ''வாழ்ந்தாலும் இறந்தா லும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக் கிறோம்'' என்று இந்நாளின் இரண்டாம் வாசகத் தில் புனித பவுல் உரோமையருக்கு அறிவிப் பதைப் பார்க்கிறோம்.

அந்த அடிப்படையில் நாம் பிறரை மன் னிக்கிறபோது இறைவனின் குணத்தைப் பிரதி பலிக்கிறோம். இயேசு சொல்வதுபோல விண் ணகத் தந்தை மன்னிக்கும் இயல்புள்ளவர். ஆகவே, பிறரை மன் னிக்கும் நல்ல பண்பை நாம் வளர்த்துக்கொண்டு அதன்மூலம் இறை வனை நம் வாழ்வில் பிரதிபலிக்க முன்வரு வோம்.

- அருட்தந்தை கீ.ஜோசப் ரவிபாலன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வும் பணியும் இறையனுபவமே அடிநாதம்

அருட்திரு ஜெரார்ட் டி ரொஸ்ரோ அ.ம.தி

முன்னுரை

''தங்கள் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிராத எதையும் ஏற்க இன்று மக்கள் தயங்குகின்றனர். சமயத் திருநூல்களோ மரபுகளோ சொல்கின்ற அல்லது சமயத் தலைவர்கள் கூறுகின்றனர் எனும் ஒரே காரணத்தால் எதையும் ஏற்கும் மக்களது மனநிலை இன்று மாறி வருகிறது. எனவே சமயங்களும் தங்களை அனுபவத்தில் வேரூன்றிக் கொள்வது இன்றைய காலகட்டத்தின் கட்டாயம்'' என்கிறார் தமிழ் நாட்டு கத்தோலிக்க இறையியலாளர் தே.அல்போன்சு.

இச் சிந்தனைத் தூண்டலுடன் நம் சூழமைவில் உண்மைக்கு சாட்சி பகர கிறிஸ்தவர்களுக்கு உள்ள அறக்கடப்பாடானது கிறிஸ்தவ அர்ப்பணத்துக்கு அடித்தளமும் அச்சாணியும் ஆணிவேருமான இறை அனுபவத்தின் பிரதிபலிப்பும் வெளிப்பாடுமேயாகும் என்பது இக்கட்டுரையின் கருப்பொருளாகும்.

புனித பவுலின் இறை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வையும் பணியையும் கூர்ந்து நோக்குவது இக்கட்டுரையின் பாங்காகும். திருமுழுக்கின் வழியாக கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வு தோற்றம் பெறுகின்றது. மானிட பருவ வளர்ச்சிப் படிகளை கடந்து செல்ல கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வும் சமகால வளர்ச்சியும் முதிர்ச்சியும் ஆழமும் காண்பது இயல்பானதாகிட வேண்டும். கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வின் இயல்பான வளர்ச்சிக்கு நீர்வார்த்து, வரம்பு கட்டி, பசளையிடுவதான் ஏனைய அருட்சாதனங்களான நற்கருணையும், உறுதிப்பூசுதலுமாகும். இல்லறமும் துறவறமும் கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வின் சமூகத்தன்மை கொண்ட வெளிப்படையான சாட்சிய வாழ்வோடு பணியை அடிப்படையாகக் கொண்டதாகும். இப்பணி இறைய ரசுப் பணியாகும்.

புனித பவுலின் வார்த்தையில் ''.... உண்பதும் குடிப்பதுமல்ல மாறாக உண்மை, அன்பு, நீதி, அமைதி ஆகியன தூய ஆவியின் கனிகளில் வாழ்வதாகும்'' (உரோ 14:17)

இறைமக்களின் சமூகம் திருச்சபை கிறிஸ்துவினுடையதும், கடவுளுடையதும், அரசை அறிவிப்பது அந்த அரசின் வித்தாகவும் தொடக்கமாகவும் இருக்கிறது. அது படிப்படியாக வளரும் வேளையிலே இவ்வரசின் நிறைவுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது திருச்சபை எனும் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் கோட்பாடு. கிறிஸ்தவ அர்ப்பணிப்பின் வாழ்வின் போக்கையும் இயல்புத் தன்மையும் கோடிட்டுக் காட்டுகின்றது கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வு. கிறிஸ்தவ அர்ப்பணத்தின் அடித்தள அனுபவத்தில் வாழ்வு வேரூன்றியுள்ளதா என்ற தேடலில் ஈடுபாடு கொள்ள திருமுழுக்கு வழியாகத் தம்மை அர்ப்பணித்தவர்களை ஊக்குவிக்கின்றது.

கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வில் வாழ்வோருக்கு புனித பவுலின் தமஸ்கஸ் அனுபவம் ஒரு முன்னுதாரணமாகின்றது. (தி.பா 9:3-19) தமஸ்கு வழியில் பவுல் இயேசுவை சந்தித்த நிகழ்வு அவருக்கு ஓர் ஆழ்ந்த அடிநிலை அனுபவமாக இருந்தது. (தி.பா 9:3-19, 26:12-18, 1 கொரி 15:5, கலா 1:14-15) ''துன்புறுத்தப்படும் இயேசு கிறிஸ்து நானே'' என்று குரல் கொடுத்த இயேசுவின் சந்திப்பு பவுலுக்கு ஒருமுறை வெளிப்பாடாகவும் (கலா 1:12) அவருக்கு கிடைத்த அழைத்தலாகவும் (கலா 1:15) இறைவனால் தடுத்தாற் கொள்ளப்பட்ட அனுபவமாகவும் நோக்கப் பட்டது. சிறப்பாக இச்சந்திப்பு நிகழ்வால் பவுல் இறைவனின் பால்பரிமாண முகங்களைக் காண்கிறார். அதன் விளைவாக அது வரை அவருக்குள் கருக்கொண்டிருந்த இறை உருவம் கலைகின்றது. அதனை கை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடுகின்றார்.

பவுல் கண்ட இறை உருவங்கள்

சிலுவையில் அறையுண்டு கொல்லப்பட்ட இயேசுவின் சந்திப்பு பவுலுக்கு ஒரு சவாலாக அமைந்தது. இறைவன் பற்றிய அவரது புரிந் துணர்வுக்கு அது சவாலாயிற்று.

தமஸ்கஸ் அனுபவத்தில் பவுலைச் சந்தித்து இயேசுவில் நம்மோடு துன்புறும் கடவுளின் வெளிப்பாட்டைக் கண்டார். ''நானே துன்புறுத் தப்படுபவன்'' என்ற குரல் விடுதலைப் பயண நூலில் மோயிசனுடன் எரியும் முட்புதரில் காட் சியளித்துப் பேசிய இறைவனின் உருவத்தை நம் கண் முன்னே கொண்டு வருகின்றது''மேலும் ''சின்னஞ் சிறியவருக்கு செய்ததை எனக்கே செய்தீர்கள்'' என்ற இயேசுவின் இறுதி நாள் தீர்ப்பு வார்த்தைகள் ''துன்புறும் ஏழைகளில் கடவுளின் உருவத்தை நமக்குச் சித்தரிக்கின்றது''.

பவுல் தமது தமஸ்கஸ் சந்திப்பில் இயேசுவை உயிர்த்தெழச் செய்த இறைவனின் நீதியை உணர் கின்றார். இறைவனின் தலையாய பண்புகளில் ஒன்று அவரது நீதியுடைமையேயாகும். இது பவுல் தமது மனமாற்றத்தின் முன்னரே பழைய ஏற்பாட்டில் கற்றறிந்த உண்மையாகும். அன்று தமஸ்கஸ் பாதையில் அவரது பட்டறிந்த அனு பவமாகின்றது. இறைவன் நீதி வழுவாதவர். நீதியற்ற நடத்தை அநீதிக்குப் பணிவோர் மீது இறைவனின் சினமும் சீற்றமும், நீதித் தீர்ப்பும் விழும். ஆக இயேசுவின் உயிர்ப்பு இறை நீயின் வெளிப்பாடாகும். (கொலோ 1:16; 2:15) தன் னலம் நாடுபவரின் உண்மைக்குப் பணியாமை, அநீதிக்குப் பணிதல் மீது குறை தீர்ப்பு விழும் என்பது பவுலின் அறிவுறுத்தலாகும். (உரோ 1:18, 2:8)

இயேசுவை உயிர்ப்பித்த இறைவனின் செயல் காக்கும், விடுவிக்கும், மீட்கும், ஒப்புரவாக்கும் ஏற்புடையவர்க்கும் செயல் என பவுல் நம்புகின் றார். (1 கொரி 6:11, உரோ 3:26; 8:30; கொலோ 1:13, கொலோ 1:22; 2 கொரி 5:17) சுருக்கமாக இயேசுவை உயிர்ப்பித்த இறைவன் வாழவைக் கும் இறைவன் என உணர்ந்தார்.

இயேசுவை உயிர்த்தெழச் செய்த இறைவன், சீடரையும் உயிருடன் எழுப்புவார் என நம்பி னார்.பவுலின் இந்நம்பிக்கை பழைய ஏற்பாட்டில் எசேக்கியல் இறைவாக்கினருடன் பேசிய, வாழ வைக்கும் இறைவனின் வார்த்தையை நினைவு படுத்துகின்றது. (எசே 37:13-14)

இயேசுவை உயிர்த்தெழச் செய்த நிகழ்வு வழி யாக ''பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ'' (2 கொரி 5:17) என வியக்கும் பவுல் தம்மை நற்செய்தியை வழங்க அழைக்கும் இறை வனின் குரலைக் கேட்கிறார். இறைவனை நம்பி, வாழ்வுக்காக, மீட்புக்காக காத்திருக்கும் புறக் கணிக்கப்பட்டோர், பாவிகள் எனப் பழிச்சொல் லுக்கு ஆளாக்கப்பட்டோர், ஏழை எளியவருக்கு உயிர்த்தெழல் உண்டு என்பது ஒரு மாபெரும் நற் செய்தி என பவுல் ஏற்கின்றார். (1 கொரி 11:26) உயிர்த்தெழச் செய்தல் இறைவனின் ஒப் புயர்வற்ற அன்பின் அருளின் வெளிப்பாடாகும். இந்நற்செய்தியை அறிவிக்க அவர் தாயின் வயிற்றிலிருந்தே அழைக்கப்பட்டதாக உணர்ந் தார். இதற்காகவே இறைவன் தம்மை அனுப்பி யுள்ளதாக அறிந்துகொண்டார். (2 கொரி 2:17) அது தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியாகக் கருதி ஏற்றார். (2 கொரி 5:15) இவ்வாறு புதிய உடன்படிக்கையின் பணியாளராக தாம் ஏற்படுத் தப்பட்டவர் என்பது பவுலின் உறுதியாகும். (2 கொரி 3:6, 4:17; 5:18) நற்செய்தியை அறிவிப் பதற்காக பவுல் துன்புற்றார் (1 கொரி 4:9) அவர் இறைவனின் ஆற்றலால் நிரப்பப்பட்டார் (1தெச 2:2)

பவுலின் இந்த இறை அனுபவம் இறைவ னுக்கு உகந்த வாழ்வு வாழ வேண்டும், தீமை யின் ஆற்றலை ஆட்கொண்டிட இறைவன் தரும் படைக் கலன்களையும் பயன்படுத்தல் வேண் டும், வாழ்வு முழுவதும் இறைவனுக்கு நன்றி யாக அமையவேண்டும் என்ற அர்ப்பண வாழ் வை அவரில் வளரச் செய்தது.

கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம்

பவுலின் மேற்கண்ட இறை அனுபவம் இன்றைய நம் சூழலில் நம் கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளத்தை தேட வேண்டும் என்ற உணர்வை அளிக்கின்றது. சிறப்பாக நம் கிறிஸ்தவ வாழ் வில் நாம் விசுவசிக்கும் கடவுள் யார்? நம் பய ணத்தில் சாதாரண இயல்பு வாழ்க்கைக்கு, நொண்டியடிக்கும் சூழலில் புறக்கணிப்பும் ஓரங் கட்டலும் அதனால் நம்வாழ்வு தான் உரிமை வாழ்வு என உணர்த்தப்படும் நிலையில், ஏழை எளியவர்களின் சுயவிலாசம் அழிக்கப்பட்டவர் களாய் எண்ணிக்கை அறியப்படாத சூழலில் கிறிஸ்தவ இறை நம்பிக்கையின் அடித்தளத்தில் இருக்கும் இறைவன் யார்? அவர் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டு உயிர்த்தெழப்பட்ட இயேசுவின் இறைவனாக இருப்பாரா?

இயேசுவின் சிலுவை மரணம் அவரது சமூ தாய விளிம்பில் நிகழ்ந்த ஒன்றாகும். இவ் விளிம்பு நிகழ்வில் இயேசுவின் வெறுமையாகுத லும் அதிகாரத்துக்கு ஆட்கொள்ளப்படாத நிலை யும் இறைவனின் வல்லமையில் நம்பிக்கை கொண்டதால் ஏற்படும் வெளிப்பாடுமேயாகும். சமூக தீய சக்திகளின் ஆதிக்கம் கிறிஸ்தவர்கள், இயேசுவைப் பின் செல்பவர்கள் தலைசாய்க்க வேண்டிய ஒன்று அல்ல. மாறாக ''அனைத்துக் கும் மேலாக இறையரசையும் இறைவனுக்கு ஏற் புடையதையும் நாடுங்கள்'' (மத் 6:33) என்ற இயேசுவின் வாழ்வும் பணியுமே அந்த சமூக விளிம்பு நிகழ்வான சிலுவை மரணத் தண்ட னைக்கு அவரை இட்டுச்சென்றது என்பதை உணர்வதாகும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீதி வாழ்வு

நீதிமொழிகள் 3:33இல் நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார் என்றும் நீதி 10:6இல் நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. நீதி 10:2இல் நீதியோ மரணத்திற்கு தப்புவிக்கும் என்றும், நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது.

நாம் நீதியாய் வாழ்வதையே தேவன் விரும்புகிறார். ஏனெனில் தேவன் நீதியுள்ளவர். சங். 11:7இல் கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதி என்று கூறப்பட்டுள்ளது. என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்றும் கர்த்தர் வாக்குப் பண்ணியுள்ளார். ஆக, நம்முடைய ஆண்டவர் நீதியுள்ளவர் ஆகையால் நாமும் நீதியின்படி வாழ வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

உபா. 16:18இல் நீ பிழைத்து உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நீதியையே பின் பற்றுவாயாக என்று கூறப்பட்டுள்ளது.

நாம் பிழைத்து ஆசீர்வாதத்தைப் பெற வேண்டுமானால் நீதியால் வாழ வேண்டும் என வேதம் கூறுகிறது.

உலகம் என்ன சொல்லும்? இந்த நூற்றாண்டில் நீதியாக வாழ்ந்தால் பிழைக்க முடியாது. பொய், ஏமாற்றுதல், களவு, இலஞ்சம், இப்படி பல காரியங்களையும் நீ செய்தால் தான் பிழைக்க முடியும் என்று உலகிலுள்ளவர்கள் சொல்வார்கள், சொல்கிறார்கள். இப்படி ஏமாற்றி வாழ்ந்து பணம், பொருள் எல்லாம் சேர்த்து வசதியுடன் அவர்கள் வாழலாம். பார்ப்பதற்கு நன்றாக இருப்பது போலத் தெரியும். உண்மையில் அவர்கள் ஆசீர்வாதமாக இல்லை. ஏனெனில் வேதம் கூறுகிறது அவர்கள் சறுக்கான பாதையில் நிற்கிறார்கள் என்று. எப்போது அவர்களுக்கு என்ன சம்பவிக்கும் எனத் தெரியாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அநியாயமாய் சம்பாதித்து வாழ்ந்து அவர்களாவது, அவர்கள் சந்ததியாவது ஆசீர்வாதமாக, சமாதானமாக, சந்தோஷமாக வாழ்ந்திருக்கிறார்களா எனப் பாருங்கள். அப்படி வாழ்பவர்களை சாபம் தான் தொடரும். நிம்மதியற்ற ஒரு வாழ்க்கையும், வேதனை நிறைந்த ஒரு வாழ்க்கையும்தான் அவர்கள் வாழ்வாக இருக்கும்.

ஆனால் கஷ்டமோ, நஷ்டமோ நீதியாய் வாழும்பொழுது அதனுடைய ஆசீர்வாதமே வித்தியாசமானது. நீதியைப் பின்பற்றுகிறவனையோ கர்த்தர் நேசிக்கிறார் என்று நீதி 15:9இல் கூறப்பட்டுள்ளது. நிறைய காணிக்கை போட்டால், அல்லது நிறைய ஊழியம் செய்தால் கர்த்தர் நம்மை நேசிப்பார் என்று கூறவில்லை. கொடுப்பதும், ஊழியம் செய்வதும் நமது கடமை. ஆனால் தேவன் நம்மை நேசிக்க வேண்டுமானால், நாம் நீதி செய்கிறவர்களாக வாழ வேண்டும். நீதி 21:3 கூறுகிறது: பலியிடுவதைப் பார்க்கிலும் நீதி செய்வதே கர்த்தருக்குப் பிரியமானது என்று.

ஏசாயா. 28:17இல் தேவன் நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன் என்று கூறினார். ஆண்டவர் நியாயந்தீர்க்கும் போது நாம் செய்த நீதிக்குத் தக்கதா கத்தான் அது இருக்கும். அநியாயம், அக்கிரமம் செய்து கொண்டு தேவனிடமிருந்து தப்பமுடியாது. 1.சாமுவேல். 26:23 இல் தாவீதைக் கொல்ல சவுல் பலமுறை முயன்றான். முடியவில்லை. ஆனால் சவுலைக் கொல்ல தாவீதுக்கு சந்தர்ப்பம் கிடைத்தும், அவன் கொல்லவில்லை. சவுல் இனி உனக்கு பொல்லாப்பு ஒன்றும் செய்யமாட்டேன் திரும்பி வா என்று கூப்பிட்டான். அப்பொழுது தாவீது போகாமல் ''கர்த்தர் அவனவனுக்கு, அவனவன் நீதிக்கும் உண்மைக்கும் தக்கதாய் பலனளிப்பார்'' என்று கூறினார்.

சங்கீதம். 112:9இல் அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் நீதி உத்தம மார்க்கத்தானை தற்காக்கும் என்றும், (நீதி.13:6), நீதி மரணத்துக்குத் தப்புவிக்கும் என்றும் கூறப் பட்டுள்ளது. (நீதி.10:2) யோபு சொன்னார் ''என் நீதியை கெட்டியாய் பிடித்திருக்கிறேன் என்றும், நீதியைத் தரித்துக் கொண்டேன். அது என் உடுப்பாயிருந்தது என்றும் கூறினார். (யோபு.27:6, 29:14)

யோபுவைக் குறித்து தேவன் சாத்தானிடம் கூறும்பொழுது உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார். (யோபு:1:6) உத்தமனாய் நீதிமானாய் அவன் வாழ்ந்தபோது சோதனை வந்தாலும் அவனது சோதனைக்குப் பின் பலமடங்காக தேவன் யோபுவை ஆசீர்வதித்தார்.

அநேகர் சிறிது காலம் நீதியாக வாழ்ந்து பார்ப்பார்கள். சோதனை, பிரச்சினை, துன்பம், கஷ்டம் வரும்பொழுது எல்லாவற்றையும் தூக்கிப்போட்டு விட்டு பழைய வழிக்குச் சென்றுவிடுவார்கள். எக்காலத்திலும் நீதியைச் செய்கிறவர்கள் பாக்கியவான்கள் என்று வேதம் கூறுகிறது. பேதுரு நீதியினிமித்தம், நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் என்று கூறினார். (1 பேது. 3:14)

வேதம் கூறுகிறது, நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும் என்று (வெளி.22:11) எசேக்கியேல் 18ல் நீதிமான் தன் நீதியை விட்டு விலகி, அநீதி செய்து துன்மார்க்கர் செய்கிற சகல அருவருப்புகளின்படி செய்வானேயாகில் அவன் பிழைப்பானோ! அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவ தில்லை. அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான் என்றும், துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தை விட்டு விலகி நியாயத்தையும், நீதியையும் செய்வானேயாகில் அவன் தன் ஆத்துமாவை பிழைக்கப் பண்ணுவான், அவன் எச்சரிப்படைந்து, தான் செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புகிறபடியினாலே அவன் பிழைக்கவே பிழைப்பான் என்றும் கூறப்பட்டுள்ளது.

எனவே நீதியாய் வாழ்வதென்பது கொஞ்ச நாட்களுக்கல்ல, நமது வாழ்நாள் முழுவதும் நாம் நீதி செய்கிறவர்களாய் வாழ வேண்டும். மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும், உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிற வர்களையும் சந்திக்கிறீர். (ஏசாயா. 64:5) என்று கூறப்பட்டுள்ளது. நீதி செய்கிற வர்களையே தேவன் சந்திக்கிறார். (ஏசாயா 64:5) எனவே நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையாய்த் தேடுங்கள் (செப். 2:3).

- எஸ்.ஜெ.தினகரன்

விசுவாசிகள் மன்றாட்டு

என்றும் வாழும் இறைவா, உலகில் வறுமையை ஒழிக்க பல திட்டங்களைப் போடும் உலக நாடுகளின் முயற்சிகள் வெற்றி பெறவும், இதற்கு உலக பணக்காரர்கள் தாங்கள் சேர்த்து வைத்துள்ள பணங்களைத் தந்து உதவ மனம் அருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நல்லதொரு குடும்பம்'

''எனக்குத் திருமணமாகி எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஒரு பெண் குழந்தை உள்ளது. என் கணவர் இதுவரை என்னிடம் அன்பாக ஐந்து நிமிடம் பேசியதோ, அருகில் அமர்ந்து, ஆதரவாக என் தோளைத் தட்டிக் கொடுத்ததோ இல்லை. அன்புக்கும் பாசத்துக்கும் என் மனம் ஏங்குகிறது. என் வாழ்க்கையையே மிகத் துயரமான தாகக் கருதுகிறேன். இதுதான் இல்லற வாழ்வா?!''

''இரவு பகலாக உழைக்கக் கூடியவன் நான். தொழில் போட்டியினால் ஓய்வின்றி உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். விடியற் காலையில் வீட்டை விட்டு கிளம்புகிறவன், வீடு திரும்ப இரவு பத்து மணி ஆகிவிடுகிறது. ஆனால் வீட்டிற்கு வந்து நுழைந்தவுடனே, ''பிள்ளைகள் பேச்சைக் கேட்கவில்லை, உறவுகளை நலம் விசாரிக்க உடன் வரவில்லை, வீட்டிற்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கவில்லை'' என்று என் மனைவியின் ஏச்சு பேச்சும் இடையறாது ஒலிக்கின்றது. நான் எதற்காக உழைக்கிறேன், எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறேன் என்பது என் பிள்ளைகளுக்கும் புரிவதில்லை; கட்டிய மனைவிக்கும் புரிய வில்லை! நான் என்ன செய்ய?''

இவை போன்ற அங்கலாய்ப்புகளை அவஸ்தைகளைப் பலபேர் பகிரக் கேட்கிறோம். எழுதியவற்றை இதழ்களில் வாசிக்கிறோம். கடவுளால் படைப்பின் தொடக்கத்திலேயே நிறுவப்பட்டு மனித இனத்தின் போற்றுதற்குரிய மதிப்பீட்டு நலன்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற 'குடும்பம்' என்ற மாண்புமிகு அமைப்பு முறை இன்று சந்திக்கும் சிக்கல்கள் ஏராளம்.

அன்பையும் அறத்தையும் பண்பாகவும் பயனாகவும் கொண்டு விளங்க வேண்டிய பலரின் குடும்ப வாழ்வு சிதைவுக்கு உட்பட்டுக் கிடக்கிறது. திருமண இணைப்பால் உருவாகிற குடும்பத்தில் பிறக்கும் மனித சமுதாயத்தின் புதுக் குடிமக்களான பல பிள்ளைகள் வாழ்வும் உருக்குலைந்து நிற்கிறது.

சமுதாயத்தின் அடித்தளமாகக் கருதப்படுகின்ற குடும்பம் இன்றைய காலக்கட்டத்தில் தன்னை அழிக்கத் தேடுகின்ற அல்லது ஊனப்படுத்த முனைந்து நிற்கின்ற பல்வேறு சக்திகளின் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளது என்று அருளாளர் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 'குடும்ப வாழ்வு' என்ற மறைத்தூது அறிவுரையில் (எண்.3) சுட்டிக்காட்டியுள்ளார்.

கணவனும் மனைவியும் ஒருவரொருவர் மட்டில் சார்பு நிலையின்றி வாழவேண்டும் என்பது பற்றிய தவறான சிந்தனை செயல்முறையிலான கருத்துக்கள்; பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கு மிடையே அதிகாரம் பற்றிய கருத்து வேறுபாடுகள்; முறையான மதிப்பீடுகளை வழங்குவதில் குடும்பம் எதிர்கொள்ளும் நடைமுறையிலான சிக்கல்கள் போன்றவை குடும்ப வாழ்வினை நலிவுறுத்தும் கூறுகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தீங்குகளுக்கு அடிப்படைக் காரணமாகப் பெரும்பாலும் இருப்பது சுதந்திரம் பற்றிய தவறான கருத்தும் அனுப வமும்தான் என்றுரைத்து, சுதந்தி ரம் என்பது திருமணம், குடும்பம் ஆகியவை பற்றி இறைவன் வகுத்த திட்டத்தின் உண்மைப் பொருளைச் செயல்படுத்துவதற்கான சக்தியே என்ற கருத்து மறைந்து, தன்னல வேட்கையால் பிற ருக்கு எதிராகக்கூட எழுகின்ற தன்னாட்சியுரிமை வாய்ந்ததொரு வல்லமையாகக் கருதப்பட்டு விடுகிறது என்று ஆதங்கப்படுகிறார் (எண். 6).

ஆம், தற்சார்பு, தனித்தன்மை மனப்போக்குகள் அதிகமானதால் சார்ந்து வாழ்தல், சேர்ந்து வாழ்தல் போன்ற நயமான கூறுகள் செல்லாதவைகளாக, பழைமையானவையாக, இன்றைய காலக் கட்டத்திற்குச் சாத்தியமாகாதவைகளாகக் கருதப்படுகின்றன. வறண்ட மனநிலையும் விசாலப் பார்வைகளும் குறைந்துபோனதாலே அன்பார்ந்த குடும்பங்கள் அற்றுப்போய்க்கொண்டிருக்கின்றன.

காசு பணத்துக்குக் கவலையில்லாமல் வாழ்ந்திட காலமெல்லாம் அதனை நாடித் தேடிச் சேர்ப்பதே குடும்ப வாழ்வு; ஆர அமர வீட்டில் அமர்ந்து குடும்பத்தினருடன் பேசி மகிழ்வதும் நேரம் செலவழிப்பதும் சோம்பேறிகளின் அடையாளம் என்ற கருத்தோட்டம் கொண்ட கணவர்கள் இன்று நிறைந்திருப்பது உண்மை. எவ்வளவுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் சேர்த்து என்ன செய்ய? வாரத்திற்கு ஒரு நாள்கூட தன் கணவர் தன்னிடமும் தனது குழந்தைகளிடமும் உட்கார்ந்து பேசுவதோ, உரையாடி மகிழ்வதோ இல்லையே என்ற வருத்தங்களைச் சுமந்து வாழும் மனைவியரின் மனத்துயர் போக்க வேண்டியது இவர்கள் கடமை அல்லவா!

''தந்தை என்பவர் வீட்டிற்கு வந்து போகும் விருந்தாளி போலவே இருக்கிறார். என்னை அன்பு செய்வதையோ அரவணைப்பதையோ அருகில் இருப்பதையோ நான் அனுபவிப்பதில்லை'' - போன்ற ஆதங்கங்களை அந்தரத்தில் பூட்டி வைத்திருக்கும் பிள்ளைகளை விடுவிக்க வேண்டியது அப்படிப்பட்ட தந்தையரின் கடமை அன்றோ!

வீடுகளை அழகாய் வைத்திருப்பதில் விவேகமாய் செயல்படும் வீட்டுத் தலைவிகள், அன்பின் கூடுகளாய் அதைப் பேணிக் காக்கத் தவறி, அனுதினச் சண்டைகளின் சத்தங்களால் நிரப்புவது எவ்வளவு தவறானது?

தொலைக்காட்சித் தொடர்களுக்கு நேரத்தையும் முக்கியத்துவத்தையும் கொடுப்பதனால் அவர்கள் பிள்ளைகளைத் தூரத்தில் வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைத் தொலைத்து விடுகிறார் கள் என்பதனை உணர்தல் அவசியம். பிள்ளைக ளோடு பேசிச் சிரித்தும், அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தும், அவர்களோடு கலந்து விளையாடியும், கடவுளைத் துதித்தும் கூடி மகிழ்ந்து வாழ்வதுதான் குடும்ப வாழ்வு என்ற புரிதலைக் கொண்டு வாழ்தலும் குடும்பத்தை வாழ வைத்தலும் அன்னையர் கடமை என்று நினைவூட்டல் அவசியம் தேவைப்படுகிறது.

''பெற்றோர் படிப்பிலும் அறிவிலும் பின்தங்கியோர், நாங்களோ வாழ்வில் பலவற்றைக் கற்றுள்ளோம், எங்கள் வாழ்வை நாங்களே வாழக் கற்றுவிட்டோம், அவர்களோடு பேசுவதும் விவாதிப்பதும் நேர விரயம், நிராகரிக்கப்பட வேண்டியது'' என்ற கருத்தோட்டம் கொண்டு வாழும் பிள்ளைகள் இன்று எண்ணிக்கையில் கூடி விட்டனர்.

''பல்கலைக்கழகத்தில் படிக்காமலோ, பட்டங்களைச் சுமக்காமலோ இருந்தால் என்ன, என்னைச் சுமந்தவர்கள், கண்ணின் கருவிழி போலக் காத்தவர்கள், தங்களை இழந்து என்னை வளர்த்தவர்கள் என்ற சிந்தனைப் போக்குடன் அவர்களோடு உரையாடவும் உறவாடவும் உடனிருக்கவும் செய்தால் எத்துணை மகிழ்ச்சியும் இன்பமும் அவர்கள் இதயத்திலும்

எண்ணத்திலும் நிறைந்திருக்கும் என்று பிள்ளைகள் உணர்ந்து வாழ்வது நலம்.

குடும்பம் மனிதப் பண்பை வளமுறச் செய்கின்ற ஒரு பள்ளி. குடும்பத்தின் வாழ்வும் பணியும் முழு மலர்ச்சிபெற வேண்டுமானால் அங்கு பாச உணர்வோடு கூடிய மன ஒன்றிப்பும், மணமக்களின் கூட்டு ஆலோசனையும், குழந்தைளைப் பயிற்றுவித்தலில் பெற்றோரின் கருத்தான ஒத்துழைப்பும் கட்டாயத் தேவை என அறிவித்துள்ளது இரண்டாம் வத்திக்கான் சங்கம்.

இல்லத் திருச்சபையாக விளங்குகின்ற கிறித்தவக் குடும்பங்களில் பெற்றோர் தமது சொல்லாலும் முன்மாதிரியாலும் தங்கள் பிள்ளைகளுக்கு முதன் முதலில் நம்பிக்கையைப் போதிப்பவர்களாக இருக்கவும் வலியுறுத்துகிறது. (எண்:11)

தந்தையின் பயிற்றுவிப்பிலும், தாயின் அரவணைப்பிலும் குழந்தைகள் வளர்ந்து, முழுக்கடமை உணர்வுடன் தங்கள் வாழ்க்கை நிலையைத் தேர்ந்து கொள்ளவும் கற்பிக்கின்றது (எண்: 52)

மனிதப் பண்பை வளமுறச் செய்கின்ற பள்ளியாக, சமுதாயத்தின் அடித்தளமாக, இல்லத் திருச்சபையாக இருக்கின்ற குடும்ப அமைப்பு மேன்மை மிக்கதாய் அமைந்திட, பெற்றோர் பிள்ளைகள் அன்பினால் பிணைக்கப்பட்டுச் சேர்ந்து வாழ்வதில் இன்பம் காணக்கூடியவர்களாக மாறுதல் அவசியம்.

பொருள் சேர்ப்பது மட்டுமே வாழ்வென்ற சிந்தனையைத் தொலைத்து இணைந்து வாழ்தலில் இன்பம் கண்டு 'அன்பையும் தியாகத்தையும் அணிகலன்களாகக் கொண்டு திகழும் குடும்பம் நல்லதொரு குடும்பம்.

- அருட்தந்தை எம்.ஆர்.சேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல வேளையாக வேட்டைக்கு வந்திருந்த இரு கிராமவாசிகள் மயங்கிக் கிடந்த ஓல்சனைக் கண்டு, அவரைக் கிராமத் தலைவனிடம் தூக்கிச் சென்றார்கள்.

வெகு விரைவிலேயே அருகிலிருந்த நகரத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ஓல்சன். அவருக்குத் தீவிரமான மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இரண்டு வாரங்கள் கழிந்தன. ஓல்சன் பூரண சுக மடைந்துவிட்டார். இனிமேலும் தாமதிப்பது ஆண்டவருடைய சித்தமல்ல என்பதை உணர்ந்தார். மோடிலோன் பழங்குடிகளிடையே திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்.

மாதங்களுக்கு முன்னால் மோடிலோன் பழங்குடிகள் நான்கு மீனவர்களைக் கொன்றுவிட்டார்கள். இதற்கு மேல் நான் வரமாட்டேன்'' என்று கண்டிப்பாக மறுத்துவிட்டான் அந்த வழிகாட்டி.

படகைக் கரையோரமாக நிறுத்தி கீழே இறங்கினார் ஓல்சன். வழிகாட்டியோ பயந்து நடுங்கிய படி படகிலேயே இருந்துவிட்டான்.

சுற்றிலும் இருந்த காட்டுப் பகுதியில் நடை பாதைகள் தென்படுகின்றனவா என்று ஓல்சன் தேடினார். ஒவ்வொரு பாதையிலும்தான் கொண்டு சென்றிருந்த பரிசுப்பொருட்களை வைத்தார்.

மீண்டும் திரும்பினார் ஓல்சன்!

மருந்துகளையும், பரிசுப் பொருட்களையும் வாங்கி ஒரு படகில் நிரப்பினார். தன்னிடம் எஞ்சியிருந்த பணத்தைக் கொடுத்துக் கெஞ்சிக் கூத்தாடி, ஒரு வழிகாட்டியை அமர்த்திக்கொண்டார். ஆற்றின் வழியாக அவர்களுடைய பயணம் தொடர்ந்தது.

சில நாட்கள் கழித்து அடர்ந்த காட்டின் நடுவே ஆறு வளைந்து திரும்பியது.

திடீரென்று வழிகாட்டி ஆற்றங்கரையைச் சுட்டிக் காட்டியபடி கத்தினான்.

''வேண்டாம், வேண்டாம், இதற்குமேல் போக வேண்டாம். அதோ அந்த இடத்தில்தான் சில

இருவருவமாகக் கொலம்பியா கிராமமொன்றுக்குத் திரும்பினார்கள்.

ஒரு மாதம் கழித்து மீண்டும் அதே இடத்துக்குப் படகில் சென்றார் ஓல்சன். வழிகாட்டி அவருடன் வரவில்லை.

கரையில் இறங்கிய ஓல்சன் தான் பரிசுப் பொருட்களை வைத்திருந்த இடங்களை நோட்டமிட்டார். பரிசுப்பொருட்களை ஒருவருமே தொடவில்லை.

மௌனமாகக் கிராமத்துக்குத் திரும்பினார் ஓல்சன்.

அதன்பிறகு இடையிடையே சென்று பார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார் ஓல்சன். பரிசுப் பொருட்கள் அப்படியே இருந்தன. மோடிலோன் பழங்குடிகள் அவரை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தான் இது சுட்டிக்காட்டுகிறது.

ஊக்கமாக ஜெபித்தார் ஓல்சன்.

மேலும் ஒரு மாதம் கழிந்தது. ஒருநாள் பரிசுப் பொருட்கள் மறைந்துபோயிருப்பதைக் கண்டு தேவனைத் துதித்தார். மீண்டும் பரிசுப்பொருட்களை வைத்துவிட்டுத் திரும்பினார். அவையும் மறைந்துபோயின.

மூன்றாவது முறையாக ஓல்சன் வைத்த பரிசுப்பொருட்களை எடுத்துக்கொண்ட பழங்குடிகள் பதிலுக்கு ஒரு வில்லையும் சில அம்புகளையும் வைத்துவிட்டுச் சென்றிருந்தார்கள்.

தன்னை அவர்கள் நேருக்கு நேர் சந்திக்க விரும்புகிறார்கள் என்று நினைத்த ஓல்சன் ஜெபத்தோடு காட்டுப் பாதையில் தொடர்ந்தார். அங்கே நான்கு அம்புகள் தரையில் குத்தி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அவர் திடுக்கிட்டு நின்றார்.

'அப்படியே நில், மீறி வந்தால் கொல்லப்படுவாய்' என்பதே இதற்கு அர்த்தம் என்று

விசுவாசிகள் மன்றாட்டு

அமைதியின் இறைவா,
நாங்கள் நோன்பு
இருக்கும்போது
வெளிவேடத்திற்கு இடம்
கொடாமல் மறைவாய்
இருக்கும் உம்மை
தெரியும்படி உள்ளத்தால்
மனம் வருந்தி உமது
இரக்கத்தைப் பெற்றுக்
கொள்ள துணைபுரியும்படி
ஆண்டவரே, உம்மை
மன்றாடுகிறோம்.

ஏற்கனவே யூகோஸ் பழங்குடிகள் ஓல்சனை எச்சரிக்கை செய்திருந்தார்கள்.

எத்தனையோ மாதங்களுக்குப் பிறகு மோடிலோன் பழங்குடிகளைச் சந்திக்க கிடைத்துள்ள இந்த வாய்ப்பை நழுவ விடுவதா என்று நினைத்த ஓல்சன் தயக்கத்துடனே மேலும் நடந்தார்.

சிறிது தூரத்தில் வேறு இரண்டு அடையாளங்கள் வைக்கப்பட்டிருந்தன.

பழங்குடிகள் உணவாக உட்கொள்ளும் யுகா என்ற கிழங்கு இரண்டு துண்டாக வெட்டப்பட்டு, வெட்டப்பட்ட பகுதியின் மீது களி மண்ணால் பூசி வைக்கப்பட்டிருந்தது.

ஓல்சனுக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் சிறிது நேரம் தயங்கி நின்றார்.

தனக்குத் தெரிந்த இரண்டு மோடிலோன் வார்த்தைகளைத் திரும்பத் திரும்பக் கத்தினார்.

''கயாகபா, டோபுகுபி'' இவையே அந்த வார்த்தைகள்.

ஓல்சன் ஏற்கனவே ஒருமுறை மோடிலோன் பழங்குடிகளால் குத்திக் கொல்லப்பட இருக்கும் வேளையில் அவர்களில் ஒருவன் அதைத் தடுத்துக் கூறிய வார்த்தை தான் முதல் வார்த்தை.

1930ஆம் ஆண்டு மூன்று மோடிலோன் பழங்குடிகள் பெட்ரோலியக் கிணறுகளின் பணியாளர்களால் பிடிக்கப்பட்டார்கள்.

அப்போது அவர்கள் திரும்பத் திரும்பக் கூறியதுதான் இரண்டாவது வார்த்தை. இதனால் அவர்கள் டோபுகுபி பழங்குடிகள் என்றுகூட அழைக்கப்பட்டார்கள்.

இந்த இரண்டு சொற்களுக்கும் அர்த்தத்தை அறிந்திருந்தால் ஓல்சன் இவ்வளவு தைரியமாகக் கத்தியிருக்க மாட்டார்! ''ஒரு பிரயோஜனமும் இல்லாத சோம்பேறிகள், இங்கே வாருங்கள்'' என்பது தான் அதன் அர்த்தமாகும்.

ஓல்சன் திரும்பத் திரும்பக் கத்திய பிறகும் ஒரு பதிலும் வரவில்லை. சில மணித்துளிகள் மோடி லோன் பழங்குடியினருக்காகக் காத்திருந்த ஓல்சன், யாரும் வராமையால் ஏமாற்றத்துடன் திரும்பினார்.

இரவு முழுவதும் ஆற்றங்கரையில் தங்கிய ஓல்சன் மறுநாள் காலையில் மரக்கிளைகளை வெட்டி கட்டுமரம் ஒன்றைக் கட்ட முயன்று கொண்டிருந்தார்.

அப்போது காட்டுப் பாதையில் ஐந்து பழங்குடிகள் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் பின் வாங்கினார் ஓல்சன்.

அவர்களோ வில்லில் அம்பைப் பூட்டியபடி அவரையே அசையாது பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

- எச்.பி.ராஜ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்... பொய்யைத் தவிர வேறில்லை!

'கல்லூரி வளாகத்தில் செல்போன் உபயோகிக்கக் கூடாது' என்கிற சட்டத்தை மீறி கல்லூரி இடைவேளை நேரத்தில் தன் மொபைல் போனை எடுத்து அம்மாவிடம் பொய் சொல்லிக் கொண்டிருந்தாள் அகிலா.

''இன்றைக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருக்கம்மா. வீட்டுக்கு வர நேரமாகும். பயம் ஒன்றுமில்லேம்மா, ஸ்பெஷல் கிளாஸ் என்றால் காலேஜ் பஸ்ஸிலேயே கொண்டு வந்து விடுவார்கள்'' என்று தடுமாற்றமில்லாமல் அவள் கூறிய பொய்யைக் கேட்டு அருகிலிருந்த அவள் தோழி வனிதா, ''வேண்டாம் அகிலா, உலகத்தில் யாரிடம் வேண்டுமானாலும் பொய் சொல்லலாம். பெற்ற தாயிடம் மட்டும் பொய் சொல்லாதே'' என்று எச்சரிக்க, அகிலா குற்ற உணர்வோடு அவளைப் பார்க்க, வனிதா மீண்டும் சொன்னாள்;

''உண்மையாகத்தான் சொல்கிறேன். எனக்கு அம்மா கிடையாது. அம்மா மட்டும் இருந்திருந்தால் அவரை சத்தியமாக ஏமாற்றவே மாட்டேன்'' என்று.

தன் ஆண் நண்பன் மோகனுடன் இன்று ஊர் சுற்றத் திட்டமிட்டிருந்தவளை தோழி வனிதாவின் அறிவுரை தடுமாறச் செய்தது. உடன் பயிலும் நண்பன் மோகனுடன் சமீப காலப் பழக்கம்தான். அவனுடைய வசீகரப் பேச்சு, நடவடிக்கைகள் அகிலாவுக்குப் பிடித்தது. தான் அவனிடம் கொண்டிருக்கும் நட்பு மெல்ல மெல்ல காதலாகப் பரிணமிக்கும் சாத்தியக்கூறு அவளுக்கு புரிந்தது. ஆனால் அதை வெளிப்படுத்தாமலேயே நட்பு முறையில் பழகினாள். தோழி வனிதாவோ அகிலாவின் எதிர்காலம் பாழ்பட்டு விடக்கூடாதே என் பதில் உண்மையிலேயே அக்கறையுடன் இருந்தாள். பருவக் கோளாறு உடனடியாக அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளுமா என்ன?

அடுத்த முறை அம்மாவிடம் 'ஸ்பெஷல் கிளாஸ்' என்று பொய் சொல்லி இரவு ஏழு மணிக்கு வீடு திரும்பியபோது அம்மாவின் வரவேற்பில் ஏதோ மாற்றம் இருப்பது அகிலாவுக்குப் புரிந்து போக மிகவும் குழம்பிப் போனாள்.

அம்மா கேட்டாள்: ''அகிலா, இப்போதெல்லாம் அடிக்கடி ஸ்பெஷல் கிளாஸ் வைக்கிறார்களே... ஏன்?''

ஏற்கெனவே தீர்மானித்திருந்த பொய் பதிலாக இப்போது வெளிப்பட்டது. ''ஆமாம்மா... போன மாதம் எங்க லெக்சரருக்கு சின்ன விபத்து ஏற்பட்டு விடுமுறையில் இருந்தவர் இப்போது கல்லூரிக்கு வருகிறார். அவர் நடத்தி முடிக்காத பாடங்களை ஸ்பெஷல் கிளாஸ் வைத்து நடத்துகிறார்''.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அம்மா அவளையே ஒரு வினாடி பார்த்து விட்டு சொன்னாள்... ''அகிலா, நீ தகப்பனில்லாத பெண். உன்னைத் தனியே கல்லூரிக்கு அனுப்பி விட்டுத் தவிக்கும் மனம் என்னுடையது. தன் படிப்பை முடித்த உன் அண்ணன் இப்போதுதான் முதல் முதலாக வேலைக்குப் போகிறான். அதுவும் இரவு நேரப் பணி. அவன் வேலையில் நிரந்தரமாக ஒரு வருடமாவது ஆகும். நமக்கென்று சொந்த வீடு இல்லை. முதலில் உன் அண்ணனுக்குத் திருமணம் செய்ய வேண்டுமென்றாலும் பெண் கொடுப்பவர்கள் பையனுக்கு சொந்த வீடு இருக்கிறதா என்று தான் கேட்பார்கள். நீயும் இன்னும் ஓராண்டு படித்தாக வேண்டும். நீயும் சம்பாதிக்கத் தொடங்கினால் நம் குடும்பம் நம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும்.

இந்த நிலையில் நம்முடைய வளமான நோக்கங்களை தடுமாற வைக்கும் எதிலுமே கவனம் செல்லக்கூடாது. நீ வரத் தாமதமாகவே உன் கல்லூரிக்கு போன் செய்து கேட்டேன். ஸ்பெஷல் கிளாஸ் எதுவும் கிடையாது என்றார்கள். அப்படியானால் பொய் சொல்கிறாயா?''

எதிர்பாராத கேள்வியால் தடுமாறிய அகிலா ''என்னை மன்னிச்சிடுங்கம்மா. இனி சரியான நேரத்துக்கு வீடு திரும்பி விடுகிறேன்'' என்றாள்.

''நீ சரியான நேரத்துக்கு வீடு திரும்புவதைவிட சரியான முறையில் கல்லூரியில் படித்துவிட்டு வீடு திரும்புவதுதான் முக்கியம். உன் நோக்கமும், கவனமும் சிதறிப் போகுமானால் நீ கல்லூரிக்குப் போய் படிக்காமல் இருந்தாலும் பரவாயில்லை. இருப்பதை வைத்து வாழ்வோம். இனி நீ அந்தப் பையனுடன் பழகாதே'' என்றாள்.

அகிலா திகைத்தாள். அம்மாவுக்கு இது எப்படித் தெரியும். இதுபற்றி தோழி வனிதாவுக்கு மட்டும்தான் தெரியும். அவள் தான் அம்மாவிடம் சொல்லிவிட்டாளா? கல்லூரிக்குப் போன் செய்தால் யாரும் சொல்லமாட்டார்களே...? இது எப்படி சாத்தியம்? குழம்பிப் போனாள் அகிலா.

''அப்படியெல்லாம் தவறான பழக்கம் எதுவுமில்லை அம்மா'' என்று அம்மாவைச் சமாதானப் படுத்திய அகிலா, மறுநாள் வனிதாவைச் சந்தித்துக் கேட்டபோது, நேற்று அகிலாவின் அம்மாவிடம் போன் போட்டுசெய்தி சொன்ன வனிதா இப்போது ''நான் உன் அம்மாவிடம் பேசவேயில்லை'' என்று பொய் சொன்னாள்.

இப்போதெல்லாம் கல்லூரி முடிந்து சரியான நேரத்துக்கு வீட்டுக்கு வந்தாள் அகிலா. மோகனுடைய நட்பைப் பிரிய முடியாமல் தவித்த அகிலா இப்போது அவனுடன் பேசுவதை அறவே தவிர்த்து விட்டாள். அவனுடன் கொண்ட நட்புறவு திசை மாறும் முன்பே அம்மாவின் அறிவுரையால் இயற்கையாய் எழும் ஆசைக்கும், நட்புக்கும் இடையே மனதை ஊசலாட விட்டுக்கொண்டிருந்தாள். காதல் நிலையிலிருந்து நட்பு நிலைக்கு அகிலா தன் மனதை இழுத்துப் பிடித்து வைக்க, மோகனின் மனமோ தன்னிடமிருந்து விலகி விலகிப் போகும் அவள்மேல்தான் கொண்டிருப்பது வெறும் நட்பு அல்ல, வாலிப வயதில் ஏற்படும் அன்பு பிணைப்பு என்பதை மெல்ல மெல்ல உணர்ந்துகொண்டவனாய் அதை உறுதிப்படுத்திக் கொள்ள அவளைத் தனிமையில் சந்திக்க விரும்பினான்.

அவள் எவ்வளவோ மறுத்தும் அவன் விடாப்பிடியாக இருந்ததால் வேறு வழியில்லாமல் அவனோடு வெளியே சென்றாள் அகிலா. அவள் மனம் முழுக்க அம்மாவும் அண்ணனும் உடனிருந்தனர். ''மாதாவே, இச்சோதனையிலிருந்து என்னைக் காப்பாற்றும்'' என வேண்டிக்கொண்டாள்.

மனதை திடப்படுத்திக் கொண்டவளாய் தன் காதலை வெளிப்படுத்திய மோகனிடம் ''மோகன், நான் உன்னிடம் நட்பாகத்தான் பழகினேன், என் மனதில் உன்மேல் வேறுமாதிரியான எண்ணம் என்றுமே இருந்ததில்லை'' என்ற அகிலாவின் அப்பட்டமான பொய் அவன் மனதை உடைத்தது.

''அப்படியானால் உண்மையிலேயே நீ என்னை விரும்பவில்லையா?'' என்று கேட்ட அவனிடம் ''சத்தியமாக இல்லவே இல்லை'' என்ற அகிலா அங்கிருந்து புறப்பட்டாள்.

தாமதமாக வீடு திரும்பிய மகளுக்காகக் காத்திருந்த அம்மா ''என்னம்மா இவ்வளவு லேட்?'' என்று கேட்க, ''வெகுநாளாக நீடித்த குழப்பத்துக்கு முடிவு கட்டி விட்டு வர நேரமாகிவிட்டது'' என்றாள்.

அம்மாவுக்கு அவள் சொன்ன தன் பொருள் புரியவில்லை. ஆனால் தன் மகள் தன்னிடம் ஏதோ ஓர் உண்மையைச் சொல்கிறாள், இனி அவள் தன்னிடம் பொய் சொல்லப் போவதில்லை என்பது தெளிவாகப் புரிந்தது.

தன்னுடைய பொய்யால் மோகனிடமிருந்து விலகிய அகிலாவின் மனச்சுமை அகன்றிருந்தது. சரியான பொய்கள் சில சமயங்களில் வாழ்க்கையின் நோக்கங்களை நல்ல வழியில் திருப்பி விட உதவுகின்றன.

- ரோனா ஆல்பர்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் வேதம் வாசிக்காவிட்டாலும் நீங்கள் பாவத்துக்கு ஓர் அடி அருகில் செல்கிறீர்கள் என்பதை மறக்க வேண்டாம்.

தினமும் அரை மணிநேரமாவது வாசித்து, இருதயத்தை ஆராய்ந்து பார்த்து, தேவனை வேத னைப்படுத்தும் வழி உண்டோ என்று அறிந்து அதற்கு விலகுவது மிகவும் அவசியம். அதிலுள்ள சத்தியம் உங்கள் ரத்தத்தோடு ரத்தமாகக் கலக்க வேண்டும்.

சத்தியம் சரியாகத் தெரிந்தால் சாத்தானின் வஞ்சகத்தை எளிதில் உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

ஒரு வங்கியில் கள்ள நோட்டு அதிகமாகப் புழங்கப்படுவதால் அவ்வங்கியில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

அந்தப் பயிற்சி முடிந்ததும் பணம் செலுத்த வருவோர் பணத்தைக் கொடுத்த மறு நிமிடமே அது போலியானது என்று கண்டுபிடிக்கப்பட்ட தைப் பார்த்த மற்ற வாடிக்கையாளர்கள் எப்படி இந்த கள்ள நோட்டை அடையாளம்

போலியின் அடையாளம்

விசுவாசிகள் மன்றாட்டு

★ அன்பின் இறைவா, உமது இறை வார்த்தையையும், அருட்சாதனங்களையும், இறை வெளிப்பாட்டையும் மக்களுக்கு அளித்துவரும் திருச்சபை தொடர்ந்து நிறைவாக உமது பணியை ஆற்றிட வரும் அருளும்படி ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

★ ஆண்டவரே, நாங்கள் செபிக்கும்போது பிறரைப்போல மேடை போட்டு தம்பட்டம் அடிக்காமல், ஆரவாரம் இன்றி அமைதியாக செபிக்கும் பழக்கத்தை உமது வார்த்தையின்படி தொடர்ந்து கடைப்பிடிக்க அருள்புரியும்படி ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

கண்டுபிடித்தனர் என்று ஆச்சரியப்பட்ட னர்.

அப்பொழுது வங்கியில் உள்ள ஊழி யர் இப்படிச் சொன்னார்:

''எங்களுக்கு கள்ள நோட்டு எப்படி யிருக்குமென்று தெரியவே தெரியாது. ஆனால் நல்ல நோட்டில் உள்ள எல்லா நுணுக்கமான தகவல்களும் எங்களுக்குத் தெரிந்திருந்ததால் ஒரு நோட்டைப் பார்த் ததும் அது நல்ல நோட்டு இல்லை என்று எளிதில் எங்களால் அடையாளம் கண்டு பிடிக்க முடிந்தது.

'வேதவசனமாகிய சத்தியத்தை ஆழ மாக மனதில் பதித்துக்கொண்டால் சாத்தா னின் போலியான தந்திரங்களை எளிதில் உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அது ஒரு கிராமத்துப் பள்ளிக்கூடம். சில மாணவர்கள் தூரத்திலிருந்து டவுன் பஸ் மூலமோ, நடந்தோ பள்ளிக்கு வருவர். அன்று, திங்கட்கிழமை; பள்ளிப் பேரவைக் கூட்டம் முடிந்து, ஆசிரியை வருகைப் பதிவு எடுத்தார்.

மாங்காடு என்ற ஊரிலிருந்து 4 குழந்தைகள் வரவில்லை; அவ்வூர் 2 கிலோமீட்டர் தூரமுள்ளது. எனினும் அவர்கள் சரியான நேரத்திற்கு வந்து விடக் கூடியவர்கள். எனவே, சிறிது யோசித்துக்கொண்டே ஆசிரியை பாடத்தை நடத்தத் தொடங்கினார்.

அந்த 4 பிள்ளைகளும் வாசலில் வந்து தயங்கி நின்றனர். ''ஏன் லேட்?'' என்று கொஞ்சம் காட்டமாகக் கேட்டார் ஆசிரியை. எரிச்சலோடு அடிப்பது போல் கையை ஓங்கினார்.

நால்வருள் வளர்த்தியாக இருந்த விமலா தயக்கத்தோடு பதில் சொன்னாள். ''டீச்சர், நாங்க எங்க வீட்டுலயிருந்து வழக்கமான நேரத்துக்குத்தான் கௌம்பினோம். ஆனா ஊரு எல்லைக்கு வந்தபோது, ரோட்டுல ஒரு நாயி அடிபட்டு, செத்துக் கெடந்துச்சு. அந்தப் பக்கமெல்லாம் ஒரே நாத்தம். அந்த வழியா போய்க்கிட்டும் வந்துக்கிட்டும் இருந்த எல்லாரும் மூக்கப் புடுச்சுக்கிட்டு ஓடிக்கிட்டிருந்தாங்க. அப்பத்தான் நீங்க போன வாரம் சுற்றுச்சூழல். சுத்தம் பத்தியெல்லாம் பாடம் நடத்துனது ஞாபகம் வந்தது. எல்லா இடத்தையும் சுத்தமா வச்சிக்கிறணும்னு நீங்க சொன்னீங்கல்ல? அதனால அந்தப் பக்கமாக கொஞ்சம் தூரத்துல நின்னுக்கிட்டிருந்தவங்கள கெஞ்சிக் கூப்புட்டோம். நாங்களும் சேர்ந்து செத்துக் கெடந்த அந்த நாய அப்புறப்படுத்தி, தூரத்துல குழிதோண்டி புதைச்சுட்டு வர்றோம், அதனாலதான் லேட், டீச்சர்!''

தனது மாணவச் செல்வங்கள் இந்தச் சின்ன வயதிலேயே இவ்வளவு கடமையுணர்வோடு இருக்கின்றார்களே என்று ஆசிரியை பெருமிதம் கொண்டார்.

சுற்றுச்சூழலும் மாணவரும்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புனித சிலுவை தினம்!

இரட்சகர் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டு அடைந்த துன்பங் களின் காரணமாக சிலு வையானது, உலக வர லாற்றில் ஒரு முக்கிய மான இடத்தைப் பெற்று விட்டது. கிறிஸ்து இப் பூமியில் அவதரிப்ப தற்கு முன்பாகவும், சிலு வையும் அதன் மூலம் தவறிழைப் போருக்கு வழங்கப்படும் தண் டனைகளும் வழக்கத்தில் இருக் கத்தான் செய்தன. ஆனால் குற்ற வாளிகளுக்கு அவமானச் சின்ன மாகவும், அதன் மூலம் நிறைவேற் றப்பட்ட மரணங்கள் ஈனமானதாகவும் கருதப்பட்டன.

இயேசுவின் காலத்திற்கு முன்பிருந்தே, ஒரு கள்வனுக்கோ அல்லது கொலைகார னுக்கோ கொடுக்கப்பட்ட அதிகபட்ச தண்டனை சிலுவையில், பல கொடுமைகளுக்கு ஊடே வழங்கப்படும் சிலுவை மரணமாகவே இருந்து வந்தது.

உபாகமத்திலும் ''மரத்தில் தூக்கப்பட்டவன் சபிக்கப்பட்டவன்'' எனத்தெரிவிக்கப்பட்டுள் ளது. மகா பாவிக்கு விதிக்கப்பட்ட தண்டனை யாகவும், தேவ கோபத்தினால் உண்டானதாக வும் இது கருத் தில் வைக்கப்பட்டது.

சிலுவைத் தண்டனையை ஏற்கத் தயாராக இருக்கும் குற்றவாளி தானே 'சிலுவை'யை கொலைக்களத்திற்கு சுமந்து செல்ல வேண்டும். அந்தக் காட்சியை காணுகின்ற பொது ஜனங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசிகள் மன்றாட்டு

அன்பின் இறைவா, உலகிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள் என்ற கட்டளையை ஏற்றுக் கொண்டுள்ள திருச்சபை தன்னிடம் கொடுக்கப்பட்டுள்ள திருத்தூதுப் பணியை சிறப்புடன் ஆற்றிட அருள்புரியும்படி ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

களின் கேவலமான ஏச்சுக்களையும், கேலிப்பேச்சுக்களையும் தண்டனை நிறைவேற்ற நின்று கொண்டிருக்கும் போர்ச் சேகவரின் சவுக்கடிகள் மற்றும் சித்திரவதைகளையும் குற்றவாளியாகப் பட்டவன் அனுபவித்தே தீரவேண்டும். அடையப்போகும் சிலுவை மரித்தலைவிட இவ்வகையான சித்திரவதைகளே கொடுமையானதாக இருக்கும்.

ஆனால் சிலுவை மற்றும் சிலுவை மரணத்தைப் பொறுத்தமட்டில், அதுவரை இருந்து வந்த நிலை இயேசுவின் சிலுவை மரணத்திற்குப்பின் அடியோடு மாறியது. சிலுவை ஒரு அன்பின் சின்னமாக, பாவிகளை இரட்சிக்கும் இயேசு கிறிஸ்துவின் நினைவினைக் கூர்கின்ற அவரின் பாடுகளைப் போற்றுகின்ற சின்னமாக உலக வரலாற்றில் மிக முக்கியமானதொரு மற்றும் அழியாத இடத்தைப் பெற்று விட்டது.

பரமபிதாவின் மைந்தனான இயேசுவின் அவதரிப்போடு சிலுவை என்னும் மரணச் சாதனமும் மகிமை பொருந்திய புனிதச் சாதனமாகிவிட்டது என்பதுதான் உண்மை. இயேசு கிறிஸ்து தாம் சிலுவையில் ஒப்புக் கொடுக்கப்படுவதற்கு முன்பாக, அவரே தம் சீடர்களிடத்திலும் மக்களிடத்திலும் அறிவித்த செய்தியினை அறிந்துகொள்வது அவசியமாகிறது.

''சிலுவை என்பது பரமபிதாவின் சித்தத்தை நிறைவேற்ற தனக்குக் கொடுக்கப்பட்ட கருவி'' என்று கூறினார் இயேசு.

சிலுவையை நினைந்து சிலர் பயப்படுவார்கள். ஆனால் ''சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது. ஆனால் இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. (1 கொரி 1:18).

பரிசுத்த அப்போஸ்தலராகிய பவுல் சிலுவையைப் பற்றி ''நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மைப் படாதிருப்பேனாக'' என்று கூறியுள்ளார்.

நாம் இப்போது சிலுவையில் கிறிஸ்துவின் அன்பைக் காண்கின்றோம். நம்முடைய பாவத்தன்மையைப் போக்குவதற்காக, கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த அன்பை சிலுவையின் மூலம் விளங்கச் செய்கிறார். இறைவனின் அன்பை உலகுக்குக் கொண்டு வந்தவரும், அதைத் தம் வாழ்வில் செயல்படுத்தியவரும் இயேசு கிறிஸ்துதான்.

நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படியாக இயேசு தமது சரீரத்தில் தம்மைத் தாமே சிலுவையில் ஒப்புக்கொடுக்க நேர்ந்தது. பாவமானது மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே இடைவெளியை உண்டு பண்ணுகிறது. சிலுவையோ கடவுளுக்கும் மனிதனுக்கும் நட்புறவை ஏற்படுத்துகிறது.

சிலுவையில் மன்னிப்பின் செய்தியும் அறிவிக்கப்படுகிறது. கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே நமக்கு மன்னிப்பை அருளுகின்றார். புனித சிலுவையானது மனித குலத்தை உண்மையான மற்றும் குற்றமற்ற வாழ்விற்கு வழிநடத்திச் செல்கிறது.

கிறிஸ்தவ நாட்காட்டியின்படி புனித சிலுவைக்கான திருவிழாக்கள் வெவ்வேறான விதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை அனைத்தும் இயேசு சுமந்த சிலுவையையே நினைவு படுத்துகின்றன.

சிலுவை கிறிஸ்தவ மோட்சத்திற்கான சாதனமாகவே கொள்ளப்படுகின்றது. புனித சிலுவைக்கான ''சிலுவைத் திருவிழா'' பொதுவாக இரண்டு நாட்கள் உலகெங்கிலும் கொண்டாடப்படுகின்றது.

- பினோமின் மரியசூசை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தம்முடலை சிங்கத்திற்கு இரையாக்கிய இக்னேஷியஸ்

பரி. இக்னேஷியஸ், சுவிசேஷகனான பரி. யோவானின் சீடன். பரி.பேதுருவால் அந்தியோகியாவின் அத்தியட்சகராக அனுப்பப் பட்டவரென்று பாரம்பரிய வரலாறு கூறுகிறது. தம் கடமைகளைச் செவ்வனே இயற்றி அனைவரும் தன்னை நன்கு மதித்துப் பாராட்டும் வண்ணம் நாற்பது வருடம் அங்கு பணிசெய்தார் என்று இவரைக் குறித்து பரி.கிரிசொஸ்தம் எழுதியுள்ளார்.

இவருடைய இளமைப் பருவத்தைப் பற்றிய வரலாறுகள் தெரியவில்லை. டாமிஷியன் கிறிஸ்தவ மக்களை துன்புறுத்திய காலத்தில் அந்தியோகியாவிலுள்ள சபை மக்களின் தந்தைபோல் விளங்கினார். உபவாசத்தோடு ஜெபம் செய்து தம்முடைய அரிய வேத அறிவுரைகளால் சபைகளின் மக்களுக்கு உற்சாகமூட்டி வந்தார். டாமிஷியன் காலத்திற்குப் பின் சக்கரவர்த்தி நிர்வா காலத்தில் அமைதி நிலவியது. ஆனால் இந்த நிலைமை வெகுகாலம் நீடிக்கவில்லை.

நிர்வா அரசாண்ட காலம் பதினைந்தே மாதங்கள்தாம். அவருக்குப் பின் வந்த டிராஜன் கிறிஸ்தவர்களை வெறுத்து அவர்களைத் துன்புறுத்தக் கட்டளையிட்டான். ஏதேனும் சிறிய குற்றச்சாட்டுதல் அவர்கள் மேல் வருமாயின் விசாரணையின்றி அவர்களுக்கு மரண தண்டனையிட வேண்டுமென்று தன் அரசாட்சிக்குட்பட்ட நாடுகளின் அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்பினான். இதன் பயனாக மக்கள் படும் துயரத்தைக் கண்டு நெஞ்சம் துடித்தாலும், நமதாண்டவர் இவ்வுலக மக்களால் பட்ட கஷ்டங்களை நினைத்து ''எல்லாம் எனையாளும் இயேசுவின் செயல்'' என்றே இவர் தியானித்து, கிறிஸ்தவ மக்கள் தூய வாழ்க்கை நடத்தவும், எச்சமயத்திலும் கிறிஸ்துவிற்காக தங்கள் உயிரைக் கொடுக்கவும் சித்தமாயிருக்க வேண்டுமென்று உபதேசம் செய்துவந்தார். இவ்வாறாக சகலவிதமான இடுக்கண்கள் நடுவிலேயே நம் பக்தனின் வாழ்க்கை நடந்து வந்தது.



கி.பி. 106இல் பார்த்தியர் மீது படையெடுத்து சக்கரவர்த்தி டிராஜன் தன் பரிவாரங்களோடு கீழ்நாடுகளை நோக்கிப் புறப்பட்டான். கி.பி. 107 ஜனவரி மாதம் 7ஆம் திகதி அந்தியாகுவில் பிரவேசித்தான். அங்கு சேர்ந்ததும் முதன் முதலாக அங்குள்ள சமயத்தவர், அவர்கள் யாரை வழிபட்டு வருகிறார்கள் என்று விசாரணை செய்து, பரி.இக்னேஷியசை வரவழைத்தான். நம் பக்தன் தன் சபையிலுள்ள எவரும் சக்கரவர்த்தியால் துன்புறக்கூடாது என்று எண்ணி தடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருந்தார்.

டிராஜன் நம் பக்தனைக் காணவும் ''என் கட்டளையை மீறி மக்களை ஒரு சமயத்திற்கு இழுக்கிற நீ யார்?'' என்று கோபமாய்க் கேட்டான். அதற்கு நம் பக்தன் ''நான் கிறிஸ்துவை என் இருதயத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிற அவருடைய அடியான்'' என்றார். டிராஜன் அதற்கு ''எந்த கிறிஸ்துவை குறித்துப் பேசுகிறாய்? போஞ்சு பிலாத்துவினால் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றியா பேசுகிறாய்?'' என்றான்.

அதற்கு பரி.இக்னேஷியஸ் ''ஆம், அவரேதான் என் இரட்சகர். அவர் தன் மரணத்தின் மூல மாய் பாவத்தைச் சிலுவையில் அறைந்து என்னை மீட்டுக் கொண்டார். நான் அவரை என் இருதயத்தில் வைத்திருக்கிறேன்'' என்றார். டிராஜன் உடனே ''சிலுவையில் அறையப்பட்டவரைத் தன்னுள் வைத்து திரிந்துகொண்டிருப்ப

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாகச் சொல்லும் இக்னேஷியஸ் கட்டுண்டு ரோமாபுரிக்குக் கொண்டு போகப்பட வேண்டும். அவ்விடம் மக்கள் பார்த்து மகிழும்படி காட்டு மிருகங்களால் கொல்லப்பட வேண்டும்'' என்று உத்தரவிட்டான்.

பரி.இக்னேஷியஸ், ''என் ஆண்டவரே, நீர் எனக்கு அருளும் இந்த பாக்கியத்திற்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். உமக்காக நான் பரி.பவுலைப் போல இரும்புச் சங்கிலிகளால் கட்டப்படும்படி யான பாக்கியம் எனக்குக் கிட்டியதே'' என்று முக மலர்ந்து கூறினார். இவ்வாறு தனக்கு இட்ட பயங் கரமான தண்டனையை விருப்பமோடு ஏற்றுக் கொண்டு, தான் விட்டுப்போகும் சபைக்காகக் கட வுளிடம் மன்றாடினார். அப்பொழுது கொடூரமான ரோமப் போர்ச் சேவர்கள் அவரை அங்கிருந்து இழுத்துச் சென்றனர்.

அந்தியோகுவிலிருந்து புறப்பட்ட ரோமப் போர்ச் சேவகர்கள் பரி.இக்னேஷியசுடன் துறை முகப் பட்டிணமாகிய செலூசியாவை அடைந்து, சின்ன ஆசியாவின் கரையிலோடி ரோமாபுரி செல் லும் கப்பலில் அவரை ஏற்றினார்கள். ஏன் இவ் விதமாக சுற்றிச் செல்லும் கப்பல் மூலமாய் நம் பக் தன் ரோமாபுரிக்குக் கொண்டுபோகப்பட்டாரென்று தெரியவில்லை. பல துறைமுகப் பட்டிணங்களின் வழியாக அவர் கட்டுண்டு கொண்டுபோகப்பட் டால் அவ்வூர்களிலுள்ள கிறிஸ்தவ மக்கள் அக் காட்சியைக் கண்டு கிறிஸ்தவச் சமயத்தைத் தழுவ அஞ்சுவார்களென்ற எண்ணத்துடன் அவ்வாறு செய்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

ஆனால் அதற்கு மாறாக, அவர் சென்ற கப்பல் சேர்ந்த துறைமுகங்களின் சுற்றுப்புறமுள்ள மக்கள் அவரைப் பார்க்கும் நற்பேற்றை பெரிதாக எண்ணி அவரை அணுகி, தங்களாலியன்ற உதவி செய்ய முன் வந்தனர். கிறிஸ்தவ மக்களின் விசுவாசம் வேரூன்றியது கண்டு இவர் அகமகிழ்ந்தார். கப் பல் பிரயாணமும், அவரைக் காவலில் வைத்துக் கொண்டுபோன பத்து போர்ச் சேவகரின் கொடூர நடத்துதலும் அவருக்கு மிகவும் கஷ்டம் கொடுக் கக் கூடியனவாயிருந்தபோதிலும், தம் இரட்சகருக் காக உயிரைத் தியாகம் செய்யப் போகிறோமென்ற எண்ணம் அவருக்குக் குதூகலம் கொடுத்தது.

கப்பல் சிமிர்னாவை அடைந்ததும் அதிகாரிக ளின் அனுமதியோடு அவர்கள் மேற்பார்வையில், நம் பக்தன் கப்பலைவிட்டு கரை சேர்ந்தார். சுவி சேஷனாகிய யோவானின் கீழ் தம்மோடு உடன் சீடராகயிருந்த பரி.போலிகார்ப்பைச் சந்தித்து அள வளாவ இருவருக்கும் வாய்ப்பு கிடைத்தது. அரு கிலுள்ள சபைகளின் ஊழியரும் அவரைச் சந்தித்து மகிழ்ச்சியடைந்தனர். பரி.இக்னேஷியஸ் சிமிர்னா விலிருந்து நான்கு நிருபங்களை எழுதினார். எபே சுவிலுள்ள சபையாருக்கும், மக்னீஷியாவின் சபை யாருக்கும், டிரல்லியன் சபையாருக்கும், ரோமா புரியிலுள்ள கிறிஸ்தவ அடியாருக்கும் அந்நிருபங் களை எழுதினார்.

காலம் நெருங்கியதால் நம் பக்தன் சிமிர் னாவை விட்டு புறப்பட்டு டுரோவாஸ் துறைமுகம் வந்து சேர்ந்தார்.

இவ்விடத்தில் பரி.இக்னேஷியஸ் பிலதெல் பியா சபைக்கு ஒரு நிருபமும், சிமிர்னா சபைக்கு ஒரு நிருபமும், பரி.போலிகார்ப்புக்கு ஒரு நிருப முமாக மூன்று நிருபங்கள் எழுதினார். இந்நிரு பங்களைப் படிப்பவர்கள் தம் கருத்தை உயர்ந்த நோக் கங்களில் செலுத்தும் வகையில் எழுதப்பட் டுள்ளன. பிறர்பால் அன்பு செலுத்தவும், எவ்வித மான மார்க்கப் பேதங்களையும் அறவே ஒழிக்க வேண்டுமெனவும், கிறிஸ்தவ சபைகளின் நல் வாழ்வுக்காக ஊக்கமாய் ஜெபிக்கவேண்டுமென வும் இவைகளின் சபையோரை வேண்டியுள்ளார்.

ரோமப் போர்ச்சேவகரையும் நம் பக்தனையும் ஏற்றிச் சென்ற கப்பல் துரோவா பட்டிணத்தை விட்டபின் நியோப்பாலிஸ் வழியாக பிலிப்பு பட் டணம் சேர்ந்தது. இவர்கள் அங்கிருந்து மாசி டோனியா, இபைரஸ் நாடுகளைக் கால்நடையாக நடந்து எபிடாம்னம் துறைமுகத்தில் மறுபடியும் கப்பலேறி ரோமாபுரி சேர்ந்தார்கள்.

அந்தியாகுவிலுள்ள அநேக கிறிஸ்தவ அடி யார்கள் குறுக்குவழியாக ரோமாபுரிக்கு வந்து நம் பக் தன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். இவர்களும் ரோமாபுரியிலுள்ள விசுவாசக் கூட்டத் தாரும் நம் பக்தனைக் கண்டு மகிழ்ந்தார்கள். ஆனால் அவர் கொடூர மரணத்தால் உலக வாழ்வை நீத்து தங்களை விட்டுப் போய் விடுவார் என்ற எண்ணத்தால் அவர்கள் மனம் தவித்தது.

கி.பி. 107இல் டிசம்பர் மாதம் இருபதாம் திகதி பரி.இக்னேஷியஸ் ரோமாபுரிக்கு கொண்டுவரப் பட்டார். அன்றுதான் அந்நகரின் பொதுமக்களுக் கென ஏற்படுத்தின காட்சிகளின் இறுதி நாள். சக்க ரவர்த் தியின் உத்தரவுப்படி நம் பக்தன் விளை யாட்டுச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டார். அவ ரைக் கொல்லும்படியாகக் கூண்டில் வைத்திருந்த சிங்கங்களின் உறுமலைக் கேட்டு ''நான் என் ஆண்டவரின் கோதுமை, நான் அவருக்குத் தூய் மையான அப்பமாக்கப்படும்படி இம்மிருகங் களின் பற்களால் நான் நொறுக்கப்படட்டும்'' என்று சொன்னார்.

இரண்டு பெரிய சிங்கங்களை அவர் மீது திறந்து விட்டார்கள். அவை உடனே நம் பக்த னைக் கொன்று சில பெரிய எலும்புகளைத் தவிர அவர் உடலனைத்தையும் விழுங்கிவிட்டன. ''ஆடைகளைக் களைந்து போடுவதுபோல் உயி ரைக் களைந்து போடக்கூடியவர்'' என்று பரி. இக் னேஷிய சின்வாழ்க்கை முடிவைப் பார்க்கும் பொழுது இவ்வார்த்தைகளின் உண்மை நன்கு புலப்படுகிறது.

இவர் யாதொரு பயமுமின்றி உடலைச் சிங்கங் களுக்கு இரையாகக் கொடுத்து இரத்த சாட்சியாக உயிர் நீத்தார்.

- ஏ.ஆர். இராஜரத்தினம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இரண்டாய் பிரிந்த ஆற்று வெள்ளம்

எல்லா மதங்களிலும் தெய்வீக அதிசயங்கள் யுக யுகமாய் நடந்துகொண்டேதான் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலான தெய்வீக சக்திகள், மனித வாழ்வின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட சக்திகள், இந்த உலகில் எப்போதும் இருக்கப் பெற்று துன்பத்திலும் கஷ்டத்திலும் உழலுகின்ற மனிதர்களை ஆற்றுப்படுத்தி வருகின்றன.

இப்படியானதொரு அதிசயமே பிரான்ஸ் நாட்டின் தேவாலயம் ஒன்றில் இடம்பெற்றது.

பிரான்ஸில் ஒரு வளர்ந்து வரும் நகரமாய் இருந்தது 'அவிக்நான்'. இங்கு 'ஹோலி க்ரொஸ்' என்கிற பழைமையான தேவாலயம் இருக்கின்றது. இந்த தெய்வீக அற்புதம் நிகழ்ந்த காலம் அருள் அரசர் எட்டாம் லூயி வாழ்ந்த சமயம்.

அப்போது அவிக்நான் நகரம் கிறிஸ்தவ மையமாகத் திகழ்ந்தது. மேலும் இந்நகரமே தொடர்ச்சியாக ஏழு போப்பாண்டவர்களை புனித வாட்டிகன் நகரத்திற்குத் தந்த பெருமையைப் பெற்றது. 1433ஆம் ஆண்டு நவம்பர் முப்பதாம் திகதி புனித மாக்கப்பட்ட பிரார்த்தனைக்குரிய பொருட்களை கிரே பெனிடென்ட்ஸைச் சேர்ந்த அவிக்நானின் ஹோலி க்ரெஸ் தேவாலயத்தில் காட்சிக்கு வைத் திருந்தனர். இதன் பின்னர் சில நாட்கள் தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக சோர்க் மற்றும் ரோனே ஆறுகளில் நீர்மட்டம் தொடர்ச்சியாக உயர்ந்தது. அதே 1433ஆம் ஆண்டின் நவம்பர் முப்பதாம் நாள் அவிக்நான் நகரமே நீரில் மூழ்கிவிட்டது.

மழை, வெள்ளத்திற்குப் பிறகு, ஹோலி க்ரொஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த ஆசீர்வதிக்கப்பட்ட புனிதப்பொருட்கள் என்னவாயிற்று, தேவாலயமும் வெள்ளத்திற்குத் தப்பியதா என்பனவற்றை அறிய, 'பிரான்ஸ்கன் ஆர்டர்' அமைப்பைச் சார்ந்த இரண்டு கிறிஸ்தவப் பாதிரியார்கள் படகின் மூலமாக அவிக்நானின் ஹோலி க்ரொஸ் தேவாலயத்தை மிகுந்த சிரமங்களுக்கிடையில் அடைந்தனர். ஆனால் பாதிரியார்கள் படகில் சென்று கொண்டிருக்கும்போதே, சோர்க் ஆற்றங் கரையோரமாக அமைந்திருக்கும் ஹோலி க்ரொஸ் தேவாலயம் இந்தப் பெருமழையிலும், வெள்ளத்திலும் மூழ்கி சிதைவுண்டிருக்கும் என உறுதியாக நம்பினார்கள். பின்னர் வெகு சிரமப்பட்டு ஆற்றைக் கடந்து அவிக்நானை அடைந்தபோது அவர்களுக்கு ஒரு அதிசயம் காத்துக்கொண்டிருந்தது.

தேவாலயத்தைச் சுற்றிலும் வெள்ள நீர் நான்கடி உயரத்திற்கு சூழ்ந்து நின்றபோதிலும், தேவாலய நுழைவு வாயிலிருந்து உள்ளே பலிபீடம் வரையிலும் நீரின்றி அற்புதமான ஒரு பாதை தெய்வீக அதிசயமாய் போற்றும்படி நீண்டிருந்தது, பாதையும் உட்புறமும் கொஞ்சமும் நனையவில்லை. ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்த ஆசீர்வதிக்கப்பட்ட புனிதப்பொருட்கள் யாவும் சிறிதும் நனையாமலும், ஒரு துளியும் சேதமடையாமலும் அப்படியே இருந்தன. இந்த அதிசய நிகழ்வு, மோசஸ் காலத்தில் செங்கடல் இரண்டாய் பிளந்ததை அனைவருக்கும் நினைவுபடுத்தியது.

தேவாலயத்தைக் காண வந்த பாதிரியார்களும், அங்கிருந்த மற்றவர்களும் இந்த அருமையான தெய்வீகக் காட்சியைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கினர். இத்தெய்வீக அதிசயத்தை ஆயிரக்கணக்கான மக்கள் தம் கண்ணால் கண்டு களித்தனர். ஒவ்வொரு ஆண்டும் புனித ஆண்டரியூ திருநாளன்று இந்தத் தெய்வீக அதிசயத்தின் ஆண்டு விழாவையும் சேர்த்துக் கொண்டாட கிரேஸனிட்டென்ஸ் குழுவினர் முடிவு செய்தனர். இன்றும் நவம்பர் முப்பதாம் நாள் சகோதரர்கள் ஒன்றிணைந்து இவ்வதி சயத்தின் நினைவு நாளைக் கொண்டாடுகின்றார் கள்.

அச்சமயத்தில் செங்கடல் இரண்டாய் பிரிந்த போது மோசஸ் பாடிய போற்றுதல் பாடல்களையே இச்சகோதரர்களும் ஆண்டவரை நினைந்து பக்தியுடன் பாடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

- அவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கையே முதல்படி



சிறுவர் பகுதி

வகுப்பு ஆரம்பமானது. மாணவர்கள் தங்கள் பாடங்களில் மூழ்கியிருந்தார்கள்; ஆண்டு இறுதித் தேர்வுக்கு மும்முரமாகத் தயாரித்துக்கொண்டிருந்தனர். ஏறக்குறைய எல்லாப் பாடங்களும் நடத்தி முடித்தாயிற்று. அதனால் தமிழாசிரியை உரிமையோடு தன்னுடைய வகுப்பு மாணாக்கரின் வாழ்க்கைக்குத் தேவையான, நல்ல சிந்தனைகளை கரிசனையோடு பகிர்ந்துகொள்ளத் தொடங்கினார். பாடங்கள், பரீட்சை... இவற்றுக்கும் அப்பால் வாழ்க்கையில் சாதிக்க வேண்டுமானால் பல நல்ல விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டும் என்பதை நினைவூட்டினார்கள்.

''சிந்தனையும் கனவும்தான் உலகை ஆளும்'' என்று பேரரசன் நெப்போலியனின் கூற்றையும் மேற்கோள் காட்டினார். ஒரு போரில் நெப்போலியனின் நெஞ்சில் ஓரிரு குண்டுகள் பாய்ந்தன; மருத்துவர்கள் அவனது இதயத்தைக் கீறி, அக்குண்டுகளை அப்புறப்படுத்துவதில் முனைந்திருந்தனர். அவ்வேளையில் நெப்போலியன் சொன்னார்; ''இன்னும் ஆழமாகப் போங்கள் (அவனது இதயத்துக்குள்). அங்கே நான் கனவு காணும் பிரான்ஸ் பேரரசைக் காண்பீர்கள்!''

ஆசிரியை தொடர்ந்து சொன்னார்கள். ''அவனது இந்தக் கனவுதான் ஓர் உந்துதலாகி செயல் வடிவம் பெற்றது. தனது விடாமுயற்சியாலும் விடாப்பிடியான வைராக்கியத்தாலும் தான் தனது எதிரிகளை வெற்றிகொண்டான்.''

தனது இந்த உந்துரை மாணவர்களைச் சுண்டியிழுப்பதைப் புரிந்துகொண்டார் ஆசிரியை. இத்தகைய எழுச்சியுரையை இன்னும் அதிகமாக மாணவர்கள் எதிர்பார்த்தனர். ''நமது சுயகட்டளையால் நாம் மேலும் மேலும் வளர்வோம். நாம் விரும்புவதைச் சாதிப்போம் என்றார் ஒரு அறிஞர்.

''ஆம், ஒரு சிந்தனை நம்பிக்கையாகிறது; நம்பிக்கை பழக்கமாகிறது; பழக்கம் பண்பாகிறது; பண்பு செயலாக வடிவம் எடுக்கிறது''. இவ்வாறு அந்த வகுப்பு முழுவதும் தன்னம்பிக்கையை வளர்த்து, சாதிக்கத் தூண்டும் சத்தான விவரங்களை ஆசிரியை முத்தாக எடுத்துரைத்தார். மாணவர்கள் கருத்துக் காந்தத்தால் ஈர்க்கப்பட்டனர். தனது மாணவச் செல்வங்களில் இத்தகைய மாற்றத்தைக் கண்ட ஆசிரியைக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.

வகுப்பு முடிவுக்கான மணி அடித்த பிறகும் அலெக்ஸ் அசைவற்று அமர்ந்திருந்தான். இன்னும் அதிகமாக எப்படிச் சாதிக்கலாம் என்று தனது மனதை ஊக்கப்படுத்திக்கொண்டிருந்தான். தனது முயற்சி பலித்ததைக் கண்டு மகிழ்ந்த ஆசிரியை, மனதிற்குள் அவனை வாழ்த்தியபடி வெளியேறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாமரை இலைத் தண்ணீராய் அல்போன்சா



பிரான்ஸிஸ்கன் கிளாரம்மாள் கன்னியர்கள் மிக ஏழ்மையான வாழ்க்கை வாழ்கிறவர்கள். அவர்களுடைய எளிய கிளாரா மடத்திற்கு அன்னை உருசுலா அன்னக்குட்டியை அழைத்தார். அன்னக்குட்டியின் இதயம் ஆனந்தத்தால் நிரம்பியது. அந்தக் கன்னியர்களுடன், தன் வாழ்க்கையைக் கடவுளுக்கு அர்ப்பணித்து வாழ்வது மட்டுமே அவளுடைய இலட்சியமாக இருந்தது.

புது நன்மை பெறும்போது தனக்குள் குடி கொண்ட இயேசுவின் அன்பை, விலைமதிக்கத் தக்க பொருளாகத் தன் இதயத்தில் பாதுகாத்திருந்தாள். அந்த அன்பு நாதனுக்காகப் பிறரை அவள் கபடமற்று நேசித்தாள். தன்னைத்தானே இயேசுவிற்கு அர்ப்பணம் செய்தாள். அந்த விண்ணக மணவா எனுக்காக மட்டும் வாழ சிறுவயதிலேயே அவள் தீர்மானம் செய்திருந்தாள்.

மகளுடைய குறிக்கோளைப் புரிந்த பெரியம்மா மீண்டும் திருமணத்திற்கு வற்புறுத்தவில்லை. தன்னுடைய விருப்பங்களும், ஆசைகளும் சிதறடிக்கப்பட்டபோது, அவருடைய மனம் நொந்திருக்க வேண்டும். அன்னக்குட்டியை ஒரு அழகான மணப்பெண்ணாக கற்பனையில் பார்த்து ஆனந்தம் அடைந்த அவருடைய மனம், தன் அழகு மகள், கன்னியர்களின் எளிய உடையில் எவ்வாறு இருப்பாள் என நினைத்து அழுதிருக்க வேண்டும். எனினும் ஒரு பெருமூச்சுடன் அன்னக்குட்டியின் விருப் பத்திற்கு இணங்கினார்.

1927 பெந்தக்கோஸ்தே திருவிழா. அன்னக் குட்டியின் வாழ்க்கையில் மிக முக்கியமான நாள். தன்னை மிகவும் அன்பு செய்த பெரியம்மா, பெரியப்பா, அண்ணன்மார்களுக்கு வணக்கம் சொல்லி அன்னக்குட்டி பரணங்ஙானத்திற்குப் புறப்பட் டாள். அவளுடைய தந்தையும் உடன் சென்றார்.

''அன்னக்குட்டி இனிமேல் எங்கள் மகள், நீங்கள் அவளை நினைத்துக் கவலைப்பட வேண்டாம். நாங்கள் அவளைக் கவனித்துக்கொள்வோம்'' என அன்னை உருசுலா அப்பாவிற்கு வாக்குக் கொடுத்தார். அவர் பேசாமல் வீடு திரும்பினார்.

பெரியம்மாவின் வீட்டில் இருக்கும்போது ஏழாம் வகுப்பில் அவளுடைய படிப்பு நின்று போனது. கால்கள் நெருப்பில் வெந்ததால் பல நாட்கள் பள்ளிக்குப் போக இயலவில்லை. திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்காமையால் கோபம் அடைந்த பெரியம்மா பள்ளிக்கட்டணம் கட்டவில்லை. அதனால் படிப்பை நிறுத்தினார் என்றும் கேள்விப்பட்டதுண்டு. பரணங்ஙானம் கிளாரம்மாள் மடத்தின் புனித ஜோஸப் விடுதிப் பள்ளியில் 1927 மே 21ஆம் திகதி, ஏழாம் வகுப்பில் சேர்க்கப்பட்டாள். மாணவியாக இருக்கும் பொழுது அவள் சாதாரணப் பெண்ணாக இருந்தாள். நன்றாகப் படிப்பாள், அழகாக எழுதுவாள், ஓரளவுக்கு நன்றாகப் பேசுவாள், பாடுவாள்.

அவள் ஒரு முன்மாதிரியான மாணவியாக இருந்தாள். அசாதரண நினைவாற்றல் அவளுக்கு இருந்தது. தன்னுடைய கபடமற்ற அன்பார்ந்த நடத்தையால், பிற மாணவ-ஆசிரியர்களின் இதயத்தைக் கவர்ந்தாள். அந்த வருடம் அவள் இலக்கிய மன்றத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டாள்.

1928 ஆகஸ்ட் 2ஆம் திகதி, அந்த நாள் அன்னக் குட்டி ஆவலாக எதிர்பார்த்திருந்த நாள். புனித அல்போன்ஸ் லிகோரியின் திருவிழா. மற்ற மூன்று கன்னியர்களுடன் துறவு வாழ்க்கையின் முதல் படியான முக்காடு, மடத்தின் சிற்றாலயத்தில் நடந்த சடங்கில் கொடுக்கப்பட்டது. புனித அல்போன்ஸ் லிகோரியின் நினைவாக 'அல்போன்சா' என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மறக்க முடியாத அந்த நாளில், அவளுடைய இதயம் ஆனந்தத்தால் நிறைந்தது.

அன்பிற்காக ஏங்கிக்கொண்டிருந்த அவளுடைய ஆத்மா, புனிதமான அன்பை அன்று அனுபவித்தது. உலகத்தின் மாசுபடாமல் பாதுகாத்த தன் வாழ்க்கையை, இயேசுவிற்கு அர்ப்பணித்தாள். தண்ணீரில் வாழும் தாமரை, தண்ணீர் படாமல் தன் இலைகளைப் பாதுகாப்பது போல், பாவம் நிறைந்த இவ்வுலகில் கபடமற்றவளாக வாழ முயன்றாள். சிறுவயதிலிருந்தே யாருடனும் முறையிடாமல் வாழ்ந்தாள்.

புது நன்மையின் நாள் முதல், இதயத்தை இயேசுவிற்கே அர்ப்பணித்திருந்தாள். இயேசுவிற்காகப் பிறரை அன்பு செய்தாள். அந்த அன்பு ஆதாயத்தை எதிர்பார்க்கவில்லை. மடத்தில் புனித வாழ்வை ஆசைப்பட்டு வாழ்ந்த அவளுடைய மாசற்ற இதயம், ஏதோ வானக ஆனந்தத்தால் நிறைந்தது. அக்கினிக் குளியலால் சுத்தமாக்கப்பட்ட அவளுடைய வாழ்க்கையை, இயேசுவிற்கு உகந்ததாகப் பாதுகாத்தாள். துன்பங்கள் வழியாக, அர்ப்பணத்தின் நிறைவை நோக்கிப் பயணித்தாள்.

திருமணம் செய்ய அவளை வற்புறுத்திய பெரியம்மா அதற்குப்பின் சொன்னது, ''ஒருபோதும் அவள் என் கட்டளைகளை மீறியதில்லை, தண்டனை பெற்றதுமில்லை'' என்பதே.

''அவள் எங்கள் வீட்டிற்கு அலங்காரமும், முன் மாதிரியுமாக இருந்தாள்'' என பெரியப்பா சாட்சி யம் கூறினார்.

''அன்னக்குட்டி எப்போதும் சந்தோஷமாக இருந்தாள். அவள் அழுததைப் பார்த்ததில்லை'' - இது மரியக்குட்டியின் அண்ணன்மார்களின் சாட்சியம்.

சக மாணவிகள் ''அவள் சம்மனசு மாதிரி இருந்தாள்'' என்று கூறினர். ஆசிரியர்கள் அவளுடைய களங்கமின்மையையும், தொண்டு மனப்பான்மையையும், மகிழ்ச்சியான நடத்தையையும் எடுத்துக் கூறினார்கள்.

சிறு வயதிலிருந்தே அவர் கடைப்பிடித்த புண்ணியங்கள் பிற்காலத்தில் மடத்தில் வாழ்ந்த போது வளர்ச்சி அடைந்தன. முக்காடு போட்ட கன்னிகையான அன்னக்குட்டியை உயர் அதிகாரிகள் கூர்ந்து கவனித்தார்கள். அவர்களால் குறை கண்டு பிடிக்க முடியவில்லை. அக்காலத்தில் அவருடன் வாழ்ந்த அருட்சகோதரிகள் இவரைப் பற்றிய பல இனிய நினைவுகள் ஞாபகத்தில் வைத்திருந்தார்கள்.

ஒருமுறை அல்போன்சாவிற்கு வயிற்றில் கோளாறு ஏற்பட்டது. தவறாமல் மருந்து உட்கொண்டு பத்தியம் காக்க வேண்டும். அரிசி ஆகாரங்களைத் தவிர்க்க வேண்டும். பசியால் தளர்ந்த நம் சகோதரி ''எனக்குக் கஞ்சியைக் கொடுங்கள்'' என்று குழந்தைபோல் அழுதார். சொந்த வீட்டைப் போல் மடத்தையும் நேசித்தாள். பிற சகோதரிகள் அவளுக்கு அம்மாவும் சகோதரிகளுமாக இருந்தார் கள்.

அப்போது விடுதியின் மேலாளராக இருந்த அருட்சகோதரி கபிரியேல், அல்போன்சம்மாவின் நெருங்கிய சினேகிதி. பின்பு அவர்கள் இருவரும் ஆத்ம நண்பர்களானார்கள். எவரிடமும் எதையும் மறைக்காமலிருந்த அல்போன்சம்மாவின் நற்குணங்களை, கபிரியேலம்மா எப்போதும் ஞாபகத்தில் வைத்திருந்தார்கள்.

ஒரு நாள் பரணங்ஙானம் கோவிலின் உதவிப் பங்குத்தந்தை அல்போன்சம்மாவிடம் ஒரு பாட்டுப் பாடச் சொன்னார். அவர் ''வாரும் பரிசுத்தாவியே உம் அடிமையாமென்னில்'' என்னும் பாட்டைப் பாடினார். குரல் அவ்வளவு இனிமையாக இல்லா மலிருந்தும் அவருடைய கீழ்ப்படிதலை அருட் தந்தை பாராட்டினார்.

- டோரா. ஸி.பொரியத்து

நற்செய்தி - பொருள் விளக்கம்

எபிரேய மொழியில் பஸார் என்றும் கிரேக்கத்தில் எயுஅங்கேலியோன் என்றும் வழங்கிய சொற்கள்தான் தமிழில் நற்செய்தி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இன்றைய தமிழ்வழக்கில் நம்மை மகிழ்விக்கும் செய்தியெல்லாம் நற்செய்தியே. ஆனால் விவிலிய வழக்கில் சில குறிப்பிட்ட செய்திகள்தான் நற்செய்தி எனும் தகுதியைப் பெற்றன.

மெசியா நம்பிக்கையைச் சார்ந்த செய்தியை நற் செய்தி என்று இறைவாக்கினர் எசாயா குறிப்பிடுகிறார் (எசா 40:9; 52:7; 61:1). அரச குடும்பத்தில் வாரிசு பிறந்தது, அரசன் அரியணை ஏறியது போன்ற செய்திகளும் உரோமை அரசு காலத்தில் நற்செய்தியாக முழக்கமிடப்பட்டன.

தம் பிறப்பினால் உலகில் ஒரு மகிழ்ச்சியான சகாப்தத்தைத் தொடங்கிய இயேசு, தம் பாடுகள் - மரணம் - உயிர்ப்பினால் தீமையை வென்ற இயேசு, பிறகு உயிர்த்து வெற்றி வாகை சூடிய இயேசு - இவரே நற்செய்தி ஆவார் என்னும் கருத்தில் புனித பவுல்தான் இச்சொல்லை முதலில் தம் திருமுகங்களில் கையாளுகிறார். பிறகு இயேசு கிறிஸ்துவின் மீட்புப் பணியைத் தொகுத்து எழுதிய முதல் நற்செய்தியாளர் மாற்கு, தமது தொகுப்பிற்கு நற்செய்தி என்று தலைப்புத் தருகிறார் (மாற்1 : 1). ஆக, நற்செய்தி என்றால் இயேசுகிறிஸ்து; நற்செய்தி என்றால் அவர் அளித்த மீட்பு, அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
Toolkit: Mr. Lalavakanthi Jeevan

டைட்டானிக் கப்பல் தெரியுமா உங்களுக்கு? தெரியுமாவா? டைட்டானிக் சூப்பர்ஹிட் மூவியாச்சே தெரியாமலா? வருடங்கள் பல உருண்டோடினாலும் ஜெக் டவ்சன், ரோஸ் காதல் ஜோடியை மறக்க முடியுமா? ஆனால் அந்தக் காதல் கதை உண்மைக் கதையல்ல. டைரக்டர் ஜேம்ஸ் கேமரூனின் அபார மூளையில் உருவான கற்பனைக் கதை. ஆனால் உண்மையான டைட்டானிக் கப்பல் 1912ஆம் ஆண்டில் பிரம்மாண்டமாய் கிளம்பியபோது கிளார்க் குடும்பத்தில் நடந்த உண்மை சம்பவத்தை யாராலுமே மறக்க முடியாது. அன்றைய நாளிதழ்கள் இந்த மறக்க முடியாத சம்பவத்தைத் தவறாமல் பதிவுசெய்திருந்தது.

தவறிய பயணம்...

கிளார்க் தம்பதியினருக்கு ஒன்பது பிள்ளைகள். இங்கிலாந்தில் வசித்த இந்த குடும்பத்தினருக்கு தங்கள் நாட்டில் இருந்த மற்றவர்களைப் போல அமெரிக்கா நாட்டிற்குக் குடிபெயர்ந்து சென்று அங்கேயே நிரந்தரமாகத் தங்க வேண்டும் என்பது அவர்களது நீண்டகால ஆசை. குடும்பமாக தினந்தோறும் Family Altar என்ற தங்களது குடும்ப ஜெப வேளையில் ஆண்டவரிடம் இந்த விண்ணப்பத்தை தவறாது ஒவ்வொரு நாளும் சமர்ப்பித்தனர். அதற்கென்றே பணமும் சில வருடங்களாக சேர்க்க ஆரம்பித்தனர். 11 பேருக்கு டிக்கட் எடுக்க வேண்டுமல்லவா? நடுத்தர குடும்பம் என்ன செய்யும்?

இந்த நேரத்தில்தான் அந்த விளம்பரம் அவர்கள் கண்ணில்பட்டது. 'Titanic மூழ்கவே மூழ்காத கப்பல்! The Largest Sea Lines! உலகின் முதல் பிரம்மாண்ட கப்பல்! - சகல ஆடம்பரங்களுடன் - நீச்சல் குளம் உட்பட''.

புது கப்பல், பிரமாண்டமானதாய், கேளிக்கைகள் நிறைந்ததாய், ஆடல், பாடல், ஆர்ப்பாட்டங்கள் எனப் பல சலுகைகள். கோடீஸ்வரன் செல்ல முதல் வகுப்பு, நடுத்தரத்திற்கு 2ம் வகுப்பு, ஏழைகள் செல்ல 3ஆம் வகுப்பு. யாருக்குதான் கசக்கும்? விரைந்து சென்று முன்பதிவு செய்தார் கிளார்க். டிக்கட்டுகளையும் வாங்கிவிட்டனர். எல்லோருக்கும் ஒரே குஷி. அந்த நாள் எப்போது வரும்? அவர்களுக்கு நாட்கள் மெல்லதான் நகர்ந்தன.

இதற்கிடையே தங்களது உற்றார், உறவினர், நண்பர்களின் பிரிவு உபசார விருந்துகள், மூட்டை முடிச்சுகள் பேக்கிங் என்று எல்லாமே. பிரிவோம் என்ற சோகமும், கப்பல் பயணம் என்ற சந்தோஷமும் கலவையாய் உள்ளத்தை நிறைக்க... இந்த சந்தோஷங்களுக்கு ஒரு சின்ன இடைவெளி? என்ன அது? ஆமாம், ஜூனியர் கிளார்க்கை நாய் கடித்து விட்டது. இந்த நாய்க் கடி இடியாய் இவர்கள் தலையில் இறங்கியது.

ஒருவேளை வெறிநாய்க் கடியாக இருந்தால்? டாக்டர் அமைதியாக சொன்னார்: ''ஜூனியர் கிளார்க் வெளியே எங்கும் செல்லக்கூடாது. யாரும் அவரைப் பார்க்க உள்ளே வரவும் கூடாது. அவரைக் கடித்தது வெறிநாயாக இருந்தால்? Rabies உடனே பரவும்... எனவே ஒரு வாரம் தீவிர அவதானிப்பில் இருக்கவேண்டும்''

அப்படியென்றால்?... ''அப்படியென்றால் உங்கள் கப்பல் பயணத்தை ரத்து செய்ய வேண்டும்'' ''ஐயகோ என் கடவுளே...!'' ஒட்டுமொத்தமாக ஒலித்தன ஒன்பது குரல்களும்.

அம்மாவைத் தவிர, புயலுக்குப் பின் அமைதி மாதிரி கத்தி ஓய்ந்தபின் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் சுருண்டனர். ஜூனியர் கிளார்க்குக்கு ஏற்பட்ட விபத்தால் முழு குடும்பத்தின் பயணமும் நிறுத்தப்பட்டது. ஜூனியர் கிளார்க் மட்டும் ஏப்ரல் 10, 1912 அன்று கனத்த மனதைச் சுமந்து கொண்டு துறைமுகம் சென்று பிரம்மாண்டமான டைட்டானிக் கப்பல், பயணிகளின் ஆரவாரத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தோடு நகர்ந்து கொண்டிருந்ததை பார்த்து மற்ற பயணிகளுக்கு கையசைத்து வாழ்த்துச் சொல்லி விட்டு வீடு திரும்பினார்.

மனதில் 'ஐய்யோ, இந்தக் கப்பலில் நாங்கள் குடும்பமாய்ச் சென்றிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஆனால்... அதிக சோகத்தோடும், கனத்த மனதோடும், இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாத அதிர்ச்சியான மனநிலையோடும், அவர் காணப்பட்டார். கலைந்து போன கனவுகள், நிறைவேறாத ஆசைகள், சிதைந்து போன எண்ணங்கள், எதிர்பார்க்காத நிஜங்கள் என அவரது இதயம் மிகவும் கனத் தது.

ஏன் ஆண்டவரே இப்படிச் செய்தீர்? உமது சித்தத்திற்கு ஒப் புக்கொடுத்துதானே ஜெபித் தோம்? ஒவ்வொரு கட்டத்திலும் உமது வழிநடத்துதல்கள் இருந் ததே! கஷ்டப்பட்டு பணம் சேர்த் தது. டைட்டானிக்கில் பல போட் டியாளர்களுக்கிடையே டிக்கட் கிடைத்தது. எல்லாவற்றையும் மிக நேர்த்தியாய் நடத்தினீரே! கடைசி யில் ஏன் இப்படி நடந்தது?

கேள்விக் கோர்வைகளுடன் கண்ணீர் கோர் வைகளும் சேர்ந்துகொள்ள மீளாத் துயரத்தில் ஜூனியர் கிளார்க் காணப்பட்டார். ஏன் ஆண்ட வரே ஏன்? லாசர் மரித்து நான்கு நாள் தாமதித்து வந்த இயே சுவைப் போல், ஏன் என்ற கேள்விக்கு 4 நாட் களுக்குப் பிறகு விடை வானொலியின் வாயிலாக வந்தது.

ஆடம்பரமாய் அசைந்து சென்ற டைட்டானிக் கப்பல் ஏப்ரல் 15 அன்று அதிகாலை யில் அட்லாண்டிக் கடலில் சென்றுகொண்டிருந்தபோது பனி மலையில் மோதியது. கப்பலின் ஒரு பகுதியில் ஒரு பெரிய ஓட்டை ஏற்பட்டு தண் ணீர் உள்ளே மளமளவென்று செல்ல இரண்டு மணிநேரத்தில் கப்பல் இரண்டாக உடைந்து மூழ்க ஆரம்பித்தது.

கடவுளால் கூட மூழ்கடிக்க முடியாத கப்பல் என்று முழக் கமிட்டு வெறும் 20 உயிர் காக் கும் படகுகளை மட்டுமே சுமந்து சென்ற பிரம்மாண்டக் கப்பல் இப்பொழுது மூழ்க ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

2227 பேர் பயணித்த கப்பல் இரண்டாக உடைந்து மூழ்கியதில் 705 பேரைத் தவிர அனைவரும் மரித்துப் போயினர்.

இந்தத் துயர சம்பவம் நடந்து நூறு ஆண்டு களைக் கடந்தாலும் உலக மக்கள் மனதில் நீங்காத ஒரு வடு. தப்பித்தோரில் சிலர் மன அழுத்தத்திற்கு ஆளாகி காலத்தால் ஆற்றப்படாத காயங்களுடன்



மரித்துள்ளனர். ஆனால் கிளார்க் குடும்பமோ முன்பு புரியாத, ஆனால் இப்பொழுது புரிந்து கொண்ட தேவனின் தெளிவான சித்தத்தை எண்ணி அவரை துதித்தது.

''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல, பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எவ்வளவு உயர்ந்து இருக் கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுக ளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந் திருக்கிறது (ஏசாயா 55:8).

நம் கிட்டப் பார்வையில் நாம் எதிர்பார்க்கும் விதமாக காரியங்கள் நடக்காதபோது தொய்ந்து போய் ஆண்டவரை மறந்து போய் சுலபமாக மறு தலித்து விடுகிறோம். நாம் கேட்க மறுக்கின்ற காரியங்க ளிலும், மேலான ஆசீர்வாதங் களை நாம் அனுபவிக்கும் போதுதான், நம் சித்தத்தைவிட ஆண்டவரின் சித்தம் எத்தனை மகிமையானது என்பதை உணர் வோம். கடவுளின் சித்தத்தை எதிர்வுகூர்வார் யாருமில்லை.

- பிரிசில்லா பால்

''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல, பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எவ்வளவு உயர்ந்து இருக் கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுக ளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந் திருக்கிறது (ஏசாயா 55:8).

Digitized by Siddhanta eGangotri Foundation
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்தின் மிகப்பெரிய வெஸ்ட்மின்ஸ்டர் கத்தீட்ரல்

இங்கிலாந்து தேசத்தில் வெஸ்ட்மின்ஸ்டர் நகரத்தில் விக்டோரியா என்னுமிடத்தில் அமையப் பெற்றுள்ளது மிகப்பெரியதும் பெருமை வாய்ந்ததுமான வெஸ்ட்மின்ஸ்டர் கத்தீட்ரல். இந்த கத்தீட்ரல் கத்தோலிக்க சமூகத்தினருக்கு இங்கிலாந்திலும் வேல்ஸிலும் தாய்த் தேவாலயமாக விளங்குகின்றது. வெஸ்ட்மின்ஸ்டர் கத்தீட்ரல். ''இயேசு கிறிஸ்துவின் உன்னத இரத்தத்திற்கு'' அர்ப்பணிக்கப்பட்டுள்ளது இது.

தற்போது கத்தீட்ரல் அமைந்துள்ள இடமானது ஆரம்பத்தில் 'பெனிடிக்டைன் மொன்க்ஸ்' எனப் படுகின்ற துறவியர்களுக்குச் சொந்தமாயிருந்து, அவ்விடத்தில் 'வெஸ்ட்மின்ஸ்டர் அபே' என்கின்ற துறவியர் மடத்தை நிறுவியருந்தனர். பின்னர் இந்த இடம் வெஸ்ட்மின்ஸ்டரின் ஆர்ச் டயோசீசால் 1885ஆம் ஆண்டில் வாங்கப்பட்டது.

வெஸ்ட்மின்ஸ்டர் ஆர்ச் பிஷப்பின் இருப்பிட மும் வெஸ்ட்மின்ஸ்டரின் கத்தீட்ரலில்தான் உள் ளது. தற்சமயம் ஆர்ச் பிஷப் பதவியில் அருட் தந்தை டாக்டர் வின்சென்ட் நிக்கோல்ஸ் இருக் கின்றார்.

வழிவழியாய் வருகின்ற மரபின்படி புதிதாகப் பதவியேற்கும் ஆர்ச் பிஷப் ஒவ்வொருவரும் தொடர்ந்து 'கார்டினலாகவும்' அமையப்பெறுகின் றார்கள். வெஸ்ட்மின்ஸ்டரின் முதல் கார்டினலா யிருந்த கார்டினல் வைஸ்மேன் 1850ஆம் ஆண்டு முதல் 1865ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வெஸ்ட் மின்ஸ்டரின் முதல் ஆர்ச் பிஷப்பாகவும், பணியில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விளங்கினார். கத்தீட்ரல் எழுப்புவதற்குத் தேவையான பெருந்தொகை, கார்டினல் வைஸ் மேனின் நினைவார்த்தமாகவே திரட்டப்பட்டது.

கார்டினல் வைஸ்மேனுக்கு அடுத்து வந்த கார் டினல் மேனிங் என்பவரால் கத்தீட்ரலுக்குத் தேவையான நிலம் 1884ஆம் ஆண்டில் ஆர்ஜிதம் செய்யப் பட்டது. மூன்றாம் ஆர்ச் பிஷப் - கார் டினல் வாகன் காலத்தில் 1895ஆம் ஆண்டில் கத் தீட்ரலின் கட்டிடம் கட்டத் தொடங்கப்பட்டது. கட்டிடக்கலை நிபுணர் ஜோன் பிரான்ஸிஸ் பென்ட்லி தலைமையில் 'பைஜன்டைன்' கட்டிடக் கலை நிபுணத்துவத்தில் கத்தீட்ரல் மிகவும் அழகாகக் கட்டி முடிக்கப்பட்டது.

கட்டிடக்கலை நிபுணர் பென்ட்லியின் மறை விற்குப் பின் சிறிது காலம் கழிந்து, 1903ஆம் ஆண்டில் கத்தீட்ரல் முழுவதுமாகக் கட்டிமுடிக் கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தது. ஆங்கிலேய சீர மைப்பிற்குப் பின்பு கத்தோலிக்க வழிபாட்டிற்காக இங்கிலாந்தில் கட்டப்பட்ட முதல் வழிபாட்டுத் தலமாக வெஸ்ட்மின்ஸ்டர் கத்தீட்ரல் கருதப்படு கின்றது.

அப்போதிருந்த கத்தோலிக்க தேவாலயச் சட் டங்களின்படி முழுவதுமாகக் குறையின்றிக் கட்டி முடிக்கப்படாத தேவாலயத்தை கிறிஸ்தவ சமயச் சடங்குகளின்படி புனிதப்படுத்துவதில்லை. எனவே புனிதப்படுத்தும் நிகழ்வானது ஜூன் 28ஆம் திகதி 1910ஆம் ஆண்டுவரை செய்யப்பட முடியவில்லை.

1977ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் அரசி இக்கத் தீட்ரலுக்கு விஜயம் செய்துள்ளார். 1982-ம் ஆண்டிலும் 2010ஆம் ஆண்டிலும் வத்திக்கானின் போப்பாண் டவர்கள் இக்கத்தீட்ரலுக்கு வருகை தந்து விஷேட பிரார்த்தனைக் கூட்டங்களை நடத் தியுள்ளனர்.

முழுவதுமாக 'நியோ - பைஜன்டைன்' பாணி யில் அமைந்துள்ள இந்த கத்தீட்ரல், ஐம்பத்து நான் காயிரம் சதுர அடி வீஸ்தீரணத்தில் மிகப்பிரம் மாண்டமாக எழுப்பப்பட்டுள்ளது. ஆலயத்தின் மையக் கூடம் அறுபது அடி நீளத்தில் எவ்வித இடையூறுமின்றி நீண்டு பரந்துள்ளது. ஆலயத்தின் சுற்றுச் சுவர்களும் மிக அற்புதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் தரைமட்டத்தி லிருந்து தொண்ணூறு அடி உயரமுள்ள வளைவு கள் மீது குவிமாடங்கள் நிலைநிறுத்தப்பட்டுள் ளன.

உட்புறத்திலான மொத்த உயரம் நூற்றுப்பதி னோரடி ஆகும். கத்தீட்ரலின் கிழக்கு மூலையின் அமைப்பானது, வட இத்தாலியின் 'ரொமா னெஸ்க்' அல்லது 'லொம்பார்டிக்' பாணியை நினைவுறுத்துகின்றன.

ஆலயத்தின் திருப்பலிபீடமும் மிக நேர்த்தி யாக உருவாக்கப்பட்டுள்ளது. கட்டிடக் கட்டுமா னத்தில் மிக அதிக அளவில் பயன்படுத்தப்பட் டுள்ள சலவைக் கற்களும், பளிங்குக் கற்களும் இறையிய லோடு கூடிய ஒரு எழில் தோற்றத்தை அளிக்கின்றது.

வெஸ்ட்மின்ஸ்டர் கத்தீட்ரலில் முக்கியத்துவம் பெற்ற மிகச்சிறந்த பாடகர் குழு அமைந்துள்ளது.

கத்தீட்ரலின் தொடக்கத்தின்போது கார்டினலாக இருந்தவர்கள் பாடகர் குழுவுக்குச் சிறப்பான இடத் தினை அளித்ததாலும், பாடகர் குழுவின் முதல் தலைவரான ரிச்சர்ட் ரன்சிமேன் டெரி ஆகி யோரே இதற்குக் காரணமாவர்கள். இவ்வாலயத் தின் பாடகர் குழு ஹங்கேரி, ஜெர்மனி, அமெ ரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்று தன் திற மையை வெளிப் படுத்தியுள்ளது.

2006ஆம் ஆண்டில் நடைபெற்ற 'ஒஸ்லோ இன்டர்நேஷனல் சர்ச் மியூசிக் ஃபெஸ்டிவலில்' இரண்டு முறை பாடகர் குழு கலந்து கொண் டுள்ளது என்ப தும் குறிப்பிடத்தக்கதாகும்.

- ஜோஸப் லியோ மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்பின் ஊரணி!

''நாம் அனைத்தையும் தந்தையிடமிருந்தும், மகனிடமிருந்தும், தூய ஆவியிடமிருந்தும், அமல அன்னை மரியாவிடமிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டும் என கடவுள் முடிவு செய்து விட்டார். ஒவ்வொரு விண்ணக அருளும் இந்த ஒரே வழியாக மட்டும்தான் பொழியப்படுகிறது'' என்கிறார் புனித மாக்ஸிமிலியன் மேரி கோல்பே.

''உலகம் எங்கும் சாத்தான் வைக்கும் கண்ணிகளிலிருந்து அன்னை மரியாவின் வழியாகஅன்றி எந்த மனிதனும் காப்பாற்றப்பட முடியாது'' என்கிறார் புனித ஜெர்மானுஸ்.

''கடவுளின் அளவிட முடியாத ஆழமுள்ள இரக் கத்தை அன்னை மரியா யாருக்கு, எப்போது, எப்படி விரும்புகிறாரோ அப்போது திறந்து விடுகிறார். அன்னையின் பாதுகாப்பு கிடைத்தால் எந்த ஒரு மோசமான பாவியும் மனந்திரும்பாமல் போக முடியாது. எல்லா மனிதரும் எல்லாக் காலத்திலும் மீட்புப் பெறும் வழியாகவும் இடையீட்டாளராகவும் அன்னை மரியாவை நோக்கிப் பார்க்க வேண்டும்'' என்கிறார் புனித பெர்னார்து.

''மரியா என்ற வியத்தகு பெயர் இறைவனின் பொக்கிஷத்திலிருந்து வந்தது. இதன் வழியாகத்தான் மீட்பு நிறைவேற்றப்படுகிறது'' என் கிறார் புனித தமியான் பீட்டர்.

''மரியா தனக் காகவும் அனைத்து மானிடருக்காகவும் மீட்பை ஏற்படுத்துபவ ராகவும், மீட்பின் ஊரணி யாகவும் மாறி விட்டார்'' என்கிறார் புனித பிரான்சிஸ் சலேசி யார்.

''உலகிற்கு அமைதியும், விண்ணகத்திற்கு மகிமையும், மரித் தவருக்கு வாழ் வும் அழிந்து போகும் ஆன்மாக் களுக்கு மீட்பும் கடவுளின் நன்மைத் தனத்திலி ருந்து மரியா வலிந்து கைப்பற்றி வழங்க வேண் டும் என்பது இறைவனின் திருவுளம்'' என்கிறார் புனித பீட்டர் கிறிஸோலொகஸ்.

இயேசு மனித அவதாரம் எடுக்க அன்னை மரியாவை ஒரு புதிய உடன் படிக்கைப் பேழையாக கடவுள் படைத்தார். மரியாதான் மூவொரு கடவுளின் ஒரே மகிழ்ச்சி. கன்னி மரியா இயேசு வாழும் அரண்மனை. இயேசுவிடம் செல்ல விரும்புவோர் முதலில் அன்னை மரியா விடம் தஞ்சமடைய வேண்டும். ஞானத்தை ஞானத்தின் இருப்பிடத்தில் தான் தேட வேண்டும்.

இதைத்தான் அனைத்துப் புனிதர்களும் செய்தனர்.

அன்னையின் மாசற்ற இருதயம் ஒரு ஞானப் பல்கலைக்கழகம். அன்னையின் மாசற்ற இருதயத்தில்தான் இயேசுவும், சீடர் களும் பயின்றனர். இங்கு அன்பு, அடக்கம், தாழ்ச்சி, கீழ்ப்படி தல், கனிவு, தயவு, இரக்கம், பரிவு, பொறுமை, சகிப்புத் தன்மை, தன் மறுப்பு தியாகம், செபம் போன்ற பாடங்கள் பயின்று தந் தைக்கு ஏற்புடை யவரா கலாம். இயேசுவை யும் அன்னை மரியாவை யும் பிரித்துப் பார்க்க முடியாது. அவர்கள் இருவரும் என்றும் பிரியாதவர்கள். உங்களை திக்கற் றவராக விடமாட்டேன் என வாக் களித்த இயேசு தம் அன் னையை நமக் கும் அன்னை யாக அருளி னார்.

தந்தை யின் மக்கள் என உரி மைப்பேறு பெற்ற நமக்கு சகோதரனாக நற் கருணையில் நம்முடன் வாழ்கிறார்.

நற்கருணையில் உள்ள இயேசுவும், அன்னை மரியாவும் இணைபிரியாதவர்கள் என்பதை வலி யுறுத்த ஆலயங்களில் நற்கருணை பேழை அருகே அன்னை மரியாவின் திருஉருவம் திருநிலைப்படுத்தப் பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் புனித மாக்ஸ்லிமிலியன் மேரி கோல்பே.

அன்னையின் தாழ் பணிந்து அவர்தம் மகவின் ஆசியைப் பெறுவோமாக!

- அ.ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே மாத இதழுடன்....

ஆரோக்கியமாக வாழ வாசிக்க வேண்டிய சஞ்சிகை!

சுகவாழ்வு

5வது வருட நிறைவையொட்டி வாசகர்களுக்கு பரிசுகள்!!

வீரகேசரி கிளைக்காரியாலயங்களிலும் விற்பனை முகவர்களிடமும் கிடைக்கும்.

☛ மே மாத ஒவ்வொரு இதழுடனும்

உடற் பயிற்சியும் உங்கள் இதயமும்

என்ற 16 பக்கங்கள் அடங்கிய மருத்துவ நூல் இலவசம்.

☛ **சுகவாழ்வு** ஒரு வருட சந்தா ரூபா 600/= செலுத்தினால் **Medical Tourism** என்னும் மருத்துவ பொக்கிஷம் இலவசம்.

வீரகேசரி வெளியீடு விநியோகப்பிரிவு: 011 5322 781

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Home Builder
a complete guide for an outstanding house

Gardening & Landscaping

Interior Decorating



Construction & Architecture

& Many more interesting Topics to turn your house a home

Available at Cargills & Keells Supermarket

for more information please contact

Praveen - 077 4080038

A Home Improvement Companion **An Express Publication**

இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2012 ஆம் ஆண்டு மே மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org